ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 24 - 30 Mars 2004 06

பாரிஸ் நகரில்
தமிழ் மக்களின்
அறிவுக்களஞ்சியமாய்...
பூபாலசிங்கம் பொத்தகசாலை
22, Rue Perdonnet,
75010 Paris, France.
Tél: 01 40 05 95 15

# ரணிலை ஆட்சியில் அமர்த்த வெளிநாடுகள் நிதியுதவி

## – ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

## புலிகளை தனிமைப்படுத்தும் முயற்சிக்கு அமெரிக்கா சர்வதேச ரீதியில் தலைமை !



ஆவணப்படம்



ஆராரோ..!
'றோ' றோவோ!

(பேராசிரியர்
இ.சிவசண்முகம்
எழுதும் புதிய தொடர்)

## தமிழின விரோதிகளின் நோக்கத்தை நிறைவு செய்ய முயலும் கருணா !

## தென்றல், கண்களால் கைது செய், ஆட்டோ கிராப்

ஐ.நா.வை நோக்கி
## எழுங்குதமிழ்

05.04.2004, திங்கள் 14.00 மணி, Geneva-UNO

தமிழீழத் தனிஅரசை நோக்கி

**Orient Textilien & Schmuck**

**Koenigswall 16 (AM hbf),**
**44137 Dortmund-**
**Tel: 0231-162377**
**Fax:49-231-147836**

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.



உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

# கருணாவை சந்திக்க உலங்குவானூர்தியில் வந்து செல்பவர்கள் யார்?

(21.03.04)

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற குடும்பிமலைப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையினரின் உலங்குவானூர்தி ஒன்று கடந்த சில தினங்களாக தரையிறங்கிச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா விலக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரைச் சந்திப்பதற்காக சிறீலங்காப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக பல்வேறு தரப்புகளும் தினமும் சென்றுகொண்டிருக்கையில், கடந்த ஒரு சில தினங்களுக்குள் சிறீலங்கா விமானப் படையின் உலங்குவானூர்தி ஒன்று குடும்பிமலையில் தரையிறங்கிச் சென்றுள்ளது.

இந்த உலங்குவானூர்தி அங்கு தரையிறங்கியதை அப் பகுதி மக்கள் நேரில் பார்த்து உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனாலும், இந்த உலங்குவானூர்தி ஏன் வந்தது?, எதற்காக வந்தது?, இதில் வந்தவர்கள் யாரைச் சந்தித்தனர்? அல்லது யாரை ஏற்றிச் சென்றனர் என்பன பற்றிய விடயங்களை அவர்களால் தெரிவிக்க முடியவில்லை. ஆனாலும், கடந்த சில தினங்களாக தங்கள் பகுதிகளுக்கு, முன்னர் எப்போதும் தாங்கள் பார்க்காதவர்கள் வந்து செல்வதாகவும், வியாபாரிகள் போன்று தினமும் பலர் தங்கள் பகுதிகளுக்குள் வருவதாகவும் ஆனாலும், யார் அவர்கள் என்று எவரிடமும் தங்களால் கேட்க முடியாதிருப்பதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் புளொட் மோகனை கடந்த சில தினங்களுக்கு முன் கருணா சந்தித்துப் பேசியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது கருணாவுடன் இணைந்து செயற்படும் துரை என்பவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தினருடன் இணைந்து, நீண்ட தூர ஊடுருவல் படையணியாகச் செயற்பட்ட புளொட் மோகன் குழுவின் தலைவரான மோகனே கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருணாவைச் சந்தித்து நீண்ட நேரம் பேசியுள்ளதாகக் கூறப்படுகிறது. கருணாவுக்கும், புளொட் மோகனுக்கும் இடையிலான சந்திப்பு தற்போது கருணாவுடன் இணைந்து செயற்படும் போராளிகள் பலர் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# புளியங்குளத்தில் முதல்நாளே வாக்காளர் தடுத்து வைக்கப்படுவர்

(22.03.04)

வன்னி மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும், வாக்களிக்க தகுதியுள்ள மக்கள் அனைவரையும் வாக்களிப்புக்கு முதல் நாள் புளியங்குளத்திற்கு அழைத்துச் சென்று தங்க வைத்து, மறுநாள் வாக்களிக்க அழைத்து செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் வாக்களிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய வவுனியா அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருக்கும் வாக்களிக்கத் தகுதியுள்ள மக்கள் அனைவருக்கும் - போக்குவரத்து வசதி செய்யப்பட்டு, அனைவரும் வாக்களிக்க இயல்பு நிலை உருவாக்கப்பட்டு, முதல்நாள் ஏற்றிவரப்பட்டு புளியங்குளத்தில் தங்கவைக்கப்படுவர்.

இவ்வாறு இவர்களைத் தங்க வைப்பதற்கு தங்குமிட வசதி உட்பட சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும். முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வாக்களிக்கும் மக்களை ஏற்றிவர நூறு பேருந்துகள் தேவையாகவுள்ளது. அத்துடன் - வவுனியா பாலமோட்டையில் வசிக்கும் மக்களினை வாக்களிப்பதற்கு அழைத்துவர நான்கு பார வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களை, படையினரின் சோதனை நிலையத்திற்கு அருகில் அமைத்தால், இந்த மக்களின் பிரயாணத் தூரத்தைக் குறைக்க முடியுமென நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். வாக்களிக்கச் செல்லும் மக்கள் ஓமந்தையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உமாமகேஸ்வரன் சமாதியில் படையினர் தேடுதல்

(22.03.04)

வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள உமாமகேஸ்வரனின் சமாதி வளவில் நேற்று நண்பகல் சிறீலங்கா அதிரடிப் படையினர் கடுமையான தேடுதல் நடத்தினர். இந்த வளவில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்தப் பிரதேசம், கனரக வாகனத்தின் உதவியுடன் தோண்டப்பட்டதாகத் தெரியவருகிறது. புளொட் இயக்கத்தின் முன்னாள் செயலதிபர் உமாமகேஸ்வரனின் உடல் தகனம் செய்யப்பட்ட சமாதிக்கருகில், முக்கிய சில புளொட் உறுப்பினர்களின் சமாதிகளும் உள்ளன.


**வீடு வாடகைக்கு** (Noisy le grand)

3 Pieces
76m²
4eme etage - லிப்ட் வசதியுண்டு
வரவேற்பு அறை, மேலதிகமாக 2 அறை, தனியான மலசலகூடம், குளியலறை வசதியுடன்
புகையிரதநிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு மிக அருகாமையில்
வாடகை 780 ஈரோ

por 06 63 42 68 68



**சாயி துர்க்கா புகைப்படச் சேவை**

தரம், வேகம், மலிவு
இத்துடன் தரமான 'லெமனேசன் அல்பங்கள்' (இலவசம்) செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு
சுரேஸ் -06 17 51 17 58 / 01 53 26 06 89
T.M.S Video 33, Bd De La Chapelle - 75010 Paris



**கடை வாடகைக்கு** Paris 15

முற்பணம் 60,000 ஈரோ
Rue Convention
Paris 75015
வாடகை 880 ஈரோ

Tel: 01 45 31 40 75
06 63 42 68 68




TCN FILMS ஆதரவில் MUSIC INDIEN வழங்கும்
இரசிக பெருமக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு

**உதயா**

நடிகர்கள்
விஜய்
சிம்ரன்
நாசர்
தலைவாசல் விஜய்
சின்னிஜெயந்த்
மற்றும் பலர்....

N.Alagamperumal
இசை A.R.RAHMAN
Camara:Ravi K.Chandran



வெள்ளி 26.03.04 -20.15
சனி 27.03.04 -18.00 /21.00
ஞாயிறு 28.03.04 - 15.00 /18.00 /21.00
திங்கள் -29.03.04 - 18.00 /21.00

**Espace Cinema - Quatre chemin**

தொடர்புகளுக்கு:
Musie indien 06 64 15 89 62
Tcn Films 06 10 35 77 19
www-Tamilcine-Net



**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.



வோல்த்தம்ஸ் ரோவில் மூன்றாவது வருடத்துக்குள்
எட்ட நின்றாலும்
கிட்ட வந்தாலும்
அதே மாறா
அழகு தரும் நகைகள்
தங்க நகைகளுக்கான
தனியான ஓர் மாளிகை

**ATN Jewellery**

37, Palmerston Road, E17 6PR
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281



ATN Jewellery
வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்
Pub.Lon.

# ரணிலை ஆட்சியில் அமர்த்த வெளிநாடுகள் நிதியுதவி

## – ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(23.03.04)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியை வெற்றிபெறச் செய்வதற்கு பல வெளிநாட்டு அரசாங்கங்கள் முயற்சிப்பதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, தனது முக்கிய அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தகைய உதவிகளை வெளிநாட்டு அரசாங்கங்கள் வழங்குகின்றன.

இந்த உதவியை இலங்கையில் தேர்தலைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள பவ்ரல் மற்றும் அமெரிக்காவின் தேசிய தேர்தல் கண்காணிப்பாளர் குழு என்பவற்றினூடாகவே வழங்கப்படுகிறது. இதனை கனடா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்தே மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கருதுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் அமைப்புக்களுக்காக 85 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தோற்கடிப்பதற்கான ஒரு சதிமுயற்சியாகும்.

அவ்வாறானதொரு பெரிய தொகை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குச் செலவு செய்ததில்லை. ஆனால், இம்முறை அத்தகைய தொரு பெரிய தொகை தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை ஐக்கிய தேசிய முன்னணியை இத்தேர்தலில் வெற்றி கொள்ளச் செய்வதற்காக சில இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே எனவும் அவர் மேலும் தெரிவித்தார். எனினும், இந்தக் குற்றச்சாட்டினை தேர்தல் கண்காணிப்பாளர்கள் அமைப்பு முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளின் தலைவருடன் ஒப்பந்தம் செய்வதற்கு திட்டமிட்டிருந்தவேளை ஐக்கிய தேசிய கட்சி செய்த சூழ்ச்சியால் அதனை முன்னெடுத்துச்செல்ல முடியாமல் போனது என்றும் சந்திரிகா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்திருப்பதாவது, 2001 ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தவேளை நாட்டின் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவருடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என தீர்மானித்தேன். இந்நிலையில் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளியது.

ஐக்கிய தேசிய கட்சியின் இந்த நடவடிக்கையால் விடுதலைப் புலிகளின் தலைவருடன் ஒப்பந்தம் செய்யமுடியமாமற்போனது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆட்சியமைக்கும் எந்த அரசாங்கமும் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்கக் கூடாது இதற்கு நான் பூரண ஆதரவு வழங்குவேன். தற்போது சமாதானம் நிலவுவதாகக் கூறப்படுகிறது. இது ஒரு போர் நிறுத்தமே தவிர சமாதானம் அல்ல. போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி நாட்டில் சமாதானத்தினை கொண்டுவர தாம் தயாராக இருப்பதாகவும் சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

இதுஇவ்வாறிருக்க, தமிழ் இராணுவ உளவாளி ஒருவர் மூலம் கருணாவுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு சந்திரிகா முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது. ஜனாதிபதிக்கும், கருணாவுக்கும் இடையிலான இத்தூது முயற்சியில் ஈடுபட்டுள்ளவர் 'புளொட் மோகன்' என அழைக்கப்படும் சிறீலங்கா இராணுவத்தினருக்கு நெருக்கமான முன்னாள் புளொட் இயக்க உறுப்பினராவார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், கருணாவுக்குமிடையில் தொடர்புகளைப் பேணும் வகையில் புளொட் மோகன் சிறீலங்கா உலங்குவானூர்தியில் மட்டக்களப்பிற்கு சென்று வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், மட்டக்களப்பு சென்றிருந்த புளொட் மோகன், கருணாவின் முக்கிய சகாக்களுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளமை தமக்கு நம்பகமாகத் தெரியவந்துள்ளதாக கொழும்பு ஆங்கில செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# புலிகளை தனிமைப்படுத்தும் முயற்சிக்கு அமெரிக்கா சர்வதேச ரீதியில் தலைமை

## – ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க முன்னாள் பிரதித்துாதுவரும் சிறீலங்காவிற்கான முன்னாள் தூதுவருமான பீற்றர் பேர்லிக் தெரிவிப்பு

(23.03.04)

விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தும் முயற்சிக்கு அமெரிக்கா சர்வதேச ரீதியில் தலைமை தாங்குவதுடன் புலிகளுக்கு எதிரான முயற்சிகளை முனைப்புடன் ஆரம்பித்து வைத்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க முன்னாள் பிரதித்துாதுவரும் சிறீலங்காவிற்கான முன்னாள் தூதுவருமான பீற்றர் பேர்லிக் தெரிவித்துள்ளார். தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு என்ற தொனிப்பொருளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளைத் தனிமைப்படுத்தி ஓரங்கட்டுவதன் மூலமும் பலவீனப்படுத்துவதன் மூலமுமே தெற்காசியப் பிராந்தியத்தில் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்தி பயங்கரவாதத்தை ஒழிப்பதில் வெற்றிகாண முடியும். இந்த விடயத்தில் அமெரிக்கா பலமான நம்பிக்கை கொண்டுள்ளது. அதனாலேதான் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் புலிகளும் சேர்க்கப்பட்டார்கள். சட்டத்திற்கு முரணான வகையில் அமெரிக்கப் பிரஜைகள் புலிகளுக்கு நிதி மற்றும் ஏனைய வழிமுறைகளில் உதவி செய்வதை தடுக்கும் முயற்சியும் மும்முரமாக இடம்பெறுகின்றது. செப்டெம்பர் 11 தாக்குதலில் இருந்து அமெரிக்கா புலிகள் மீது ஒரு கண் வைத்திருக்கின்றமை வெளிப்படையானது. அமெரிக்காவின் தலையீடு காரணமாகவே புலிகளின் தலைமைப்பீடம் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண இணக்கம் கண்டது எனக் குறிப்பிட்ட பீற்றர் பேர்லிக், ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுக்க முடியும் என்றும் கூறினார்.

அவ்வாறு ஒன்று சேர தவறினால் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுவதுடன் புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகிச் செல்ல வாய்ப்பு ஏற்படும் என்றும் எடுத்துக்கூறினார். இதேவேளை அங்கு உரை நிகழ்த்திய அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச்செயலாளர் பேராசிரியர் வேல்டர் அன்ரசன் தெரிவிக்கையில், இலங்கையின் நீண்டகால யுத்தம் முடிவுக்கு வர அமெரிக்கா பேராதரவு வழங்கியது என்றார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சில சிரேஷ்ட அமைச்சர்கள் அமெரிக்கத் தலையீட்டை விரும்பியிருந்தார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# கருணா குழுவினரால் 'தமிழ் அலை' ஊழியர்கள் வீட்டுக்காவலில்

(23.03.2004)

மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் 'தமிழ் அலை' பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் கருணா குழுவினரால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு, கட்டாயப்பணியில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இருந்து வார இதழாக வெளிவர ஆரம்பித்த இவ்விதழ் பின்னர் நாளிதழாக பரிணாமம் பெற்றது. தற்போது கருணா குழுவினரால் இந்தப் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் கட்டாய வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு நாளாந்தம் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்ற அழைத்துச்செல்லப்படுகின்றனர். அத்துடன் தாங்கள் வழங்குகின்ற செய்திகளை மட்டுமே பிரசுரிக்குமாறு நிர்ப்பந்தித்துள்ள இவர்கள், அச் செய்திகளை இணையத்தளம் ஊடாகவும் வெளியிடுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் முக்கிய ஊழியர்களின் குடும்பங்களும் வீடுகளை விட்டு வெளியேறவிடாது தடுக்கப்பட்டுள்ளனர். இந்தப் பத்திரிகை நிறுவனத்தைச் சுற்றி இருபதுக்கும் மேற்பட்ட கருணா குழுவினர் ஆயுதங்களுடன் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மட்டக்களப்பில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கருணா குழுவினரால் நடத்தப்படும், பாடுமீன் என்ற இணையத்தளத்தில், தான் இணையவலையில் செய்திகளை பிரசுரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதை போராளி ஒருவர், மிகவும் வேதனையோடு அதே இணையத் தளத்தில் கடிதமாக வெளியிட்டிருந்தார். கருணா இல்லாத வேளையில், தனது உயிரையும் பொருட்படுத்தாது எழுதிய நீண்ட அக்கடிதத்தில், நிர்ப்பந்தம் காரணமாக தமிழீழ தேசியத் தலைமைக்கு எதிராக செய்திகளை வெளியிடவேண்டியிருந்தமைக்கு மன்னிப்பு கோரியிருந்த அப்போராளி, அக்கடிதம் தனது இறுதிக் கடிதமாகவும் இருக்கலாம் என அச்சம் தெரிவித்திருந்தார்.

அவ் இணையத்தளத்தில், இக்கடிதம் வெளியாகி சில மணிநேரத்திலேயே கருணா குழுவினர், இவ்வாறான ஒரு கடிதம் நாசகாரத்தனமாக தமது இணையத்தளத்தில் வெளியாகிவிட்டதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# செய்தித் துளிகள்

✪ யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த 20ம் திகதி இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் அம்பாறையைச் சேர்ந்த 21 அகவையுடைய கந்தசாமி சரவணன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டாம் வருட மாணவரான இவர், திடீரென தலைச் சுற்று ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக சக மாணவர்கள் இவரை யாழ் போதானா மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அவசரசிகிச்சை பிரிவில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலன்அளிக்காத நிலையில் அவர் அங்கு உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

✪ மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் தினக்குரல், சுடரொளி, வீரகேசரிப் பத்திரிகைகளின் விநியோகத்திற்கு கருணா குழுவினரால் முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் இப்பத்திரிகைகளை விநியோகிப்பவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் தினக்குரல் பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டு தீயிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

✪ நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை கடந்த புதனன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். கொழும்பிலிருந்து இலண்டனை வந்தடைந்த இவர், அங்கு பாலசிங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பில் கருணா விவகாரம், இலங்கையின் தேர்தல், போர் நிறுத்த நடைமுறைகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. இதேவேளை, சிறீலங்கா ஜனாதிபதியையும் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

✪ யாழ்ப்பாணத்தில் கவச வாகனப் பயிற்சி நடவடிக்கை ஒன்றினை சிறீலங்காப் படையினர் நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ். கிளாலிப் பகுதியிலேயே இப்பயிற்சி நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. சிறீலங்காப் படையினரின் 55வது பிரிவின் கட்டளையதிகாரி வீ.ஆர்.டி.சில்வா என்பவரின் தலைமையின் கீழ் இப்பயிற்சி நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளின் போது கவச வாகனங்கள் செல்வதற்கான உடனடி பாலங்களை வெளித்தள்ளும் கவச வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பல பயிற்சிபெற்ற படைத்துறை மாணவர்களும் கலந்துகொண்டு கவச வாகனங்களை இயக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

✪ விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் கடந்த வியாழக்கிழமை சுகவீனம் காரணமாக சாவடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொக்குவில் மேற்கைச் சொந்த இடமாகவும், கிளிநொச்சி அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட மேஜர் மோகன் (அருள்ராஜா றெஜிக்குமார்) என்ற போராளியே சாவடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

✪ ஜனாதிபதி சந்திரிகாவால் பொறுப்பேற்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்தற்ற 13 அமைச்சுகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் கலைக்கப்பட்டுள்ளன. இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. கலைக்கப்பட்ட அமைச்சரவை, அந்தஸ்துள்ள அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது. காபந்து அரசாங்கத்தின் நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும் நோக்குடனேயே அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுகளின் எண்ணிக்கை 27 இலிருந்து 14 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

✪ கருணாவின் நடவடிக்கைகளை அடுத்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்திருக்கிறது. ஈ.பி.டி.பியின் சுவரொட்டிகள் மட்டு - அம்பாறைப் பகுதிகள் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. குருமண்வெளி, மண்டூர் உட்பட பல கிராமங்களிலும் ஈ.பி.டி.பியினர் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.

✪ நிந்தவூர் அல்லிமுல்லைச் சந்தியில் சனிக்கிழமை காலை வாகனமொன்றில் ஆயுதங்களுடன் சென்ற சிலரை சிறீலங்காவின் விசேட அதிரடிப் படையினர் கைது செய்ததுடன் அவர்கள் வசமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர்களான, கொழும்பு துறைமுகத்தில் கடமையாற்றும் வியாங்கொடை, மாத்தறை, பாணந்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். முன்னாள் கடற்படையினரான இவர்கள், ஏதோ நோக்கிலேயே ஆயுதங்களுடன் சென்றுள்ளதாக சம்மாந்துறைப் பொலிசார் தெரிவித்தனர்.

# கருணா எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றார் !
## — சந்திரிகா தெரிவிப்பு

(21.03.04)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள கருணா என்றழைக்கப்படும் முரளிதரன் தம்முடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ததாக சிறீலங்கா ஜனாதிபதி சந்தி



ரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். பல தடவைகள் தம்முடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு கருணா முயற்சி செய்ததாகத் தெரிவித்துள்ள சந்திரிகா, இத்தகைய இரகசியத் தொடர்புகள் எதனையும் மேற்கொள்ளும் திட்டம் தமக்குக் கிடையாது என்று கூறியுள்ளார்.

இரகசியமான முறையில் யாருடனும் தொடர்புகளையோ, பேச்சுவார்த்தைகளையோ நடாத்தும் எண்ணம் தமக்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ள சந்திரிகா, கருணாவுடன் எத்தகைய தொடர்புகளை ஏற்படுத்துவது என்பது தொடர்பாகவும், என்ன அடிப்படையில் அவருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவது என்பது தொடர்பாகவும் பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையுடன் பல்வேறு விதமான தொடர்புகள் தமக்குக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள இவர், இந்தத் தொடர்புகள் பற்றிய விபரங்கள் எதனையும் இப்போது வெளியிட முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, சந்திரிகாவின் கீழ் இயங்கும் சிறீலங்கா படையினரின் தலைமைகள் கருணாவுடன் தொடர்புகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதேசவாதத்தை தூண்டும் தனது நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பினை உருவாக்கி அது விஸ்வரூபம் எடுத்துவரும் நிலையில், தனது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள, கருணா இராணுவத்துடன் இணைந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இலங்கை நிலைவரங்கள் குறித்து ஹெல்கீசன் புதுடில்லியில் ஆராய்வு

(21.03.04)

இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நோர்வே வெளியுறவு பிரதி அமைச்சர் விதார் ஹெல்கீசன் இந்திய சிரேஷ்ட அதிகாரிகளுடன் கடந்த செவ்வாயன்று நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இலங்கை நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள், கருணா விவகாரம் குறித்தும் இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேயின் இரு சிரேஷ்ட இராஜதந்திரிகள் சகிதம் புதுடில்லிக்கான விஜயத்தை ஹெல்கீசன் மேற்கொண்டிருக்கிறார். நோர்வேயின் தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட இந்திய அதிகாரிகள் தரப்புக்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் சாங்க் தலைமை தாங்கினார் என்றும், இருதரப்பு விவகாரங்கள் மற்றும் பரஸ்பர அக்கறைக்குரிய சமகாலப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன என்றும் புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருதரப்பு உறவுகளை மேற்பார்வை செய்வதற்கு அமைச்சுகள் மட்டத்திலான கூட்டு ஆணைக் குழுவொன்றை அமைப்பது தொடர்பிலும், இரு தரப்பினரும் ஆராய்ந்தனர். எதிர்காலத்தில் அடுத்த சுற்றுப் பேச்சுகளை புதுடில்லியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றில் இருந்து ஆட்டிலெறி எறிகணைகள் உட்பட வெடிபொருட்கள் மீட்பு

(21.03.04)

வவுனியா ஓமந்தை பகுதியில் இராணுவத்தால் கைவிட்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருட்களை கிணறு ஒன்றினுள் இருந்து ஆட்டிலெறி எறிகணைகள் உட்பட பல வெடிபொருட்களினை F.S.D நிறுவனம் மீட்டுவருகின்றது.

கிணறு ஒன்றினுள் வெடிபொருட்கள் இருப்பதாக மக்கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்த வெடிபொருட்களினை அகற்றி வருகிறது. கிணற்றில் இருந்து 120 மி.மீட்டர் ஆட்டிலெறி எறிகணைகள் 18, 60 மி.மீட்டர் எறிகணைகள் 01, கைக்குண்டு 01, மோட்டார் குண்டின் புரப்புலர்கள் 28, 120 எறிகணையின் புரப்புலர்கள் 07, பியூஸ்கள் 26, என்பனவும் மீட்கப்பட்டுள்ளன மேலும் பல வெடிபொருட்கள் இருப்பதாகவும் அவை தொடர்ந்து மீட்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.









விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

# தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை மீண்டும் அடைவதற்கு ஐ.நா.வின் முன்னெடுப்புக்கள் அவசியம்

**- ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில், தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸ் கிளையின் பொதுச்செயலர் தெரிவிப்பு -**

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை மீண்டும் அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்புக்கள் அவசியம் என தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸ் கிளையின் பொதுச்செயலாளர் தெரிவித்தார். ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 60வது மனித உரிமை ஆணைக்குழுவில், 'சர்வதேச சர்வ-நம்பிக்கை' என்ற அமைப்பின் சார்பாக சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் திரு ச.வி.கிருபாகரன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது, 'அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த திரு. டபிள்யூ. வில்சன் அவர்கள் முதன் முதலாக 1918ம் ஆண்டு 'சுயநிர்ணய உரிமை' என்ற சொற்பதத்தை அமெரிக்க காங்கிரசில் ஆற்றிய உரைகளில் பாவித்தார். திரு.வில்சன் கூறியதாவது, 'சுயநிர்ணய உரிமை என்பது வெறும் பேச்சல்ல, இது ஓர் நடைமுறைக்கான அடிப்படைத் தத்துவம். இதை முன்னெடுத்துச் செல்லாது அலட்சியம் செய்யும் நாடுகள் ஆபத்தையே நோக்குவார்கள்'

சுயநிர்ணய உரிமை என்ற விடயம் சட்டரீதியாக மனித உரிமைகளுடன் நெருக்கமாக பின்னிப் பிணைந்திருந்தாலும் இன்றய காலகட்டத்தில் இது ஓர் அரசியல் பிரச்சினையாகவே நோக்கப்படுகிறது.

உலகில் சுயநிர்ணய உரிமைக்கு தகுதி வாய்ந்த மக்கள், தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை நடத்தும் பொழுது அவை யாவும் ஆயுதபலத்தால் கொடூரமான முறையில் நசுக்கப்படுகிறது. சுயநிர்ணய உரிமையின் கடுமையான நியாயவாதியாக இருந்த அமெரிக்க ஜனாதிபதி அவ்வேளையில் கூறியதாவது, 'உலகில் ஜனநாயகம் காப்பாற்றப் படவேண்டும். ஆகையால் சமாதானம் என்பது அரசியல் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே காணப்படுகிறது. சுயநிர்ணய உரிமை மிகவும் தெளிவாக ஐக்கிய நாடுகள் சபையின் சட்டங்கள், சாசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை நாம் இவ் ஆணைக்குழுவில் நீண்டகாலமாக கேட்டுவருகிறோம். இவையாவும் தமிழ்மக்கள் தமது நியாயமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்ததிற்கு எதிராக சிறீலங்கா அரசின் கொடூரமான போக்கே காரணம். சர்வதேச சட்டங்களின் பிரகாரம் சுயநிர்ணய உரிமை என்பது மக்களுக்கு உரியது. தனிப்பட்ட குழுவிற்கோ அல்லது நபருக்கோ உரியதல்ல.

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் ஓர் நீண்ட சரித்திரத்தை, கலாச்சாரத்தை, தமக்கான ஒரு மொழியை, அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட ஓர் தாயக பூமியைக் கொண்டவர்கள். ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து (1948) அரசியல் சாசனத்திலிருந்த பாதுகாப்புக்களையும் இழந்து, 'தமிழர்' என்ற அடையாளத்தையும் இழக்கத் தொடங்கியுள்ளனர்.

சிறீலங்காவின் 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம், சிங்கள-தமிழ் அரசியல் தலைவர்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட இரு ஒப்பந்தங்கள் (1957, 1965) கைச்சாத்திட்ட சிங்கள பிரதமர்களாலேயே கிழித்தெறியப்பட்டன. 1972ம் ஆண்டு கல்வி தரப்படுத்தல், அத்துடன் நடைபெற்ற பல இனக் கலவரங்கள் யாவும் அவ்வேளையில் தமிழ் மக்கள் சாத்வீகமான முறையிலேயே எதிர்த்து போராடினார்கள். ஓர் புத்திஜீவியின் அறிக்கையின்படி, தமிழர்களின் தாயக பூமியில் 50 வீதமான பிரதேசங்கள் சிறீலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு சிங்களவர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுடைய முப்பது வருடகால சாத்வீகப் போராட்டங்கள் சிறீலங்காவின் அரச படைகளினால் வன்முறை மூலம் நசுக்கப்பட்டது. தமிழர்களுடைய சாத்வீகப் போராட்டங்கள் எந்தவிதத்திலும் பயனற்றுப்போன வேளையில், தமிழ் மக்கள் தங்களை தாங்களே பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இது தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கும், ஆயுதப் போராட்டத்திற்குமான உணர்வுகளை தமிழ் மக்களுக்கு கொடுத்தன.

கடந்த இருபது வருடகாலமாக சிறு சிறு இடைநிறுத்தங்களுடன் இரத்தக்களரிகளுடன் யுத்தம் நடைபெற்றது.

கைது, சித்திரவதை, பாலியல்வல்லுறவு, கொலை, இடப்பெயர்வுகள், வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் போன்றவை தமிழ்மக்களின் சோக வாழ்வாகியது எனத் தெரிவித்த ச.வி.கிருபாகரன் மேலும் கூறியதாவது, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மூன்றில் இரண்டு பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம் நடைபெறுகிறது.

> **சிறீலங்காவில் இது ஓர் கவலைக்குரிய விடயம். ஒவ்வொரு வேளையிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வு கிட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படும்பொழுது, ஆட்சிசெலுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் முரண்பட்டு குழப்பிவிடுவார்கள்.**

நோர்வே அரசின் முன்னெடுப்புக்களினால், 2002ம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பொழுதும், இவற்றில் இணக்கம் கண்டவற்றை சிறீலங்கா அரசு நடைமுறைப்படுத்தத் தவறிய காரணத்தால், தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் தற்காலிகமாக பேச்சுவார்த்தைகளிலிருந்து இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் முதலாம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தனர். இத் தீர்வுத் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் வேறு பல நாடுகளும் வரவேற்றிருந்தனர்.

ஆனால் நவம்பர் நாலாம் திகதி சிறீலங்காவின் ஜனாதிபதி, மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை தன்வசம் எடுத்துக் கொண்டதிலிருந்து அரசியல் சர்ச்சரவுகள் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட ஆரம்பித்தது. இறுதியில் நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம், ஆட்சியில் உள்ளவர்களினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

சிறீலங்காவில் இது ஓர் கவலைக்குரிய விடயம். ஒவ்வொரு வேளையிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வு கிட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படும்பொழுது, ஆட்சிசெலுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் முரண்பட்டு குழப்பிவிடுவார்கள். இதனை சர்வதேச சமூகம் அமைதியாக கவனித்துக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு.கோபி அனான், இவ் ஆணைக்குழுவின் 55வது கூட்டத்தொடரில் (1999) பேசும்பொழுது கூறியதாவது, 'இவ் ஐ.நா. சபை அரசாங்கங்களின் அங்கத்துவத்தை கொண்டபொழுதும், மக்களைப் பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. நான் இப்பதவியில் இருக்கும் வரை மக்களுக்கே எமது செயற்பாடுகளில் முக்கியத்துவம் கொடுப்பேன். நாட்டின் ஒருமைப்பாடு என்ற பெயரில் மக்களின் அடிப்படை சுதந்திரங்களை எந்த அரசாங்கங்களும் மீற முடியாது. ஒருவர் பெரும்பான்மையாக இருந்தால் என்ன, சிறுபான்மையாக இருந்தால் என்ன அவருடைய அடிப்படை சுதந்திரமும் மனித உரிமைகளும் என்றும் பாதுகாக்கப்படும்.' என்றார்.

தலைவர் அவர்களே, எத்தனையோ இனப்பிரச்சனைகள் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னேற்பாடுகளினால் தீர்க்கப்பட்டுள்ளது. இவ் ஆணைக்குழு இவ் விடயங்களில் பெரும் பங்கும் வகித்துள்ளது. இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை மீண்டும் அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்புக்கள் அவசியம் எனக் கூறவிரும்புகிறேன். இவ்வாறு தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# தமிழ் மக்கள் அளிக்கப்போகும் வாக்குகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை !

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் பத்துநாட்களே இருக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணியா சுதந்திர ஐக்கிய முன்னணியா ஆட்சியமைக்கப் போகிறதென்பதை எதிர்வுகூற முடியாதபடி தென்னிலங்கை மக்கள் ஆர்வம் குறைந்தவர்களாகவும், குழம்பிப்போனவர்களாகவும் காணப்படுகின்றனர். அநேகமாக எந்தக்கட்சிக்கும் இறுதிப்பெரும்பான்மையற்ற நிலையில் ஓர் தொங்கு நாடாளுமன்றமே அமையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழர் தேசிய கூட்டமைப்பின் ஆதரவின்றி எந்தவொரு கட்சியும் ஆட்பீடமேற முடியாத நிலமை ஏற்படும்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டமைப்பு ஆட்சிப்பீடமேறினால் சமாதான முன்னெடுப்புகள் குழப்பமுறும் என்பது எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்ற - எதிர்வுகூறப்படுகின்ற ஒன்றாகும். ஐ.தே.முன்னணியே மீண்டும் ஆட்சியைக்கைப்பற்றினாலும் நின்றுபோயுள்ள சமாதான முன்னெடுப்பைத் தொடர முடியாதபடி பழைய அதிகார இழுபறிகளே தொடரும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அதாவது அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை - இன்னொரு விதமாகக் கூறுவதெனில், சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கும் வரை சிக்கல்கள் தொடரவே செய்யும்.

இவை இவ்வாறிருக்க - தமிழ்மக்களுக்கு இந்தத்தேர்தல் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவே அமையப்போகிறது. 1977ற்குப் பின்னல் தமிழ்மக்கள் ஒருமித்து ஓரே குரலில் உலகிற்கு ஒரு செய்தியைக் கூறும் தேர்தல் இது. 1977இலும் இவ்வாறு தான் தமிழ் மக்கள் ஒருமித்து ஒரே நோக்கத்திற்காக வாக்களித்தனர். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. இம்முறை என்ன நடந்து விடப்போகிறது என தமிழ் மக்கள் குழப்பமுற மாட்டார்கள். ஏனெனில் வரலாற்றின் பாதையில் பல துன்பச்சுமைகளுடன் விழுந்தும் எழுந்தும் நடந்து வருகின்றவர்கள் தமிழ்மக்கள். வரலாற்றின் முக்கியமான திருப்பு முனையில் அவர்கள் நிற்கிறார்கள். ஒரு வரலாற்றுக் கடமையாகவே இம்முறை தமிழ்மக்களின் வாக்குகள் பதிவுறப்போகின்றன.

வரலாற்றுப் பாதையிலிருந்து விலகி வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு பல கேள்விகள் எழலாம். தமிழ்மக்களின் வாக்களிப்பை விடுதலைப் புலிகள் இம்முறை ஊக்குவிக்கின்றனர். கொள்கைரீதியாக ஒருங்கமைக்கப்பட்டுள்ள தமிழர் கூட்டமைப்பை அவர்கள் ஆதரிக்கின்றனர். தேர்தல்களில் நம்பிக்கையிழந்து ஆயுதப்போராட்டத்தை வரித்துக்கொண்ட புலிகள் இம்முறை இந்தத் தேர்தலை ஏன் ஆதரிக்கிறார்கள் என்கிற கேள்விகள் அவர்களுக்கு எழலாம்.

குறைந்தது இருபது வருடகாலம் - வீரமும், தியாகமும், குருதியும் இழப்புமாகப் போராடிவந்த புலிகள் தலைமையிலான ஆயுதப்போராட்டத்தின் ஒரு பரிணாமம் அல்லது பரிமாணம்தான் இந்தத்தேர்தலுக்கான முகங்கொடுப்பு. புலிகள் நாடத்திய கடுமையானதொரு போரின் விளைவாகவே இதனைப் பார்க்கவேண்டும்.

புலிகளினால் முகங்கொள்ளப்பட்ட போர் காலப்போக்கில் எதிரியினால் முகங்கொள்ள முடியாமல் போனதுதான் வரலாறு. வெல்ல முடியாத அல்லது தோற்கடிக்க முடியாத ஒரு கட்டத்திலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. ஒரு படைப்பலத்தை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைக்குப் போனதும், தேர்தலொன்றுக்கு முகங்கொடுப்பதும் வரலாற்றில் இதுதான் முதற்தடவை. இம்முறை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்பதற்காகவோ அரசாங்கத்திடமிருந்து சில சலுகைகளை தமிழ்மக்களுக்குப் பெற்றுத்தருவதற்காகவோ அல்ல. தமிழ்மக்கள் இடும் வாக்குகள் உலகத்திற்கு காட்டப்படும் ஒரு புள்ளிவிபரம். ஏற்கனவே பொங்கு தமிழர்களாக உலகிற்கு தங்கள் உணர்வுப்பெருக்கை வெளிக்காட்டிய தமிழர்கள், விஞ்ஞான பூர்வமான ஒரு வெளிப்பாடாக ஒரு கருத்துக் கணிப்பை வெளியிடப் போகின்றனர்.

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் யார் என்பதையும், அரசாங்கமோ, சர்வதேசமோ யாரிடம் பேச வேண்டுமென்பதையும், பேச்சுக்களில் என்ன தீர்வு வைக்கப்பட வேண்டுமென்பதையும், தீர்வு கிடைக்காவிட்டால் அடுத்த கட்டத்தை தீர்மானிக்கப் போகிறவர்கள் யார் என்பதையும் விடுதலைப் போராட்டத்தின் முக்கியமானவொரு தடுப்பு முனையில் நின்று - போராட்டப்பாதையின் முக்கியமானதொரு மைல்கல்லில் நின்று தமிழ்மக்கள் ஓரே குரலில் பிரகடனம் செய்யப்போகின்றனர்.

இதனை மிக ஆழமாக சிங்களப் பேரினவாதிகளே புரிந்துகொண்டுள்ளனர். புலிகளின் ஓர் போர்தொகுப்பிற்கு இணையாகவே இவர்கள் இதனைப்பார்த்து அச்சமுறுகின்றனர். இதனால்தான் தமிழ்மக்களின் வாக்களிப்பு விடயத்தில் பல தடைகளைப் போட கங்கணம் கட்டி நிற்கின்றனர். புலிகள் ஓயாத அலையாக, சிங்கள இராணுவத்தின் இரும்புத் தடைகளைத் தகர்த்துக்கொண்டு யாழ் மண்ணை விடுவிக்க முன்னேறிய போது இந்தியா அதனைத்தடுத்தது. அதே தீவிரத்துடன் சனாதிபதி சந்திரிகா, தேர்தல் நடாத்தினால் புலிகள் பலமடைவர் என இன்று எச்சரிக்கையும் வழங்கியுள்ளது. புலிகளின் படைபலத்தோடு அரசியல்பலமும் இணைய தமிழ் மக்களின் ஓட்டுமொத்தமான தெரிவாக விடுதலைப்புலிகள் உலகின் முன் நிறுத்தப்படுவதை மற்றுமொரு போர்வியூகமாகவே அந்நிய சக்திகளும் நோக்குகின்றன. இக்காரணங்களினாலேயே இலங்கையின் 13வது நாடாளுமன்றத்தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிப்பதானது ஓர் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இப்படியான இன்றியமையாதவொரு காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை முன்னாள் தளபதி கருணாவினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நெருக்கடிநிலை தமிழரின் ஒற்றுமைக் குரலைப்பாதிக்கும் என சிலர் எண்ணுகின்றனர். பேரினவாத சக்திகளும் அந்நிய ஆதிக்க சக்திகளும் இந்நிலை குறித்து மகிழ்ச்சியிலாழ்ந்துள்ளன. ஆனால், நிலமை வேறுவிதமாக மாறியுள்ளதை இப்போது அவதானிக்கமுடிகிறது.

> *தமிழ்மக்களின் வாக்களிப்பை விடுதலைப் புலிகள் இம்முறை ஊக்குவிக்கின்றனர். கொள்கைரீதியாக ஒருங்கமைக்கப்பட்டுள்ள தமிழர் கூட்டமைப்பை அவர்கள் ஆதரிக்கின்றனர். தேர்தல்களில் நம்பிக்கையிழந்து ஆயுதப்போராட்டத்தை வரித்துக்கொண்ட புலிகள் இம்முறை இந்தத் தேர்தலை ஏன் ஆதரிக்கிறார்கள் என்கிற கேள்விகள் அவர்களுக்கு எழலாம்.*

உறங்கு நிலையில் காணப்பட்ட சில தமிழ்மக்கள் கூட கருணாவின் நெருக்கடி மூலம் விழித்துக்கொண்டுள்ளனர். பிரதேச வாதத்தை உடைத்தெறிந்து தமிழரின் தேசியத் தலைமையின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்கிற உத்வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றதை இன்று அவதானிக்க முடிகின்றது. உலகிற்கும் சிங்களப்பேரின வாதத்திற்கும் தமிழ்மக்கள் ஓரே அணியில் ஒற்றுமைப்பட்டு நிற்கிறார்கள் என்பதனை காட்ட வேண்டிய நிலையில் இன்னொரு கடமையும் இப்போது வந்துள்ளது. அதுதான் பிரதேச வாதம் எனும் கொடிய யூதத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டிய கடமைப்பாடு. எனவே தமிழ்மக்களின் ஒற்றுமை இப்போது இரட்டிப்பு நோக்கத்திற்காக மேலும் பலமடைய வேண்டிய தேவை உள்ளது.

எதிர்வரும் ஏப்பிரல் இரண்டாம் திகதிக்குப் பின் இலங்கை அரசியலில் இலங்கை வாழ் சிங்களவர்களின் வாழ்வியலில் - எவ்விதமான விமோசனத்தையும் சிங்களத் தேசத்தின் தேர்தல் முடிவுகள் கொண்டு வரப்போவதில்லை.

தமிழர் தாயகத்தின் விடுதலைப்போராட்ட வளர்ச்சியில் முக்கியமான மாற்றம் நிகழும் என்பது மட்டும் உண்மை.

*- வன்னியிலிருந்து விவேக்*

# அமெரிக்கா அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கான புகலிடம் அது தனிமைப்படுத்தப்பட ஜனநாயக நாடுகள் இடமளிக்காது

## - கதிர்காமர் கூறுகின்றார்

(21.03.04)

ஜனநாயக நாடுகள் அமெரிக்க அரசாங்கத்துடனும் அமெரிக்க மக்களுடனும் என்றும் நட்புறவைப் பேண வேண்டுமென்றும், அமெரிக்கா தனது பெரும்பலத்தை நியாயமற்ற பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வழிகளில் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு, அவ்வல்லரசு ஏனைய நாடுகளிடமிருந்து தனிமைப்படுத் தப்பட்டுள்ளதாக உணர அனுமதிக்கக் கூடாதென்றும் சந்திரிகாவின் ஆலோசகரும் ஊடக தொலைத் தொடர்பு அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையம், அமெரிக்க இலங்கை புல்பிறைற் ஆணைக் குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'தெற்காசியாவில் அமெரிக்காவின் பங்களிப்பு' என்ற தலைப்பிலான இரு நாள் கருத்தரங்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியபோது வரவேற்புரை நிகழ்த்துகையில் கதிர்காமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கதிர்காமர் மேலும் குறிப்பிட்டதாவது, அமெரிக்காவிற்கு உலகம் முழுவதும் எண்ணிலடங்காத நண்பர்கள் இருக்கின்றனர். அமெரிக்க மக்களுடனான எமது தொடர்புகள் என்றும் நட்புறவானவையாக இருந்து வருவதை தென்னாசிய மக்களாகிய நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அமெரிக்க மக்களுக்கோ அவர்களது அரசாங்கங்களுக்கோ, எமக்கெதிரான எந்த காலனித்துவ நோக்கங்களும் கிடையாது. சுதந்திரத்திற்கான எமது சொந்த முயற்சிகளுக்கு அவர்கள் குறுக்கே நின்றதில்லை. தமக்காக அவர்கள் கட்டியெழுப்பிய சமூகம் உலகெங்கிலுமுள்ள ஏனயோரைக் கவரும் காந்தம் போன்றது. அமெரிக்கா அதனது வரலாறு முழுவதும் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கான புகலிடமாக இருந்து வருகிறது.

எதிர்பார்ப்பினதும் வாய்ப்புக்களதும் நாடாக இருந்து வரும் அமெரிக்காவினது தாராள தன்மையை நாம் மறக்கக் கூடாது. அமெரிக்கா தொடர்ந்தும் உறுதியான நம்பிக்கைக்குரிய ஜனநாயகக் கொள்கைகளை முன்னெடுப்பதில் வெற்றிபெற்ற நாடாக தொடர்ந்து இருப்பதையே அதன் நண்பர்கள் விரும்புவார்கள். இதனால் தான் ஈராக்கில் இடம்பெற்று வரும் நிகழ்வுகளால் நீதியான அமெரிக்கா என்ற பிரதிமை பாதிக்கப்பட்டு வருகிறதென பலர் குழப்பமடைந்துள்ளனர்.

ஆனால், அந்த விடயங்களால் பாதிப்படையாது, அமெரிக்க அரசாங்கங்களையும் மக்களையும் தனிமைப்பட அனுமதிக்காது உலகின் ஜனநாயக நாடுகள் அவர்களுடன் தொடர்ந்தும் நட்புறவைப் பேண வேண்டும். தெற்காசியாவில், அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு, ஒத்துழைப்பின் புதிய பகுதியொன்றுக்குள் நுழைந்துள்ளது. அமெரிக்காவுடன் அனைத்து மட்டத்திலும் தொடர்புகளைப் பேணுவதற்கு இது அத்தியாவசியமானதாகும்.

அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான போரில் அந்நாடு தொடர்ந்தும் முன்னேறுவதற்கு ஜனநாயக சமூகம் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இல்லாதுவிடின் ஒவ்வொரு ஜனநாயக நாடும் பிளவுபடக் கூடிய ஆபத்து இருக்கிறது. செப்டெம்பர் 11ன் தாக்கம் அமெரிக்க மக்களது மனதில் இன்றும் நீங்காதிருப்பதை நாம் மறக்கக் கூடாது. தெற்காசியாவில் எமது நாளாந்த வாழ்க்கையை பாதிக்கும் வகையை ஒத்த அந்த பயங்கரவாதத்தை அமெரிக்கர்கள் தமது நாட்டில் இதற்கு முன்னர் என்றும் முகம் கொடுத்ததில்லை. அவர்களுக்கு புதிய அனுபவமாக விருந்த அந்த செப்டெம்பர் 11 தாக்குதல், உலகம் தொடர்பான அவர்களது பார்வையை மாற்றியதுடன், முன்னெப்போதும் அனுபவித்திராத பாதுகாப்பற்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தியது. அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை நோக்கங்களை மதிப்பிடும் போது, செப்டெம்பர் 11 இன் பின்னர் அமெரிக்கா ஆழமாக காயம்பட்ட ஒரு சமூகமாக இருக்கிறதென்பதை நாம் மனதிலிருத்த வேண்டியது அவசியமாகும்.

# கொழும்பில் இந்தியப் படையினருக்கு நினைவுத் தூபி

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் உயிரிழந்த இந்தியப் படையினரின் நினைவாக கொழும்பு பொதுநூலக முன்றிலில் நினைவுத் தூபியொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல கொழும்பு மாநகர முதல்வருக்கு கடிதமூலம் அறிவுறுத்தியுள்ளார். இலங்கையில் அமைதிகாக்கவென வந்த இந்தியப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற சண்டைகளில் 1155 இந்தியப் படையினர் உயிரிழந்தனர்.

இப்படையினரின் நினைவாகவே, கொழும்பு பொது நூலகத்தில் அமைந்துள்ள இரண்டாம் உலகப்போரின் போது உயிரிழந்த சிறீலங்காப் படையினரின் ஞாபகார்த்த தூபிக்கு அருகில், புதிய நினைவுத்தூபி கட்டப்படவுள்ளது.

இதேவேளை, இதுகுறித்து கருத்து தெரிவித்த இராணுவத் தளபதி பலகல்ல, தான் சென்ற வருடம் இந்தியாவிற்கு சென்றிருந்த வேளை இந்திய இராணுவத் தளபதியைச் சந்தித்தபோது இந்நினைவுத் தூபி அமைப்பது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாகவும் இது குறித்து இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசுடனும் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இலங்கையில் 32 மாதகாலம் இந்தியப் படையினர் சேவை புரிந்துள்ளதாகவும், இக்காலப் பகுதியில் உயிரிழந்த 1155 படையினரினதும் பெயர்கள் எழுதப்பட்ட வகையில் புதிய நினைவுத் தூபி அமையும் எனவும் பலகல்ல தெரிவித்தார். மேலும், தனது இந்தத் திட்டத்திற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரும் பூரண ஒத்துழைப்பு வழங்க சம்மதித்திருப்பதாகவும் பலகல்ல மேலும் தெரிவித்தார்.

இந்தியப் படையினர் தமிழர் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த காலத்தில், பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், ஏராளமானவர்களை அங்கவீனர்களாகியும், பெண்கள் பலரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுத்தியும், தமிழ் மக்களின் சொத்துக்களை நாசமாக்கியதும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கருணா சிறிலங்கா இராணுவத்திடம் உதவி கோரிக்கை

(21.03.04)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்குள் விடுதலைப் புலிகள் வடக்கில் இருந்து மேற்கொள்ளக் கூடிய ஊடுருவலை தடுப்பதற்கு சிறீலங்கா இராணுவத்தினரின் உதவியை நாடியதாகவும், இராணுவத் தலைமையிடம் கருணா உத்தியோகப் பற்றற்ற முறையில் விடுத்த வேண்டுகோளை பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நிராகரித்து விட்டதாகவும் சிறீலங்கா பாதுகாப்புத்துறை உயர்மட்ட அதிகாரியொருவர் கடந்த புதன்கிழமை தினக்குரலுக்கு தெரிவித்துள்ளார்.

கருணா, தனக்கும் தன்வசம் கிழக்கில் இருக்கும் போராளிகளுக்கும் எதிராக விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய எதிர்நடவடிக்கைகளினால் ஆபத்தான நிலைமை ஏற்படும் என்று கூறியே தமது படைகளின் உதவியைக் கோரியதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அரசாங்கப் படைகளுடன் நெருக்கமாகச் செயற்படும் தரப்பொன்றின் ஊடாகவே கருணாவின் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் அரச பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் அக்கோரிக்கையை உடனடியாகவே நிராகரித்து விட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். இத் தகவலை ஜனாதிபதி மாளிகையுடன் நெருக்கமான வட்டாரமொன்றும் ஊர்ஜிதம் செய்தது. வடக்கிலிருந்து கிழக்கிற்கு மக்களோ அல்லது விடுதலைப் புலிகளோ வருவதற்கு அரச படைகள் தடைகளை விதித்து, அல்லது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது தேவையற்ற பிரச்சினையொன்றை ஏற்படுத்துவதுடன், மக்களின் வெறுப்பையும் சம்பாதிக்க வேண்டிவரும் என்பதால் இந்தப் பிரச்சினையில் அரச படைகளை சம்பந்தப்படுத்த முடியாதென அரச பாதுகாப்பு வட்டாரங்கள், உத்தியோகப் பற்றற்ற முறையில் கருணாவிற்கு அறிவித்திருப்பதாக மேலும் தெரிய வருகிறது.

# அமெரிக்க துணை அமைச்சர் இலங்கை செல்கின்றார்

(21.03.04)

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி துணை வெளிவிவகார அமைச்சர் டோர்கெல் எல்.பற்டேர்ன் அடுத்த வாரம் இலங்கை செல்கின்றார். இங்கு தங்கியிருக்கும் காலப் பகுதியில் அரசாங்கத் தலைவர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களை அவர் சந்திப்பார் என்று அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பற்டேர்ன் 2001 முதல் 2002ம் ஆண்டு வரை ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவரின் சிரேஷ்ட ஆலோசகராகவும், பின்னர், ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பாதுகாப்புச் சபையின் தலைவர், சிரேஷ்ட பணிப்பாளர் ஆகியோருக்கான விசேட உதவியாளராகவும் பணியாற்றியதுடன் வேறு பல பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் வகித்திருக்கின்றார். அமெரிக்க கடற்படை அக்கடமியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர், ஒரு ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரியுமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் சட்ட ரீதியாக விலகிச் செல்ல அனுமதி

(21.03.04)

சிறீலங்கா இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளவர்களுக்கு இராணுவத்திலிருந்து விலகிச் செல்ல சட்டபூர்வமாக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று மூன்று ஆண்டுகள் கடந்துள்ளவர்களே இந்த வாய்ப்பிற்கு உரித்துடையவர்களாவர்.

இராணுவத்திற்கு சேர வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்திவிட்டு அவர்கள் விடுகை சான்றிதழை பெற்றுக் கொள்ளவும் இராணுவத்திலிருந்து கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் இருப்பின் அவற்றை பெற்றுக் கொண்டு விலகிச் செல்லவும் இச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் இம் மாதம் 22ம் திகதி முதல் 26ம் திகதி வரை கொழும்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும். கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்பு மாவட்ட செயலகம், பிரதேச சபை அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் விபரங்கள், கொடுப்பனவுகள் விபர பட்டியல்களின் படி கொழும்பு 2 மலே வீதியிலுள்ள இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகத்திற்கு சமூகமளித்து சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து விடுகை சான்றிதழ் பெற்று விலகிச் செல்ல முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் கம்பஹா மாவட்டத்திலும் களுத்துறை மாவட்டத்திலும் அண்மையில் செயற்படுத்தப் பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் இராணுவத்திலிருந்து சட்ட பூர்வமாக விலகிச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




Experienced Tamil Jeweller in London

வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

western Jewellers

230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445

Opening hours, Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்



ஈழமுரசு
POOBALAM WEEKLY

# தமிழ் மக்களின் நண்பி !

ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுததாம். தமிழ் மக்களின் நிலையைப் பார்த்து சந்திரிகா மீண்டும் வடிக்கின்ற வார்த்தை ஜாலங்களைப் பார்த்தால், ஆடு – ஓநாயின் கதைதான் நினைவுக்கு வருகின்றது. எவ்வாறுதான் காலத்திற்கு காலம் தங்கள் முகங்களை மாற்றிக்கொண்டு இவர்களால் மக்கள் முன் வர முடிகின்றதோ தெரியவில்லை. அதுவும் தேர்தல் காலங்களில் சமாதான முகமூடிகளை அணிந்துகொண்டு மக்களை வார்த்தை ஜாலங்களால் இவர்கள் மடக்கிப்போட முனைகின்றனர். தேர்தல் காலங்களில் தான், சிறீலங்காவின் அரசியல் தலைமைகளுக்கே நாட்டில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள், அவர்களும் மனிதர்கள் தான், அவர்களையும் மனிதாபினாத்துடன் நடத்த வேண்டும் என்ற எண்ணமே வரும். அப்போது மட்டும்தான் அந்த மக்கள் மீது பாசமும் பரிவும் பொங்கிவழியும். தேர்தல் முடிந்த பின் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதைதான்.

1994ம் ஆண்டு தமிழ் மக்களை ஏமாற்றிய சந்திரிகா, இப்போது 2004ம் ஆண்டிலும் தமிழ் மக்களை ஏமாற்ற எத்தனித்துள்ளார். அதனால் தமிழ் மக்கள் மீது தனது கருணையான பார்வையை அள்ளி வீசுகின்றார். சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்படும், விடுதலைப் புலிகளுடனே பேச்சு நடத்தப்படும் என்று மீண்டும் சமாதானப்புறாவின் வேடத்தை அணிந்துள்ளார். தேர்தல் பிரச்சாரங்களிலும் தமிழ் மக்களுக்கு சமாதானத்தின் மூலம் தீர்வு வழங்கப்படும் என வாக்குறுதிகளை தெளிக்கின்றார். இவற்றுக்கெல்லாம் உச்சமாக கடந்தவாரம் கொழும்பு இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த சந்திரிகா, தான் தமிழ் மக்களின் நண்பன் [நண்பி] என்று கூறியுள்ளதுதான், இத் தேர்தல் களத்தில் மிகவும் உச்சமான நகைச்சுவை.

ஐக்கிய தேசிய ஆட்சிக்காலத்தில் தனது படையினரைக்கொண்டு அழிக்க முனைந்து, அது முடியாமல் போகவே, இந்திய இராணுவத்தை வரவழைத்து ஜே.வி.பி.யினரை அழித்ததைப் போன்று தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் அழிக்க முனைந்தனர். ஆனால், சந்திரிகாவோ உலக நாடுகளில் இருந்தும் இராணுவ ஆலோசனைகளையும் நவீன போர்த் தளவாடங்களையும் வரவழைத்து ‘சமாதானத்திற்கான போர்’ என்று கூறி தமிழ் மக்களின் உயிர்களை அழித்தும், வாழ்விடங்களை சேதப்படுத்தியும் என்றுமே தமிழ் மக்கள் கண்டிராத இன்னல்களை விளைவித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களை கிளிநொச்சிக்குத் துரத்தி, கிளிநொச்சியிலும் இருக்க விடாமல் வன்னிக்குத் துரத்தி, பின்னர் அங்கும் இருக்க விடாமல் சாவின் எல்லையை நோக்கி துரத்தியபோதுதான், தமிழ் மக்கள் புலிகளின் பின்னே வீறுகொண்டு எழுந்து, எதிர்க்க வந்த படையினரை மோதி துரத்தியடித்து, தங்கள் வாழ்வைத் தக்கவைத்துக்கொண்டனர்.

சந்திரிகாவும், அவரது படைகளும் மேற்கொண்ட காயங்களின் வடு ஆறுவதற்கு முன்பே, சந்திரிகா தன்னை மீண்டும் ஒரு சமாதானப் புறாவாக காண்பிக்க முற்பட்டுள்ளார். அத்துடன் தேர்தலின் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கப்போவதாகவும் அதனால், கருணா குழுவினர் விடுத்த அழைப்பை நிராகரித்துவிட்டதாகவும் கூறிவருகின்றார். ஆனால், விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணா குழுவினருடன் சந்திரிகாவும் அவரது படையினரும் மறைமுகத் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றனர் என்பது வெளிப்படையாகிவருகின்றது. அண்மையில் மட்டக்களப்பிற்கு சிறீலங்கா வான்படைக்கு சொந்தமான உலங்குவானூர்திகள் அடிக்கடி சென்று வந்துள்ளதாக அங்கிருந்து வெளிவரும் செய்திகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. முப்படைகளுக்கும் தளபதியாக இருக்கும் சந்திரிகாவின் அனுமதி இல்லாமல், இவ் உலங்குவானூர்திகள் அங்கு சென்று வந்திருக்க முடியாது. கருணாவை சந்திப்பதற்கு இவ் உலங்குவானூர்திகளை வேறுயாரும் பயன்படுத்தியிருக்க வாய்ப்புக்களும் இல்லை. எனவே, மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டி, கடந்த காலத்தை போல் தமிழ் மக்களை இம்முறையும் ஏமாற்ற முனையும் சந்திரிகாவிற்கு இந்தத் தேர்தல் நல்லதொரு பாடத்தை வழங்க வேண்டும்.

# தமிழ் மக்களின் வாக்களிப்பை மட்டுப்படுத்த சதித்திட்டம் தீட்டப்படுகின்றதா?

முதலாம் கட்ட ஈழப்போரின் பிற்பகுதியில் 1985ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டை புலிகள் முதல்முறையாக தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். புலிகள் ஒரு நிரந்தர தளப் பிரதேசத்தை முதன் முதலாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருந்தனர்.

1987ம் ஆண்டின் பிற்பகுதிவரை யாழ்ப்பாணத்தைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பின்னர், இரண்டாம் கட்ட ஈழப்போரில் யாழ்ப்பாணம் வன்னி உள்ளிட்ட பெரும் பிரதேசத்திலும், கிழக்கிலும் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை விஸ்தரித்துக்கொண்டனர்.

1990ம் ஆண்டில் ஏற்பட்ட இரண்டாம் கட்ட ஈழப்போரின் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் வடக்குகிழக்குப் பகுதி துண்டாடப்பட்டிருந்தது. படைத்தரப்பு விடுவிக்கப்பட்ட பகுதியென தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும், விடுவிக்கப்படாத பகுதி என புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் பிரகடனப்படுத்திக் கொண்டது.

இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையில் யுத்த காலத்தில் வெவ்வேறான சூழ்நிலைகள் இருந்தன. இப்போது இந்த வேறுபாடான சூழல், மக்களின் வாக்குரிமையிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற அளவுக்குச் சென்றிருக்கிறது. எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்துவது தொடர்பான சர்ச்சை இப்போது தீவிரம் பெற்றிருக்கிறது.

இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தலை நடத்துவது பிரச்சினைக்குரிய விடயமாக கருதப்படுகிறது. தமது பகுதியில் சுமுகமாகத் தேர்தலை நடத்துவதற்கு தாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக புலிகள் அறிவித்திருக்கின்றனர். ஆனால் இராணுவமோ, பொலிசாரோ தேர்தல் கடமையில் ஈடுபடாவிட்டால் தேர்தலை நடத்த முடியாது என்றும் – இவ்வாறு தேர்தல் நடத்தப்படுவது மோசடிகளுக்கு வழிவகுக்கும் எனவும் ஒரு தரப்பு கூறுகின்றது.

இராணுவமோ, பொலிசாரோ தேர்தல் கடமைகளுக்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வது யுத்தநிறுத்த மீறல் என்று இந்தத்தரப்பு நியாயம் கற்பிக்கின்றது. யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக மாற்றியமைக்கவேண்டும் என்று விமர்சனம் செய்யும் தரப்புக்களே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தேர்தல் கடமைக்காக படையினர் பொலிசார் செல்வது யுத்தநிறுத்த மீறல் என்று கூறுகின்றன.

புலிகளின் பிரதேசத்துக்குள் படையினர், பொலிசார் தேர்தல் கடமைகளுக்காக செல்வது சாத்தியமானதல்ல. அதைப் புலிகள் அனுமதிக்கப் போவதும் இல்லை. ஆனால் இங்கே யுத்தநிறுத்த உடன்படிக்கை என்ற பெயரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்குரிமையளிக்கப்படுவதை நாம் காணமுடிகின்றது.

அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்காக கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பதற்குக்கூட இன்னமும் சரியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இராணுவ சூனியப் பிரதேசத்தில் தேர்தலை நடத்துவதா அல்லது இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் – இராணுவ முன்னரங்க நிலைகளுக்குப் பின்னால் தேர்தலை நடத்துவதா என்பதே இப்போதுள்ள பிரச்சினையாக உள்ளது.

இராணுவ முன்னரங்கப் பாதுகாப்பு வேலி போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைவாக இரண்டு தரப்புக்களாலும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில், ஒரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இருந்து, மற்ற தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதற்கு சோதனைக் கெடுபிடிகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

முன்னரங்க நிலைகளூடாக மட்டுப்படுத்தப்பட்டளவு வாக்காளர்களையே வாக்களிக்க அனுமதி வழங்கப்படும். இதற்கு சோதனை நடவடிக்கைகளே காரணமாகும். சோதனைக்கெடுபிடிகளைத் தாண்டி வாக்காளர்கள் சென்று முழுமையாக வாக்களிப்பதென்பது சாத்தியமில்லை.

ஆனால் இராணுவ சூனியப் பிரதேசத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கும் கூட பல்வேறு தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. கண்ணி வெடி அபாயம் என்றும், யுத்த சூனியப் பிரதேசத்துக்குள் படையினர், பொலிசார் நுழைவது போர் நிறுத்த மீறல் என்றும் சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

> இது தொடர்பாக அரசாங்கத்தரப்பு இன்னமும் இறுதி முடிவை அறிவிக்காத போதும், இந்த யோசனை கருத்தில் எடுக்கப்படுமா என்பதும் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. வாக்களிப்பு வீதத்தை மட்டுப்படுத்தும் திட்டத்துக்கு இது குழிதோண்டிப் புதைக்கும் யோசனை என்பதால் தான் இந்த சந்தேகம் வருகிறது.

புலிகள் தரப்பிடம் இதற்கு எந்த எதிர்ப்பும் வெளிவராத போதிலும், எப்படியாவது யுத்த நிறுத்த உடன்படிக்கையை சாட்டாக வைத்துக்கொண்டு யுத்த சூனியப்பிரதேசத்துக்குள் வாக்களிப்பு நிலையங்களை அமைக்காமல் தடுத்துவிடுவது என்ற குறியுடன் பலரும் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்களிப்பு வீதத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்ற சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அதேவேளை வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்கவும், தமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்கு நிலையைக் கருத்தில் கொண்டும் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதற்கும் புலிகள் முன் வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. தமது பகுதி மக்களின் வாக்களிப்புக்கு ஏதுவாக – தமது முன்னரங்க நிலைகளை தேர்தல் தினத்தன்று 500 மீற்றர்தூரம் பின் நகர்த்ததுவதற்கும் இணக்கம் தெரிவித்து ஒரு யோசனையை புலிகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதன்படி தேர்தல் தினத்தன்று முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் சோதனைச் சாவடிகளை புலிகள் 500 மீற்றர் பின் தள்ளி – தமது கொட்டகைகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்குவதற்கும் – அந்தப்பகுதிப் பாதுகாப்புக்கு இராணுவத்தினர், பொலிசாரை அனுமதிப்பதற்கும் இணங்கியுள்ளனர்.

ஆனால் சோதனைக் கெடுபிடிகளின்றி மக்கள் வாக்களிக்க இடமளிக்க வேண்டும் என்று மட்டும் புலிகள் நிபந்தனை விதித்துள்ளதாகவும், இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு மூலம் அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆனால் இது தொடர்பாக அரசாங்கத்தரப்பு இன்னமும் இறுதி முடிவை அறிவிக்காத போதும் இந்த யோசனை கருத்தில் எடுக்கப்படுமா என்பதும் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. வாக்களிப்பு வீதத்தை மட்டுப்படுத்தும் திட்டத்துக்கு இது குழிதோண்டிப் புதைக்கும் யோசனை என்பதால் தான் இந்த சந்தேகம் வருகிறது.

புலிகள் தரப்பு முன்வைக்கும் திட்டல்களை நிராகரிப்பதையே வாடிக்கையாகக் கொண்ட தரப்புக்களுக்கு இந்த யோசனை கருத்திலெடுக்கத்தக்கதாக இருக்குமா?

எவ்வாறாயினும் இந்தத் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தப் போகும் முடிவு தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுத்தரும் என்பதால் புலிகள் கூடிய அக்கறை செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

– சுபத்ரா

## மோசடிப் பேர்வழிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருங்கள் இலங்கை அகதிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவுறுத்தல்

தென்னிந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ் அகதி முகாம்களில் உள்ள தமிழ்ப் பெண்களை வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி சில நபர்கள் இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர். இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 30 பேர் வவுனியாவிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை காரியாலயத்தில் தஞ்சம் அடைந்திருந்தனர். விடுதலைப் புலிகளுடன் இணைந்து இவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இவர்களை இவர்களது உறவினர்களிடம் பத்திரமாக சேர்த்திருந்தது.

இதையடுத்தே இது குறித்து அறிவுறுத்தியுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம், எவ்வித ஆவணங்களுமின்றி அகதிகள் அங்கிருந்து இங்கு அழைத்து வருப்படுவதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் எனவே இது குறித்து கூடிய எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.


## இந்திய கிரிக்கெட் அணிக்கு பாகிஸ்தான் அதிபர் பாராட்டு



இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் தெண்டுல்கர், எல். பாலாஜி, முகமது கயூப் ஆகியோரை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பாராட்டினார். இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து, விளையாடுகிறது. இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினருக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தேனீர் விருந்தளித்தார். இஸ்லாமாபாத்தில் உள்ள அதிபர் மாளிகையில் இந்த விருந்து நடைபெற்றது. விருந்தில் பங்கேற்ற வீரர்களுடன் முஷாரப் சகஜமாக நெருங்கி பழகினார். ஒவ்வொரு வீரர்களுடனும் அவர் கைகுலுக்கி வரவேற்றார்.

கடந்த போட்டியில் சதம் அடித்த சச்சின் தெண்டுல்கர், கடைசி கட்டத்தில் நெருக்கடியை சமாளித்து அக்தர் வீசிய பந்துகளை 'பவுண்டரி'க்கு விரட்டிய எல். பாலாஜி, முதல் போட்டியில் மாலிக் அடி[illegible] பந்தை அபாரமாக பிடித்து ஆட்டம் இழக்க செய்த முகமது கயூப் ஆகியோரை அவர் பாராட்டினார். இந்திய வீரர்கள் அனைவரும் கையெழுத்திட்ட 'கிரிக்கெட் பட்டை' அணி மனேஜர் ரத்னாகர் செட்டி அதிபர் முஷாரப்புக்கு பரிசாக வழங்கினார்.

பின்னர் இந்திய அணி கப்டன் கங்குலி கூறுகையில், "பாகிஸ்தான் அதிபர் கிரிக்கெட் தகவல்களை மிக சிறப்பாக அறிந்[illegible] வைத்துள்ளார். கடந்த 2 போட்டிகளையும் அவர் உன்னிப்பாக கவனித்து இருக்கிறார். அவர் வீரர்களுடன் ஒன்றாக கலந்து நல்ல வரவேற்பை கொடுத்தார்" என்றார்.




இந்தியத் தலைநகர் புதுடில்லியில் 20.03.2004 அன்று போர் நடவடிக்கைக்கு எதிரான அமைப்பினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன்போது அமெரிக்க அதிபர், பிரித்தானியப் பிரதமர் ஆகியோரது உருவ முகமூடிகளை அணிந்துவந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், ஈராக்கில் இருந்து அமெரிக்க, பிரித்தானியப் படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் என்று குரல் எழுப்பினார்கள்.

"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" - *தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்*

## தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

### தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.

சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.




தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம். இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்ரகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

### இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

**முதலாவது பரிசு:** 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**இரண்டாவது பரிசு:** 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா. *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*


**மூன்றாவது பரிசு:** 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

தாயக மண்மீட்புப் போரில் எம்மோடு தோளோடு தோள் நின்று கைகொடுத்த தமிழ் உறவுகளே! கருத்துப்போரிலும் வெற்றியை எமதாக்க கைகொடுத்திடுவீர்!!!

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்

# ஈராக்.. ஈராக்.. ஈராக்...





ஈராக் செல்லும் தாய்லாந்தின் மருத்துவ தொழில்நுட்ப படையினருக்கு, பாங்கொக்கில் உள்ள இராணுவ தலைமையகத்தில் பௌத்தபிக்குகள், படையினரின் பெற்றோர் ஆசிர்வாதம் வழங்குகின்றனர். ஈராக் சென்ற தாய்லாந்தின் முதல் படைப்பிரிவினர் தமது ஆறுமாத கால சேவையை முடித்துக்கொண்டதையடுத்து, அவ்விடத்திற்கு புதிய படையினர் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவர்கள் அங்கு ஆறு மாத காலம் சேவையில் ஈடுபடுவார்கள்.



புதிய ஆட்சியாளர்கள் பதவியேற்றதையடுத்து, ஈராக்கில் நிலைகொண்டுள்ள தமது படையினரை இஸ்பெயின் திருப்பியழைக்க முடிவு செய்தது. ஈராக்கின் நஜாப் நகரில் நிலைகொண்டுள்ள 1300 படையினரும் தமது பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு நாடு திரும்ப தயாராகியுள்ளனர்.



ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்து கடந்த 17ம் திகதியுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இவ் ஓராண்டில் உயிரிழந்த அமெரிக்க படையினரின் நினைவு நிகழ்வுகள் அமெரிக்காவில் நடைபெற்றன. ஈராக்கில் இதுவரை இறந்ததாக கூறப்படும் 560 படையினரின் நினைவாக 560 பாதணிகள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. போருக்கு எதிரான அமைப்பினரால், லோஸ் ஏஞ்சல் மாநிலத்தின் முக்கிய இவ் அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## அமெரிக்க நிபந்தனையை ஏற்க தென் கொரியா மறுப்பு

ஈராக்கில் இருக்கும் அமெரிக்க படைகளுக்கு உதவ இராணுவ வீரர்களை அனுப்பி வைக்கும்படி தென்கொரியாவை அமெரிக்கா கேட்டுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து தென் கொரியா 3000 இராணுவ வீரர்களை அடுத்த மாதம் ஈராக் அனுப்பி வைக்கிறது. தென் கொரிய இராணுவ வீரர்களை கிர்குக் பகுதியில் முகா மிடும்படி அமெரிக்கா கூறி இருந்தது. இந்த நிபந்தனையை தென் கொரியா ஏற்க மறுத்து விட்டது. கிர்குக் பகுதியில் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருப்பதால் அங்கு எங்கள் படையை வைக்க மாட்டோம் என்று கூறிவிட்டது.

இதுஇவ்வாறிருக்க, "அமெரிக்காவால் சிறைப்பிடிக்கப்பட்ட சதாம் குசேன், விசாரணையின் போது, பயனுள்ள தகவல் எதையும் தெரிவிக்கவில்லை" என்று அமெரிக்காவின் வெளிநாட்டிற்கான துணை இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் கூறினார். அவர் ஒரு வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,"சதாம், விசாரணை அதிகாரிகளிடம் சரளமாகப் பேசுகிறார். நான் விசாரணையை சில சமயங்களில் மேற்பார்வையிடுவேன். சதாம் தந்திரமானவர். அதிகாரிகளிடம் சிரித்துப்பேசி வாதம் செய்கிறார். ஆனால் பயனுள்ள தகவல் எதையும் சொல்வது கிடையாது. இவ்வாறு மந்திரி ஆர்மிடேஜ் கூறினார். இந்த விசாரணையில் சி.ஐ.ஏ. முக்கியப்பங்கு எடுத்துக் கொண்டுள்ளது. சதாம் குசேன் ஒரு போர்க் கைதி என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. ஜெனீவா மாநாட்டு தீர்மானத்தின் படி அவருக்குப் பல்வேறு உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. 66 வயதான சதாம் குசேன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிடிபட்டது முதல் அமெரிக்கர்களின் காவலில் இருந்து வருகிறார்.

## 'நேட்டோ அணியில் சேராத நட்பு நாடு'
# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விசேட அந்தஸ்து

(21.03.04)

பாகிஸ்தானுக்கு நேட்டோ இல்லாத நட்பு நாடு என்ற விசேட அந்தஸ்தை அமெரிக்கா வழங்க இருக்கிறது. அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களை எளிதில் வாங்குவதற்கு வகை செய்வதற்கு வசதியாக பாகிஸ்தானுக்கு இந்த விசேட அந்தஸ்தை அமெரிக்கா வழங்க இருக்கிறது.

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்து, ஆயுதப் போட்டியில் ஈடுபட்டதால், நவீன ஆயுதங்களையும், போர் விமானங்களையும் அது அமெரிக்காவிடம் இருந்து பெறமுடியாமல் திண்டாடியது.

இந்நிலையில் ஒசாமா பின் லேடன் ஆட்கள் விமானத்தை கடத்தி நியூயோர்க் நகர 111 மாடிக் கட்டடத்தின் மீது மோதினர். இதில் 5 ஆயிரம் பேருக்கு மேல் பலியானார்கள். இதைத் தொடர்ந்து தீவிரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா தொடங்கியது. இந்தப் போரில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உதவியாக இருந்தது. அதன் கூட்டாளியாக சேர்ந்து கொண்டது.

இந்தப் புதிய நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பாகிஸ்தானுக்கு புதிய அந்தஸ்தை அமெரிக்கா வழங்கி இருக்கிறது. 'நேட்டோ அணியில் சேராத நட்பு நாடு' என்ற அந்தஸ்து பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் என்று அமெரிக்கா வெளிநாட்டு மந்திரி கொலின் பவெல் அறிவித்து இருக்கிறார்.

அமெரிக்கா தன் நேச நாடுகளுடன் இராணுவக் கூட்டு வைத்து இருக்கிறது. இந்தக் கூட்டுக்கு 'நேட்டோ' (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள்) அணி என்று பெயர்.

பாகிஸ்தான் இந்த அணியில் சேரவில்லை. இருந்தபோதிலும் அதற்கு நேட்டோ இல்லாத நட்பு நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா கொடுத்து, அதை தன் நெருக்கமான நட்பு வளையத்துக்குள் கொண்டு வர இருக்கிறது.

பாகிஸ்தான் சென்ற கொலின் பவெல் அங்கு நிருபர்களுக்குப் பேட்டி அளித்தபோது, "எதிர்கால இராணுவ உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக இப்படி சிறப்பு அந்தஸ்து அளிக்கப்பட இருக்கிறது. இது தொடர்பாக அமெரிக்கப் பாராளுமன்றத்தில் ஒரு அறிவிப்பை நாங்கள் செய்வோம். இவ்வாறு கொலின் பவெல் கூறினார்.



கடந்த வாரம் பாகிஸ்தானுக்கு சென்றிருந்த அமெரிக்க இரா(ாங்க அமைச்சர் கொலின் பவல், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மொஹமட் கசூரியை சந்தித்துப் பேசியபோது...

இந்த விசேட அந்தஸ்து கிடைத்துவிட்டால், ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து, குவைத், எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான், பிலிப்பைன்ஸ், அஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் வரிசையில் பாகிஸ்தானும் சேர்ந்துவிடும். இந்த விசேட அந்தஸ்து கிடைத்து விட்டால், அமெரிக்க ஆயுதங்களைப் பெறமுடியும். நிதி உதவி பெறுவதிலும், இராணுவ ஒத்துழைப்பிலும் பாகிஸ்தானுக்கு முன்னுரிமை கிடைக்கும்.

## விமான நிறுவனங்கள் பயணிகள் விபரப்பட்டியலை முன்னரே வழங்கவேண்டும் — அமெரிக்கா வலியுறுத்தல்

(20.03.04)

வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு வரும் பயணிகளின் விபரப் பட்டியலை பயணிகள் வருவதற்கு முன்னரே தமக்கு வழங்கவேண்டும் என அமெரிக்க அரசு வலியுறுத்தியுள்ளது. சர்வதேச பயங்கரவாதிகளை இனம்கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது, இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் சர்வதேச விமான நிறுவனங்கள் அமெரிக்காவிற்கு வரும் பயணிகளின் விபரப்பட்டியலை தமக்கு முன்னரே வழங்கி தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூறியுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் இவ் வலியுறுத்தலுக்கு பல விமான நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன. பயணிகளின் அந்தரங்கத்தை மீற முடியாது என இந்நிறுவனங்கள் கூறியுள்ளன. எனினும் முன்னரே விபரம் தராத விமான நிறுவனங்களின் பயணிகளை திருப்பியனுப்புவதற்கும் யோசிக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

TRISTAR ALLIANCE

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

TRISTAR ALLIANCE

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும்
மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்


BYBA TOURISME

18, Rue Démarquai, 75010 Paris
Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05
Métro: Gare du nord
www.tristarassurance.com

Pub-Fr-40

வெளிவந்துவிட்டது

நேர்காணல்



யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்களுடனான நேர்காணல்

# எரிமலை

மார்ச் 2004




இவற்றுடன் கட்டுரைகள்,
அணையாத தீபம்,
உண்மைப் பதிவுகள்,
கவிதைகள், சிறுகதைகள்,
மீள்பார்வை, நினைவுக் குறிப்புகள்,
பதிவுகள் போன்ற சிறப்பம்சங்களையும்
தாங்கி வெளிவந்துள்ளது.

www.erimalai.com

---

# ஜதீஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506

---



S.K. Rajan Jewellers

**24, Rue Perdonnet, 75010 Paris.**

தொடர்புகளுக்கு: Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN - M°: La Chapelle / Gard du Nord.

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22K இல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

# எஸ்.கே.ராஜன் ஜுவலர்ஸ்

---

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய ($20M^3$)வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.

**நித்தி: 0148050214 / 0613342518**
**0607348051 / 0148385825**

Pub Fr

---

## EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழிபெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 / Fax: 0153267502

---

## LA CHAPELLE

## இறைச்சிக் கடை

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

---

# ரவி ஜுவல்லர்ஸ் Burgdorf

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

இதுவரை யாரும் கண்டு களித்திடாத, சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 24.03.2004 செவ்வாய் தொடக்கம் இரு வாரங்களுக்கு...

# மாபெரும் மலிவு விற்பனை

இடம் Knuppenmattgasse 2, 3414 Oberburg (பழைய EPA அமைந்திருந்த இடம்)

இலங்கை, இந்தியா (பம்பாய்), சிங்கப்பூர், மலேசியா போன்ற அனைத்து நாடுகளிலும் கொள்வனவு செய்யப்பட்ட ஆடவர், மங்கையர், சிறுவர் அனைவரினதும் மனதை கொள்ளை கொண்ட கண்கவரும் ஆடைகள்...

கண்கவரும் ஜொலிக்கும் தங்க நகை ஆபரணங்கள் மலிவு விலையில், அசல் 22 கரட் (C916) உத்தரவாதத்துடன் ஓடர் செய்து கொடுக்கப்படும்.



## உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்

**சாறிவகைகள்**

| | | |
|---|---|---|
| கோலம் | 30.00 | இலிருந்து... |
| பனாரிஸ் | 140.00 | இலிருந்து... |
| ஆட்டோகிராப் | | |
| காவேரி | 40.00 | இலிருந்து... |
| கல்லுசாறி | 30.00 | இலிருந்து... |
| நைலெக்ஸ் சாறிகள் | 10.00 | இலிருந்து... |

மேலும் பலவகைகள்...

**பஞ்சாபி வகைகள்**

Kunal fashion (குனால்)
சோளி கிற்
ஜீன்ஸ் பஞ்சாபி

**ஆண்களுக்குரிய**

ஜீன்ஸ் வகைகள்
சேட் வகைகள்
ரீசேட்ஸ்

**சிறுவர்களுக்கான**

கோட்சூட் வகைகள்
ஜீன்ஸ் வகைகள்
சேட், ரீசேட், சுடிதார்
சோட்ஸ் வகைகள்

**அழகு சாதனப் பொருட்கள்**

வண்ண வர்ண மாலை வகைகள்
நகப்பூச்சு (கியூடெக்ஸ்)
பொட்டுக்கள்
ஷாம்பூ க்கள்
சென்ட் வகைகள் (Charlie, Brut, Calife, Life Times)
பெண்களுக்குரிய அனைத்து கிறீம் வகைகள்
கொண்டை, அழகு பூக்கள்
காப்பு வகைகள்

வீட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
றைஸ் குக்கர்

SALE % SALE

SALE % SALE



**அத்துடன் புதிய பழைய**

| | | |
|---|---|---|
| VCD க்கள் | 6.00 | இலிருந்து... |
| Audio CD | 4.00 | இலிருந்து... |
| DVD க்கள் | 10.00 | இலிருந்து... |




150 Fr. க்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய வீட்டு அலங்காரப் பொருட்கள் பரிசாகத்தரக் காத்திருக்கின்றோம்.

**Ravi Jewellers, Burgdorf** Telefon: 034 423 38 46, 034 423 10 86, Natel: 078 881 75 71, 076 581 77 29

முரசு - இதழ்

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

# கவிஞர் த.சரீஷ் அவர்களும் ஒரு விடியலின் முகவரியும்..!

கவிஞர் த.சரீஷ் அவர்களின் இரண்டாவது கவிதைத்தொகுப்பான 'விடியலின் முகவரி' என்ற கவிதை நூல் கடந்த சனிக்கிழமை 13.03.2004 அன்று பாரீசில், பிரஞ்சு பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. பல கலைநிகழ்வுகளோடு நடைபெற்ற இந்த விழாவில் 450ற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த விழாவில் பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்களும் கலந்துகொண்டு இன் நூலை வெளியிட்டுவைத்து சிறப்பித்தனர்.

புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள் கலை, இலக்கியம், நாடகம், சினிமா என பல துறைகளில் கால்பதித்துள்ளமை புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எனும் புதுவடிவம் தோற்றம் பெறுவதற்கு வழிசமைத்த






தெனலாம். தேசத்தின் சோகங்கள் முடியுமா, தொடருமா..? என்ற கேள்விக்குறியின் மத்தியிலும் அகதிகளாய் அந்நிய மண்ணில் அலைகின்றபோதிலும் எமக்கிருக்கும் ஒரே ஒரு ஆத்மார்த்தமான விடயம், புலம்பெயர்ந்த மண்ணில் எம்மவர்களால் படைக்கப்படும் கலை இலக்கியப் படைப்புகளே.

அறிதலின் எல்லைகள் பல முனைகளில் இங்கு விஸ்தரிக்கப்படுவதும், உலக அனுபவங்களையும் மேற்குலக இலக்கியங்களையும் தமக்கு நெருக்கமாக்கிக்கொண்டு சூன்யமான இந்த வாழ்விலும் விடியலைத்தேடும் உறவுகளாக எமது எதிர்கால சந்ததியினர் பலர் இப்புலத்தில் படைப்பாளிகளாக உருவாகிக்கொண்டு வருவதும் பாராட்டுதற்குரிய விடயமாகும். இந்தவகையில் இளம் கவிஞராக கவிப்பரப்பில், பல்வேறுகோணங்களில் கவிதைகளை புனைந்துவருகிறார் த.சரீஷ் அவர்கள். காலத்தை கண்டெடுப்பதற்கு மனிதன் கண்டெடுத்த வசதியான வழிதான் கவிதை. காலம் மரணத்தை உறுதிப்படுத்துகின்றது கவிதையோ வாழ்கையை உறுதிப்படுத்துகின்றது. கவிஞர் த.சரீஷ் அவர்களின் முதலாவது கவிதைத்தொகுப்பு 'தென்றல் வரும் தெரு' என்ற பெயரில் 2002ம் ஆண்டு பாரீசில் வெளியிடப்பட்டது.

இது மட்டுமல்ல, இவருடைய கவிதைகள் பல தமிழ் இணையத்தளங்களில் தொடர்ச்சியாக வெளியாகிவருகின்றன. அத்தோடு ஏ.பீ.சி தமிழ் ஒலி வானொலியிலும் ரீ.ரீ.என் தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பாகுவதோடு பல வாராந்த மாதாந்த சஞ்சிகைகளிலும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. இதைக்கேட்டு, வாசித்த பல வாசகர்கள் நேரடியாகவும் நண்பர்களோடும் பாராட்டுகளை பரிமாறியுள்ளார்கள். அத்தோடு 'கண்மணிக்குள் ஒரு காதல்' என்னும் தலைப்பில் கவித்தொடர் ஒன்றை பாரீசில் இருந்து வெளியாகும் ஈழமுரசு இதழில் எழுதிவருகின்றார். இவருடைய சமூகச்சீர்திருத்த சிந்தனைக் கவிதைகள் சில சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. பெரும்பாலான இவருடைய கவிதைகள் ஈழ விடுதலைப் போராட்டச் சூழலையும் போராட்ட சிந்தனையையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. படித்தவருக்கும், பாமரருக்கும் புரியும் வகையில் தனக்கேயுரிய நடையில் எழுதிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகச் சிறுவயதிலேயே புலம்பெயர்ந்து, தொடர்ந்தும் தமிழ்மொழியில் படிப்பைத்தொடரும் வாய்ப்பினை இழந்து, புலம்பெயர் நாடுகளில் வந்து அந்நிய மொழியில் கல்விகற்றும் இன உணர்வோடும் மொழிப்பற்றோடும் எழுதிவருகின்ற இவருக்கு, தட்டிக்கொடுப்புகள் மிகக்குறைவாக இருந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இரண்டு கவிதைத் தொகுப்புகளை வெளியிடும் அளவுக்கு வளர்ந்ததும் இன்னும் பல படைப்புகள் வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தோடு இருப்பதும் இவ்விடத்தில் தொட்டுக்காட்டப்பட வேண்டியதே. வேலைப்பழுக்கள், பொருளாதார சிக்கல்கள், குடும்பப்பொறுப்புகள் இத்தனையும் தாங்கி வாழுகின்ற புலம்பெயர் எழுத்தாளர்களுள் இளம் கவிஞரான த.சரீஷ் அவர்கள் அத்தனை இடர்களையும் பொருட்படுத்தாது எம் இனத்திற்கு சொல்லப்படவேண்டியதை சொல்லப்பட வேண்டிய வேளையில் சொல்லியுள்ளது மட்டுமல்லாமல், சில கவிதைகள் கடந்தகாலத்தின் கண்ணாடியாக ஒவ்வொரு காலத்தின் பதிவுகளாக அமைந்திருப்பது, எமது எதிர்கால சந்ததியின் சிந்தனைக்கும், தேடலுக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலத்தின் தேவையையொட்டி இவரால் எழுதப்பட்ட பல கவிதைகள் கவிஞனை தனிப்பட்டமுறையில் இனங்காண முடியாமையினால் வாசகர் மத்தியில் வெளிவராமல் இருந்ததும் வேதனைக்குரிய விடயமே. இவரின் போராட்ட கவிதைகள் காலத்தின் பதிவாகவும், சமூக சீர்திருத்த விடையங்கள் காலத்தின் தேவையாகவும் தனக்கே உரிய வயதிற்கான சில காதல் கவிதைகளாகவும். இவ் நூலில் இடம்பெற்றுள்ளது. ஒரு குறுகிய காலப்பகுதியில் அதாவது இவரது முதலாவது கவிதைத்தொகுப்பாகிய 'தென்றல் வரும்தெரு' 2002ம் ஆண்டு வெளியிடப்பட்டபின், இந்த கவிதைத்தொகுப்பினை எழுதிமுடித்துள்ளார் என்பது இவரது மனதில் உள்ள தாக்கத்தை சுட்டிக்காட்டுகின்றது.

சொந்த முகங்களை இழந்து போலிமுகத்தோடு அகதிகளாக வாழும் பல்லாயிரக்கணக்கான சாதாரண மனிதர்களின் மன உணர்வுகளை இவரின் படைப்புகளில் நாம் காணலாம். ஒற்றுமை, ஒருமைப்பாடு நாம் அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் என்ற நிலையில் இவரது எழுத்துக்கள் தமிழர்களை விழிக்கச்செய்வதோடு, ஈழவேண்டுதல் தொடர்பாக சில மக்களிடத்தில் காணப்படுகின்ற ஈழத்து நிலைப்பாட்டின் அறியாமையைப் போக்க இவரது படைப்புக்கள் படம்போட்டுக்காட்டி எம்மவரிடத்தே ஒருமைப்பாட்டை உருவாக்கி, பணரீதியான பங்களிப்போடு நிற்பவரைக்கூட உளரீதியான பங்களிப்பு வரை அழைத்துச்சென்றிருக்கிறது.

இன்னமுமாக இவரது கவிகள், அநீதிகளை எதிர்த்துப்போராடவும் நன்மைத்தனங்களை வாழ்த்தும் பண்பும் கொண்டவை. அத்தோடு இன்னும் பல சிறப்புகள் கொண்டவை என்பது "வெள்ளிடைமலை". பேனாமுனையால் வரலாறுபடைத்தவர்கள் ஏராளம். அந்தவகையில் புலம்பெயர்ந்த மண்ணிலும் உயர்ந்த இலக்கியங்கள் ஈழத்துக் கலைஞர்களால் படைக்கப்படும் என்பதில் வியப்பில்லை. அந்தவகையில் இளம் கவிஞர் த.சரீஷ் அவர்களின் இரண்டாவது கவிதைத்தொகுப்பாக வெளிவரும் இந் நூலினை அனைத்து அன்பு உறவுகளும் வாசித்து பயன்பெறவேண்டும். இவர் இன்னும் பற்பல நூல்களை வெளியிட வேண்டும். எதிர்காலத்தில் ஒரு சிறந்த படைப்பாளியாக கவிஞர் த.சரீஷ் மிளிருவதற்கு உங்கள் அனைவரினதும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் அவரை சென்றடையவேண்டும்.

— பிரான்ஸ் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள்

# 80 வயது பாட்டியை மணந்த 25 வயது இந்திய இளைஞன் !

தனது 80 வயதான பேர்த்தியை 25 வயதான பேரன் மணந்துள்ள சம்பவம் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் கல்குட்டா பகுதியில் இடம்பெற்றுள்ளது. தனது பேர்த்தி எப்போதும் தன்னுடனேயே இருக்க வேண்டும் என்று விரும்பிய மேற்படி பட்டதாரி இளைஞன், கடந்தவாரம் இந்து முறைப்படி அவரை திரும்ணம் செய்துகொண்டுள்ளார். இத் திருமணத்தில் குறிப்பிட்ட சில உறவினர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரு கணவனாக எப்போதும் அவர் கூடவே இருக்க முடியும். அவர் கூடவே உணவு அருந்த முடியும் என அப்பட்டதாரி இளைஞன் தனது திருமணம் குறித்து மகிழ்ச்சி வெளியட்டுள்ளார்.

30 வருடங்களுக்கு முன் தனது கணவரை இழந்த விதவையாகி பொட்டினை இழந்திருந்த பேர்த்தி, திருமணத்தின் பின் சிவப்பு பொட்டினை அணியத் தொடங்கியுள்ளார். இத் திருமணம் பற்றி அவர் குறிப்பிடுகையில், அவர் எனக்கு ஒரு நல்ல கணவராக வாய்த்துள்ளார். என் கைகளிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று எண்ணினேன். இப்போது என்னைப் பார்த்துக்கொள்ள இன்னொரு கை கிடைத்துள்ளது என்று மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இத் திருமணம் குறித்து யாரிடம் இருந்தும் எதிர்ப்பு வராதமையால் தங்களால் அதற்கு எதிராக எந்தவிதம நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என பஞ்சாப் காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். இத் திருமணம் பற்றி கருத்து தெரிவித்த அரச உயர் அதிகாரி ஒருவர், கடந்த வருடம் யூன் மாதம் ஒன்பது வயது சிறுமிக்கும் நாய்க்கும் அதே பகுதியில் திருமணம் நடந்தது. பெற்றோர்களின் சம்மதத்துடனே இத் திருமணம் நடைபெற்றது என்று இன்னொரு திருமணத்தைப் பற்றியும் அவர் கூறியுள்ளார்.

பலதும் பத்தும்

# 'வாக்கிங்' போகும் வாத்துகள்

சீனாவில் உள்ள ஒருவர் தினமும் தனது வாத்துகளுடன் 'வாக்கிங்' செல்கின்றார். பாங் என்ற நகரத்தைச் சேர்ந்த ஒருவர். இவர் நூற்றுக்கணக்கில் வாத்துக்களை வளர்த்து வருகிறார். வீதியில் இவர் செல்லும்போது இந்த வாத்துக்களும் கூடச் செல்கின்றன. ஆனால் மனிதர்கள் போல் கும்பலாக குவிந்து செல்லாமல் வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சலில்லாமல் ஒழுங்கான வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக செல்கின்றன. இந்தக் காட்சியை அங்குள்ள மக்கள் வேடிக்கை பார்த்து மகிழ்கின்றனர்.



# கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடன் !




பாவித்த ஆடைகளை பிறருக்கு வழங்குவதற்கு வசதியாக ஐரோப்பிய நாடுகளில், அதெற்கென வீதிகளில் பெட்டிகளை வைத்திருப்பார்கள். அந்தப் பெட்டியினுள் உள்ள ஆடைகளை திருட முயன்ற ஒருவர் பொலிசாரிடம் பிடிபட்ட சம்பவம் கடந்த வாரம் மேற்கு ஜேர்மனியின் பொஷ்சம் என்ற இடத்தில் நடந்துள்ளது.

கடந்த 15ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பெட்டிக்குள் இறங்கிய இவர், ஆடைகளைத் திருடிக்கொண்டு வெளியேற முடியாத நிலையில் குரலெழுப்பி பிறரது உதவியை நாடியுள்ளார். இதன்போது அங்கு வந்த பொலிசார், இவரை மீட்கும்பணியில் ஈடுபட்டனர். அந்த இடைவெளியில், தனது சிகரெட்டை புகைப்பதற்கு தீப்பெட்டி தருமாறு கையை உயர்த்தி கேட்பதையே படத்தில் காண்கிறீர்கள். கைது செய்யப்பட்ட மேற்படி 43 வயதான நபர், விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பாகம் - 2

6

# வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்

சுமார் இரண்டு மணிநேரம் கழித்து மீண்டும் அதே சிறுவன் முன்னர் போன்று அவலக்குரல் எழுப்பினான். அரைகுறையாய் தூக்கத்தில் அமிழ்ந்து கொண்டிருந்தவர்கள் மீண்டும் விழித்துக் கொண்டனர். யாரோ ஒருவர் எழுந்து சென்று கோவிற் சுவாமியாரை எழுப்பி வந்தார்கள். சுவாமியார் வந்து சேர்ந்த போது அவன் சுயநிலைக்குத் திரும்பி அமைதியாக இருந்தான். எனினும் வந்தவர் பையனை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்.

தூக்கத்தை இப்படிக் கெடுத்துவிட்டானே என்ற கோபம் எதுவும் அவன்மீது எழவில்லை. அதற்குப் பதிலாக, இந்த இடப்பெயர்வானது இவனைப் போன்று எத்தனை உள்ளங்களை பாதிப்படையச் செய்திருக்கும் என எண்ணிக் கவலைகொண்டேன்.

அன்றைய இரவு முழுவதும் இப்படியே கழிந்து மறுநாள் விடிந்தது. கோவிலுக்குள் இருந்து புறப்பட்டு வெளியே வந்தோம். அப்பொழுதுகூட யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வந்துகொண்டேயிருந்தனர். இன்னும் பெருவாரியான மக்கள் பின்னால் வந்துகொண்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

கோவிலுக்கு வெளியே வீதியோரத்தில் இருந்த கடையொன்றில் மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர். காரணத்தை விசாரித்தோம். ஒரு ஆளுக்கு ஒரு இறாத்தல் பாண் கொடுக்கிறார்களாம் என்று பதில் கிடைத்தது. நான் ஒருவன் மட்டும் வரிசையில் நின்று வாங்கக்கூடிய ஒரு இறாத்தல் பாணால் எங்கள் வயிறுகளை நிறைத்துவிட முடியாது. எனவே நானும், என்னவளும், ஒரு மகளும் வரிசையில் நின்று ஆளுக்கு ஒரு இறாத்தல் பாணாக பணம் கொடுத்துப் பெற்றுக்கொண்டோம்.

அன்றைய காலை உணவு முடிந்தது. மகன் இன்னும் வந்து சேரவில்லை. அவனைப் பார்த்துக்கொண்டிருந்தால் வெய்யிலுக்கு முன்னர் முகமாலைக்குப் போய்ச் சேரமுடியாது. அவன் எப்படியும் வந்து சேருவான் என்ற நம்பிக்கையுடன் முகமாலையை நோக்கிய எமது மூன்றாம் நாள் பயணம் ஆரம்பமானது...

❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑

எப்படியோ முகமாலையை வந்து அடைந்துவிட்டோம். மிருசுவில் ஆலயத்தில் மக்கள் செறிந்திருந்தமாதிரியே முகமாலை ஆலயத்திலும் மக்கள் காணப்பட்டனர். முகமாலையில் கோவிலில் தங்குவதை விடவும் எனது தூரத்து உறவினர் ஒருவர் அங்கு நிரந்தரமாக வாழுகின்றார் என்பது எனக்குத் தெரியுமாதலால், அவரைத் தேடிக் கண்டுபிடிப்பது என்ற முடிவுக்கு ஏற்கனவே வந்திருந்தேன்.

அவன் எனக்கு தூரத்து உறவில் தம்பிமுறை. பெயர் வில்சன். இந்தத் தொடரின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட வன்னியூர்க் கவிராயரின் சகோதரியின் மகன். அவனது பேரன், மாமன் ஆகியோரது பரம்பரைப் புலமை அவனிடமுமிருந்தது. ஆனால் அதனை வளர்த்துக் கொள்ளும் ஆர்வத்தை தன்னுள் வளர்த்துக்கொள்ளவில்லை.

அவனது வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கவில்லை. ஆனால் போதிய வசதிகளற்ற சிறிய மண்வீடு. அந்த வீட்டிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் நிறைந்திருந்தார்கள். எங்கள் வரவு வேறு இன்னும் நெருக்கடியை உருவாக்கியது. ஆயினும் என்ன செய்வது. அந்த இடத்தை விட்டால் வேறு வழியில்லை. இன்னும் எங்களை வந்தடையாத மகன் வரும் வரைக்கும் அங்கேதான் தங்க வேண்டும் என்பதால் அங்கேயே தங்கினோம். அங்கிருந்து புறப்படுவதானால் அடுத்தது கிளாலிதான். கிளாலியில் தங்கமுடியாது. கிளாலிக் கடலேரி தாண்டி வன்னிக்குள் நுழைய வேண்டும். வில்சனும் முகம்கோணாது வரவேற்கவே அங்கேயே தங்கினோம்.

ஏற்கனவே எம்மோடு வந்து கைதடியில் பிரிந்து சென்ற இரண்டு சிறுவர்களையும் அங்கே கண்டோம். அவர்கள் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்து விட்டதில் எமக்குத் திருப்தி. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த குருக்கள், கன்னியர்கள், குடும்ப மாணவர்கள் எல்லோரும் முகமாலை ஆலயத்தில்தான் இருந்தனர். அக்கோவிலுக்குப் பொறுப்பாகவிருந்த அருட்திரு. ஸ்ரானில் எனக்கு நன்கு பரிச்சயமானவர்தான் என்றாலும் அன்றைய நிலையில் எம்மீது தனிக்கவனம் செலுத்த முடியாதவராக இருந்தார்.

அந்த ஆலயத்தின் வீடு ஒன்றில் செபமாலைத்தாசர் சபைக் கன்னியர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு பொறுப்பாக இருந்த அருட் செல்வி எனக்கு மிகவும் வேண்டியவர். மன்னாரைச் சேர்ந்தவர். அவரது குடும்பத்துக்கும் எமக்கும் இடையே நெருங்கிய நட்பு. எனது மகனுக்கு அவரது சகோதரிதான் ஞானத்தாய். அவரைச் சென்று சந்தித்தோம். அவரிடம் இருந்து விடை பெறும்போது நான் எதுவும் கேட்காமலே மூன்று கிலோ அரிசி தந்தார். அதை நன்றியோடு பெற்றுக்கொண்டேன். அந்த அரிசியுடன் எம்மிடமிருந்த பணத்தில் காய்கறிகளும் வாங்கிக்கொடுத்து வில்சனின் மனைவியிடம் கொடுத்து சமைத்துச் சாப்பிட்டோம்.

இரண்டு மூன்று நாள்களுக்குமேல் அங்கே தங்க முடியாது. எப்படியும் கிளாலி தாண்டியாக வேண்டும். மகன் இன்னும் வந்து சேராமையால் எந்த ஒரு முடிவுக்கும் எம்மால் வரமுடியாது இருந்தது. எனவே எனது பெரும்பான்மையான நேரம் பிரதான வீதியில் நின்று மகனை வழிபார்ப்பதிலேயே கழிந்தது.

**ஏனெனில் அவர் வெறுமனே வாய் வீச்சுக்காரன் அல்ல. சொன்னதைச் சாதிக்கும் மனோதிடம் படைத்தவர். அவரைப் பற்றிய இன்னுமொரு சம்பவமும் என் மனதில் நினைவுக்கு வந்தது. புஸ்பராசாவின் மனைவி ஜெயசீலி என்னிடம் கூறிய உண்மைச் சம்பவம்.**

அப்படி நின்ற பொழுதுதான் அந்த மனிதர் மிருசுவில் பக்கமிருந்து வந்தார்.. அவர் எனக்கு நன்கு அறிமுகமானவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெயர் ஜேக்கம் என்றாலும் அவரை எல்லோரும் புஸ்பராசா என்றுதான் அழைப்பர். என்னை அந்த இடத்தில் கண்டதும் தனது சைக்கிளைவிட்டு இறங்கி என்னுடன் பேசினார். அவர் பனை தெங்கு பனம்பொருள் அலுவலகத்தில் பனையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்.

எதையும் ஒழிவு மறைவின்றிப் பேசும் சுபாவத்தவர். தனக்குச் சரியெனப் பட்டதை எடுத்துக் கூறத் தயங்காதவர். அவரது இந்தக் குணங்களால் அவர்மீது எனக்குத் தனி மதிப்பு இருந்தது. பரஸ்பரம் இருவரும் குசலம் விசாரித்துக்கொண்டபின்னர் ‘இந்த இடப்பெயர்வு பற்றி உங்களது கருத்து என்ன? இப்படி வீடுவாசல் பொருள்கள் அனைத்தையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்துவிட்டோமே..!’ என்றேன்.

எனது கேள்விக்கான பதிலை முன்னரே ஆயத்தப்படுத்திவைத்திருந்தவர்போல், அவர் உடனடியாக கூறினார். ‘இந்த இடப்பெயர்வு எங்களுக்கு நிச்சயம் தேவையானது.’ உண்மையிலேயே அவரது பதில் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இடப் பெயர்வு எமக்குத் தேவையானது என்று கூறும் முதல் மனிதனைச் சந்திக்கிறேன். சாவகச்சேரியில் போராளிகளைக் கொச்சைப்படுத்திப் பேசிய நபருக்கும், இவருக்கும் எத்துணை வித்தியாசம்.

‘ஏனப்படிச் சொல்லுறீங்க?’

‘நாங்கள் இவ்வளவு நாளும் யாழ்ப்பாணத்தில இருந்துகொண்டு என்ன செய்தனாங்கள். தீவுப் பகுதிகளிலும், வசாவிளான், அச்சுவேலி, காங்கேசன்துறை , இளவாலைப் பகுதிகளில் இருந்து சனங்கள் இடம் பெயர்ந்து வர நாங்கள் பார்த்துக்கொண்டுதானே இருந்தனாங்கள். இஞ்ச எங்கை அடிபாடு நடந்தாலும் அந்தா வன்னி குறூப் வந்திற்றுது நொருக்கப் போறாங்கள். அந்தா மன்னார் குறூப் வந்திற்றுது, மட்டக்களப்பு குறூப் வந்திற்று கலக்கப் போறான்கள் என்று மற்றமாவட்டத்துப் பிள்ளைகளை இயக்கத்தில சேரவிடக்கூடாது. படிப்பிக்க வேணும், எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பிவிட வேணும் என்ற மனநிலையிலதான் இருந்தனாங்கள். எங்கட விடுதலைப் போராட்டத்துக்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்ய முடியாதனாங்கள், எங்களிட்ட இருக்கிற எல்லாத்தையும் இழந்து இப்படி வீடுவாசல்களை விட்டு வெளியேறி, நடுத்தெருவில நின்று உலக நாடுகளிட காதில விழக்கூடிய அளவுக்குக் கத்திக் கொண்டு நிற்கிறதுதான் நாங்கள் போராட்டத்திற்கு அளிக்கக்கூடிய பங்களிப்பு என்று நினைக்கிறன். அதனால இதையிட்டு நான் கொஞ்சமென்றாலும் கவலைப் படவில்லை’யென்றார்.

அவரது இந்தத் தெளிவான பேச்சும், உறுதியும் என்னை வியப்பிலாழ்த்தியது. இந்தப் பிரச்சினையை இப்படியான கோணத்தில் பேசியவரை நான் முதன் முதலில் கண்டதுதான் எனது வியப்புக்குக் காரணம்.

அவர் என்னிடம் விடைபெற்றுச் சென்றார். அவர் போகும் திசையை அவர் உருவம் என் கண்களில் இருந்து மறையும் வரை பார்த்துக்கொண்டு நின்றேன். ஏனெனில் அவர் வெறுமனே வாய் வீச்சுக்காரன் அல்ல. சொன்னதைச் சாதிக்கும் மனோதிடம் படைத்தவர். அவரைப் பற்றிய இன்னுமொரு சம்பவமும் என் மனதில் நினைவுக்கு வந்தது. புஸ்பராசாவின் மனைவி ஜெயசீலி என்னிடம் கூறிய உண்மைச் சம்பவம்.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தவன் ஆண், இளையவள் பெண். புஸ்பராசா பளைக்கு வேலைக்கு திங்கள் போனால், சனியன்று மாலைதான் திரும்புவார். இந்த நிலையில் மூத்தவனான எடின்யூட் போராளியாக போவதாகக் கூறிச் சென்று இணைந்து விட்டான். அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது தந்தையார் பளைக்குச் சென்றிருந்தார். தாயார் ஏதோ அலுவலாக வெளியே சென்றிருந்தார். அவன் புறப்படும்போது அவனது சகோதரியிடமும் வீட்டில் இருந்த மற்றவர்களிடம் ‘நான் இயக்கத்துக்குப் போகிறேன் அம்மா வந்ததும் சொல்லுங்கள்’ என்று வெளிப்படையாகவே கூறிவிட்டுத்தான் சென்றார். அவன் தந்தையாரின் குணத்தை அப்படியே கொண்டவன். வீட்டுக்குத் தெரியாமல் ஒளித்துப் போவதை விரும்பவில்லை. தான் சொன்னதற்கான பதிலைக்கூட மற்றவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. போய்விட்டான்.

இது நடைபெற்றது ஒரு புதன்கிழமை. வீட்டில் இருந்தவர்கள் தாயார் வந்ததும் தெரிவித்தனர். அதைக் கேள்விப்பட்டதும் அவர் அழுது குளறவோ, முகாம் முகாமாகத் தேடிச் செல்லவோ, அதுபற்றி கணவனுக்கு செய்தி அனுப்பவோ இல்லை. மௌனமாக இருந்தார். அவருக்குத் தன் கணவனைப்பற்றியும் மகனைப் பற்றியும் நன்கு தெரியும். ஆயினும் கணவனது நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

அடுத்த சனி மாலை புஸ்பராசா வழக்கம் போல வந்தார். வீட்டின் நிகழ்வு எதுவும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லையென்பதை அவரது நடவடிக்கைகளில் இருந்து தெரிந்து கொண்டார். எனவே சந்தர்ப்பம் பார்த்து மகன் இயக்கத்தில் இணைந்துவிட்ட செய்தியைத் தெரிவித்தார். அந்தச் செய்தி கேட்டு அவர் கவலைப்படவோ, அதிர்ச்சியடையவோ கோபப்படவோ இல்லை. எதுவுமே நடக்காததுபோல் மௌனமாக இருந்தார்.

தனக்குப் பின்னர் குடும்பத்தைப் பொறுப்பேற்க வேண்டியபிள்ளை இப்படிச் செய்ததில் ஒரு தந்தைக்கு ஏற்படக்கூடிய நியாயமான கவலையில் இருப்பதாகவே மனைவி ஜெயசீலி நினைத்துக்கொண்டார். எனவே ஒரு சமயம் தனிமையாக இருந்த அவரை நெருங்கிச் சென்றார்.

(பயணம் தொடரும்)

# தென்றல்
# கண்களால் கைது செய்
# ஆட்டோ கிராப்

தங்கர்பச்சானின் தென்றல், சேரனின் ஆட்டோகிராப், பாரதிராஜாவின் கண்களால் கைது செய் என மூன்று படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியாகியிருக்கிறது. தென்றலில் தங்கர்பச்சான் அப்பட்டமாகப் விபரச்சாரம் செய்திருக்கிறார். சேரன் ஆட்டோகிராபில் நிற நிறமாகப் பெண்களின் கையெழுத்தையும், செந்தில் என்கிற இளைஞனின் காதல் தலையெழுத்தையும் வண்ணத்தில் எழுதியிருக்கிறார்.



தென்றல்

பாரதிராஜா ஆங்கில லெவலுக்குப் படமெடுக்கப்போய் அபத்தமாக ஒரு தமிங்கிலீஷ் படத்தைக் கொடுத்திருக்கிறார். தமிழ் சினிமாவில் படைப்பொருமை கொண்ட, தொடர்ந்து சிந்திக்கிற கலைஞர்களைப் பார்க்க இயலாது என்பதற்கு ஆதாரம் போல் இந்த மூன்று படங்களும் வந்திருக்கின்றன. தங்கர்பச்சான் தனது படங்கள் குறித்து அதீத நம்பிக்கைகள் கொண்டிருக்கிறார். அதீத நம்பிக்கை சிலவேளை தர்க்கம் தவிர்ந்த அபத்தமாகிவிடுவதும் உண்டு என்பதற்கான சான்று போல தென்றல் வந்திருக்கிறது. சேரன் தன் இதுவரைத்திய சம்பாத்யங்களையெல்லாம் விற்று, படத்தை எவரும் வாங்கி வெளியிட மறுத்த சூழ்நிலையில், தானே படத்தை வெளியிட்டிருக்கிறார். ஆட்டோகிராப் ஒரு சோதனை முயற்சியென்றும், படம் தோற்றால் தான் கிராமத்திற்கே திரும்பிப் போய்விடுவது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும் சேரன் சொல்கிறார். ஏ.ஆர்.ரகுமான், ஒளிப்பதிவாளர் கண்ணன், வசனகர்த்தா சுஜாதா எனக் களமிறங்கியிருக்கும் பாரதிராஜா, அர்த்தமற்ற திரைக்கதை வலுவற்ற ஒரு சொதப்பலைப் படமாகக் கொடுத்திருக்கிறார்.

இந்த மூவரது படங்களிலும் வெளிப்படுகிற

> ஒரு ஆண் தனது முப்பது வயதுக்குள் நிறையப் பெண்களைச் சந்திக்கிறான். பள்ளி, கல்லூரி, வேலையிடம், பயணங்கள் பக்கத்து வீடுகள் எனப் பல்வேறு பெண்களை அவன் சந்திக்கிறான். இதில் சில பெண்கள் அவனது ஆளுமையில், அவனது குணச்சித்திரத்தில் பல்வேறு தடங்களை விட்டுச் சென்றுவிடுகிறார்கள்.

செய்திகளென்றும் சில உண்டு. பாரதிராஜா இளைஞர்களக்கு இணையாக மட்டுமல்ல, 'ஹாலிவூட்'டுக்கு இணையாகவும் ?திரில்லர்? படம் கொடுப்பதுதான் சாதனை என நினைக்கிறார். கண்டு கொண்டேன் படத்திற்கு அப்புறம், அதைப்போல பார்த்திபன், காதல் கிறுக்கன் கொடுத்தமாதிரி, பாரதிராஜா கண்களால் கைது செய் கொடுத்திருக்கிறார். காதல் கிறுக்கன் என்பதைக் காதல் விடலை நடவடிக்கை எனவும் சொல்லலாம். கண்டு கொண்டேனில் நிராகரிக்கப்பட்ட ஒரு பையன், அநாதையான அப்பையன் தான் அன்பு செலுத்தும் பெண்ணைத் தன் உடமையாகப் பார்ப்பதற்கு நிறைய உளவியல் காரணங்கள் இருந்தது. காதல் கிறுக்கனில் பார்த்திபனின் பாத்திரமும், கண்களால் கைது செய்யில் வசீகரனின் பாத்திரமும் திமிர் பிடித்த ஆணிண் விசித்திர மனோபாவங்களை இட்டுக்கட்டிச் செய்யப்பட்டிருக்கிறது. பாரதிராஜாவின் பாத்திரப் படைப்புகளும் சரி, நடிகர் தேர்வுகளும் சரி, நடிப்புப் பாணியும், வசனங்கள் உச்சரிக்கப்பட்ட விதமும் என அனைத்துமே செயற்கையாக இருக்கிறது. ஆங்கிலப் படங்களில் வருகிற பிரெஞ்சு, ஜெர்மானியக் கதாபாத்திரங்கள் ஆங்கில மொழியை விநோதமான உச்சரிப்பில் பேசுவதாகக் கதைகள் இருக்கும். இன்னும் ரஸ்யக் கதாபாத்திரங்கள் பேசுகிற ஆங்கிலம் நக்கலாக எடுக்கப்பட்டிருக்கும். பாரதிராஜாவின் கண்களால் கைது செய் கதாநாயகியும், நாயகனும் வில்லன் பேசுகிற தமிழ், அப்படித்தான் தமிழ் மொழியை நக்கல் செய்வதாக இருக்கிறது. தமிழ் உச்சரிப்புகள் எல்லாம் விநோதமான நாக்குச் சுழற்சியுடன் வருகிறது. சுவிட்சர்லாந்தில் பிறந்த கதாநாயகன், உளவியல் கதைப் பின்னனி, பணக்காரக் கதைக் கரு, குட்டைப் பாவாடை அணிந்த கதாநாயகி, நுனிநாக்கில் பிறக்கும் ஆங்கிலம் போன்றவற்றைக் கொண்டு 'ஹாலிவுட் லெவலுக்குப்' படம் கொடுப்பதாக நினைத்துக்கொண்டு, பாரதிராஜா செய்திருக்கும் தமிழ் அழிச்சாட்டியம்தான் கண்களால் கைது செய் படம்

சமவேளையில் பார்வையாளனுக்கு எரிச்சலையும் தொடர்ந்து சோர்வையும் ஊட்டும் படம் கண்களால் கைதுசெய். ரகுமான் தனது மேற்கத்திய இசை முயற்சிகளிலேயே கவனம் குவிப்பது நல்லது. சகிக்க முடியாத பின்னணி இசையும், பாடல்களும் கொண்ட படம் கண்களால் கைது செய். இன்னொரு நீட்சியில் பிறிதொரு வகையிலான எரிச்சலைத் தரும் படம் தங்கர்பச்சானின் தென்றல். தங்கர்பச்சான் ஏற்கனவே



கண்களால் கைது செய்

கொடுத்த அழகி, சொல்ல மறந்த கதை போன்றவற்றின் அடிப்படையில் எதிர்பார்ப்புகளுடன் படம் பார்க்கப் போகிறவர்களுக்கு, ஏமாற்றத்தைத் தரக் கூடிய படம். பார்த்திபனின் பாத்திரப் படைப்பு முற்றிலும் இயல்பு நிலை குலைந்த பாத்திரப்படைப்பு மட்டுமல்ல, பார்வையாளனை அவமானப்படுத்தி எரிச்சல் படுத்தும் பாத்திரப் படைப்புமாகும். பார்வையாளன் குறித்து எந்தவிதமான அக்கறையுமற்று, மிகுந்த தன்னுணர்வுடன் தங்கர்பச்சான் உருவாக்கியிருக்கும் பாத்திரம், எழுத்தாளன் நலங்கிள்ளியின் பாத்திரம். எழுத்தாளன் நலங்கிள்ளியின் அகந்தையையும் அவனது விட்டேத்தியான பொறுப்பற்ற நடவடிக்கைகளையும் நாம் சகித்துக் கொள்ள வேண்டும் எனும் அளவில், அப்படியென்ன உதாரண குணங்களையும், உதாரணமான சமூகப் பண்புகளையும் கொண்டிருக்கிறான் நலங்கிள்ளி, எனும் அடிப்படையான கேள்விகளுக்கு படத்தில் பதிலேயில்லை. நலங்கிள்ளியின் பாத்திரத்தை அவனது வன்முறையான குணச்சித்திரத்துடன் ஏன் தமிழ் சினிமாப் பார்வையாளன் ஒப்புக்கொள்ள வேண்டும்? அவன் அப்படி உருவாகிவருவதற்கான அவனது சமூக உளவியல் பிண்ணனிதான் என்ன? தலித் பிரச்சினை, தனித்தமிழ்ப் பிரச்சினை எல்லாமும் துருத்திக்கொண்டு பிரச்சாரம் எனும் அளவில்தான் இடம் பெற்றிருக்கிறதேயொழிய, நலங்கிள்ளியின் ஒருங்கமைந்த இயல்பான மனித நடத்தையின் பகுதியாக அவைகள் இருக்கவில்லை. ஒரு வெளிப்படையான வெத்துவேட்டு அரசியல்வாதி போலத்தான் நலங்கிள்ளியின் பாத்திரப் படைப்பு அமைந்திருக்கிறது.


பொறுப்பான சமூக நடத்தையும் சமூக ஆவேசமும் கொண்ட ஒரு தமிழின் எழுத்தாளன், பெண்கள் குறித்து அவமானகரமான அசட்டையான நடத்தை கொண்டவனாக இருப்பது, இந்த இருபத்தியோராம் நூற்றாண்டின் இறுதியில் சகிக்கவொணாததாகும். ஜெயகாந்தனின் இறுமாப்பையும் அகந்தையையும், அவரது அக்கினிப் பிரவேசம் சிறுகதையையும், அதனது தொடர்ச்சியாக வந்த சில நேரங்களில் சில மனிதர்கள் நாவலையும், தொடர்ந்து வந்த திரைப்படத்தையும், அவரது ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ரங்காவையும் கொஞ்சமேனும் அறிந்தவர்களுக்கு, நலங்கிள்ளியின் பாத்திர ஆதாரங்களும், உமாவினது பாத்திரச் சித்திரிப்பும் எங்கிருந்து வருகிறது எனப் புரிந்து கொள்வது சிரமமில்லை. எதிர்த்திசையிலான 'சிலநேரங்களில் சில மனிதர்கள் நாயகி' பாத்திரம்தான் தென்றல் கதாநாயகியின் பாத்திரம். எழுத்தைப் பெண் வேட்டைக்குப் பாவிக்கும் ஆண் எழுத்தாளர்களைச் சித்திரித்த இந்துமதியின் சிறுகதையொன்று கூட ஞாபகம் வருகிறது. தங்கர்பச்சானை விட, இந்துமதி இதனைப் பற்றி இருபது ஆண்டுகளுக்கும் முன்பாகவே பொறுப்புடன் எழுதியிருக்கிறார்.

நூற்றாண்டு காலப் பெண்நிலைவாதக் கருத்தியலில், தமிழில் அதிகரித்து வரும் பெண்மொழிப்

**- யமுனா ராஜேந்திரன்**

படைப்புகள் சார்ந்த விவாதங்கள், சயாதீனமாகச் சிந்திக்கத் துவங்கியிருக்கும் பெண்கள் என புதியதொரு பிரக்ஞை உருவாகியிருக்கிற தமிழ்ச் சூழலில், எழுத்தாளனது கருவைச் சுமந்து, அவனது நினைவிலேயே வாழ்ந்துவிடத் துடிக்கும் பெண்ணைப் படைப்பதும், அதற்குக் காரணமான பொறுப்பற்ற எழுத்தாளனைப் பென்னாம் பெரிய தமிழினப் புரட்சிகர எழுத்தாளனாகச் சித்தரிப்பதும், திரைக்கலைஞன் எனும் அளவில் தங்கர்பச்சான் என்பவரின் அகந்தையின் பாற்பட்ட வெளிப்பாடாகும். அழகியிலும், சொல்ல மறந்த கதையிலும் இருந்த கதைக் கட்டுக் கோப்பும், பாத்திரப் படைப்பும், இயல்பு நிலையும் இந்தப் படத்தில் துப்பரவாக இல்லை. முற்றிலும் அகவயமான பாத்திரச் சித்தரிப்புகள், மிகை யதார்த்தச் சம்பவங்கள் கொண்டு அப்பட்டமான பிரச்சாரப் படமாக இயங்குவதால், தென்றல் படம் பார்வையாளர்கள் எனும் அளவில் எம்மை நெருங்கவே இயலாது எஞ்சிவிடுகிறது.

சேரன் பொதுவாகப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு, அதனை வெகுஜன சினிமாச் சட்டகத்தில் பொறுப்பாகத் தரமுயல்கிற இயக்குநர் எனலாம். அவருடைய பொற்காலம், பாரதி கண்ணம்மா, வெற்றிக் கொடிகட்டு, தேசிய கீதம் போன்றன அப்படிப்பட்ட படங்களாக இருந்தன. தங்கர்பச்சானின் அழகி படம் வெளியானபோது அதனை அதிகமும் பாராட்டியவர்களில் சேரனும் ஒருவர். அழகி திரைப்படம் பள்ளிக் காதலி மறுபடி வாழ்வில் எதிர்படும்போது, ஒரு ஆணின் மனதினுள் தோன்றும் மனிதத் தன்மையை விவரித்த படமாக இருந்தது. அழகி படத்தினுடைய ஒருவிதமான தர்க்க நீட்சியாகக் கூட நாம் சேரனுடைய ஆட்டோகிராப் படத்தினை எடுத்துக் கொள்ளலாம். ஒரு ஆண் தனது முப்பது வயதுக்குள் நிறையப் பெண்களைச் சந்திக்கிறான். பள்ளி, கல்லூரி, வேலையிடம், பயணங்கள், பக்கத்து



ஆட்டோகிராப்

வீடுகள் எனப் பல்வேறு பெண்களை அவன் சந்திக்கிறான். இதில் சில பெண்கள் அவனது ஆளுமையில், அவனது குணச்சித்திரத்தில் பல்வேறு தடங்களை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். மனிதர்கள் குறித்த அவனது அணுகுமுறைகளில் இத்தகைய பெண்கள் நிரந்தரமான, அற்புதமான பாதிப்புகளையும் விட்டுச் செல்கிறார்கள். ஒரு நன்றிக் கடன் போல இந்தப் பெண்களை நாம் மனதுக்குள் சில சந்தர்ப்பங்களில் நினைத்துப் பார்க்கிறோம். இந்தப் பெண்கள் அனைவருடனும் ஏதோ ஒரு வகையில் நாம் பிணைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் வாழ்க்கையின் துரதிருஷ்டம், மனைவியெனும்

(தொடர்ச்சி vi பக்கம்)


ஐ.நா.வை நோக்கி
பொங்குதமிழ்
05.04.2004, திங்கள் 14.00 மணி, Geneva-UNO
தமிழீழத் தனிஅரசை நோக்கி
FOR INALIENABLE RIGHT TO
-DETERMINATION OF TAMIL PEOPLE
TAMIL EELAM
அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள்


தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம் எனும்
தன் மானக்கொடி ஏந்தி, பிரபாகரன் எனும் பெருநிதியே என முழக்கமிட்டு
ஐ.நா. முன்றலிலே ஆர்பரித்தெழுவதற்காய்
அனைத்துலகத் தமிழினமே!
அலைகடலெனத் திரண்டெழுந்து வாருமென, அறைகூவல் விடுக்கின்றோம்.



தமிழே எங்கள் உயிர்!
அந்த உயிரே எங்கள் தலைவன்.
அவனே எங்கள் வழிகாட்டி என
அகில உலகினுக்கு உரக்கச் சொல்வோம்.
விழிகளில் வீரம் சிரித்திடும் தமிழரே!
விடுதலைக் கீதம் பாடிடும் மறவரே!
கெடு தலையைத் தருகின்ற அடிமை நீங்கி
விடுதலை பெறுவதற்கு
வீறுகொண்டெழுவோம் நாம்....
எதிர்வரும் பகையை ஏறிட்டு நோக்கி,
கொதி நெருப்பாகி குவலயம் தன்னில்...
தமிழர் நாம் என்றும்....
தலைவனின் பின்னே
தமிழீழப் பரணி பாடுவோம்.
எழுக எழுக ஈழத் தமிழனே எழுக!
வருக வருக ஐ.நா மன்றுக்கு வருக!
பொங்குதமிழில் புரட்சி பூபாளம் பாடி
சங்கத் தமிழில் சதுர்முகம் ஆடி.....
வங்க கடலின் அருகே வரலாறு
படைக்கும்...
எங்கள் நிலம் எமக்கு வேண்டும்!
புலம் பெயர் தமிழனே புலியாய் எழு....
புரட்சி பூபாளம் பாடி சங்கொலி முழங்கு!
விழியழிந்தும் வாழலாம்.
மொழி அழிந்தால் வாழ்வில்லை.
உரிமை இழந்த நாடு
உயிரற்ற வெறும் கூடும்...
உணர்வாய் தமிழா!
உரிமைக் குரலாய்.
எழுவாய் தமிழா!
அணியாய்த் திரள்வாய்
ஐ.நா மன்றில் எழுவாய்....

- தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் கிளை.
- அனைத்துலகத் தமிழர் ஒன்றியம்.
- உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு.
- தமிழர் புனர்வாழ்வு கழகம்.
- தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு சுவிஸ் கிளை.
- விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம்.
- உலக தமிழர் ஒருங்கிணைப்பு குழு - கல்விச்சேவை.
- விடுதலைப்புலிகள் விளையாட்டுத்துறை.
- தமிழீழவிடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு சுவிஸ்.
- ஊடகப் பணிமனை -சுவிஸ் கிளை.
- தமிழர் இல்லம்.
- தமிழர் கலாச்சாரப் பேரவை.
- தமிழீழ விடுதலைப் புலிகள் பிரச்சாரப் பிரிவு-சுவிஸ் கிளை.
- தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு - சுவிஸ்கிளை

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**




# மணல் நகரம்

ஒருநாள் காலை சிவப்புத் தலையன் கோல்காவும், குண்டுப் பையன் வித்தியாவும், நானும் கடலுக்குச் சென்றோம். அதிகாலை நேரமானதால் உருளைக் கற்கள் பனியில் நனைந்து எங்களுடைய பாதங்களைக் குளிர்வித்தன. கடல் நீர் அசையாது, அமைதியாக, கரும்பச்சை நிறத்தில் பளிங்குபோல் இருந்தது. பச்சை வண்ணக் கண்ணாடியைப் போலிருந்தது. 'ஏய், அது எப்படி இருக்கிறது பார்த்தாயா ?' என்று கோல்கா கேட்டான். மிகப் பெரிய மணல்திட்டை நோக்கி அவன் ஜாடை காட்டினான்.

'அந்தக் கிறுக்கனுக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா ?' என்று வித்தியா சொன்னான்.

அந்த மணல்திட்டை நோக்கி என் பார்வையைத் திருப்பினேன். அங்கு வயதான ஓர் ஆள் ஏதோ செய்துகொண்டிருந்தார். கறுப்பு நிறக் குளியல் உடை அணிந்திருந்த அவர் முதியவராகவும் ஒடிசலானவராகவும் இருந்தார். துண்டால் தலைப்பாகையைப்போல் கட்டியிருந்தார். திட்டிலிருந்து நாங்கள் வெகுதூரத்தில் இருந்ததால் அவர் என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வெறுமனே மணலைத் தோண்டிக் கொண்டிருக்கிறாரா அல்லது எதையேனும் புதைத்து வைக்கிறாரா ?

'அவரைத் திட்டுவோமா ?' என்று கோல்கா கேட்டான். அன்னியர் யாரேனும் வந்தால் அவரை நெருங்காமல் அவரை நோக்கி அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டே அணுகுவது எங்களுக்கு கைவந்த கலை. வழிநெடுக நாங்கள் நடனமாடுவோம். இயற்கைக்கு மாறான முறையில் சிரிப்போம். முகங்களைக் கோணலாக வைத்துக்கொண்டு கேலி செய்வோம். எங்களுடைய சேஷ்டைகளை யாராலும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் தாங்க முடியாது.

'எப்படி, அந்த ஆளைக் கேலி செய்வோம் ?' என்று கோல்கா திரும்பவும் கேட்டான். 'வேண்டாம், அந்த ஆள் கிழவனாக இருக்கிறார், பாவம்' என்றான் வித்தியா.

'முதலில் ஒருமுறை கடலில் குளித்துவிடலாமே ?' என்று நான் யோசனை சொன்னேன்.

'நீ ஒரு கோழை' என்று என்னை நோக்கி ஆத்திரத்துடன் காறித் துப்பிவிட்டு கோல்கா நீரில் குதித்தான்.

அப்போதெல்லாம் நாங்கள் வெகு நேரம் நீருக்குள்ளேயே கிடப்போம். யாரும் நேரத்தைப் பார்ப்பதில்லை. குளிரினால் எங்கள் உடல் நீல நிறமாகி, சிலிர்த்து, பற்கள் தந்தியடிக்கும்வரை நாங்கள் குளிப்பது வழக்கம். குளித்து முடித்து வெளியேறிய உடன் அந்த ஆள் அங்கிருந்து போய்விட்டதையே முதலில் பார்த்தோம். அவர் அங்கிருந்து போய்விட்டதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்றாலும்கூட அந்த மணல்திட்டை நோக்கி ஓடினோம்.

அந்த ஆள் போய்விட்டார், ஆனால் நாங்கள் சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு அழகான மணல்வீட்டைக் கட்டிவிட்டுப் போயிருந்தார். உருளைக் கற்களையும், கடல் பஞ்சுகளையும், இரும்புத் துண்டுகளையும், கண்ணாடித் துண்டுகளையும் பயன்படுத்தி அற்புதமான அழகுடன் அவர் கட்டியிருந்த வீட்டைப் பார்த்து நாங்கள் மெய்மறந்து நின்றுவிட்டோம்.

எங்களுக்கு ஏற்பட்ட ஆரம்ப அதிர்ச்சி நீங்கியபோது வித்தியா சொன்னான்: 'வாவ், அந்தக் கிழவன் கட்டியிருப்பதைப் பாரேன்!, அதைக் குண்டுபோட்டுத் தகர்க்கவேண்டும்போல் இருக்கிறதா ?' என்று கோல்கா கேட்டான்.

'இதை அழித்துவிடுவது நன்றாயிராது' என்றேன் நான். மணலில் உட்கார்ந்துகொண்ட நாங்கள் அந்த அற்புதமான மாளிகையை ஆராய்ந்தோம்.

கதகதப்படைந்த நாங்கள் மிகக்குறைவாகவே பேசினோம். நாங்கள் உதிர்த்த ஒரு சில சொற்களும் எங்களுடைய அறிவுத் திறனைப் பிரதிபலிப்பதாக இல்லை.

'வாவ்..!' என்றான் வித்தியா. 'அற்புதம்' என்று கோல்கா பாராட்டினான். நானும் ஒப்புக்கு எதையோ சொல்லி வைத்தேன். பின்னர் நாங்கள் குளிப்பதும் கரையேறுவதுமாக இருந்துவிட்டு கடற்கரையிலிருந்து வெளியேறினோம்.

அடுத்த நாளும் அந்த முதியவர் மணல் திட்டுக்கு வந்து அந்த மாளிகைக்குப் பக்கத்தில் ஒரு பஜாரையே கட்டிவிட்டுச் சென்றிருந்ததைக் கண்டோம். அதில் கட்டப்பட்டிருந்த சதுக்கத்தின் மாதிரி, நிஜ சதுக்கத்தைப் போலவே குதிரைகள் தண்ணீர் குடிக்கும் நீரூற்றையும், முயல் வளையையும், சுவரொட்டி ஒட்டுவதற்கான வட்டவடிவமான இடத்தையும் கொண்டிருந்தது. அந்த முதியவரைப் பார்த்து நாங்கள் ஏன் பயந்தோம், அவருடன் பேசிப்பழக ஏன் முயற்சிக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. அவர் கடற்கரையில் இருந்தபோது தூர நின்று வேடிக்கை பார்த்த நாங்கள் அங்கிருந்து அவர்போனதும் புதிதாக என்ன கட்டியிருக்கிறார் என்பதைக் காண ஓடிச்சென்றோம்.

வித்தியா என்று நினைக்கிறேன். அவன் ஒரு கார் இஞ்சினின் கீறல் விழுந்த பிஸ்டனையும் வட்டவடிவ பித்தளை சோப்புப் பெட்டியின் மூடியையும் இன்னும் சில குப்பியையும் கொண்டு வந்திருந்தான். அவற்றை அந்த மணல் மாளிகைக்குப் பக்கத்தில் போட்டு விட்டுப் போன நாங்கள், அடுத்த நாள் அந்தப் பிஸ்டனைக்கொண்டு ஒரு மசூதி கட்டப்பட்டிருந்ததையும், பஜாருக்கு மேலே அந்த சோப்புப் பெட்டி மூடி குடைபோல நிறுத்தப்பட்டிருந்ததையும் கண்டு வியந்து போனோம்.

இப்போது நாங்கள் வாழ்க்கையில் ஒரு புது அர்த்தத்தையே கண்டோம். பைத்தியக்காரர்களைப்போல் குப்பைகளைக் கிளறி அந்த முதியவருக்குப் பயன்படும் என்று நாங்கள் நினைத்தவற்றை எல்லாம் கடற்கரைக்கு எடுத்துச் சென்றோம். அந்த மணல் நகரம் பெரியதாகி வந்தது. பஜாரைத் தாண்டி ஒரு சாம்பல் நிறக் கல் வேயப்பட்ட அந்த மாளிகையையும் ஒரு பெரிய தொழிற்சாலையையும் (அதனுடைய பிரதானக் கட்டிடமே நாங்கள் கொண்டுபோய் போட்ட ஒரு பெட்ரோல் டின்னைக் கொண்டு கட்டப்பட்டிருந்தது) இணைத்தது.

சாலைக்கு வலப்புறம் ஒரு கிராமம் இருந்தது. அதனுடைய வீடுகள் மாடிக் கட்டிடங்களையும் சமதளமான கூரைகளையும் கொண்டிருந்தன. எண்ணெய் டின்களும் எண்ணெய் டாங்குகளும் கொண்ட நிஜ எண்ணெய்க் கிடங்கு போன்ற அமைப்பும் கட்டப்பட்டிருந்தது.

அதற்கு அப்பால் ஒரு தானிய சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டிருந்தது. மீன் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து நாங்கள் திருடிச்சென்ற இரும்புத் தகடுகளைக் கொண்டு அது அழகுபடுத்தப்பட்டிருந்தது. சரிந்த படிக்கட்டுகளுடன் கூடிய சுவர்களும் நடுவில் ஒரு கருப்பு வளையமும் வைத்துக் கட்டப்பட்டிருந்த ஒரு வட்ட வடிவ அமைப்பு என்னவாக இருக்கும் என்பது பற்றி நாங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தோம். அது ஒரு விளையாட்டரங்கமாக இருந்தது என்பதைப் பத்தாண்டுகளுக்குப் பின்னர்தான் நான் உணர்ந்தேன். அச்சமயம் எனது நிர்மலமான கடல்புற நகரில் ஒரு விளையாட்டரங்கம் கூட இல்லாதிருந்தது. அச்சமயம் மாஸ்கோவிலுள்ள டைனமோ ஸ்டேடியம் கூட வரைபட நிலையில்தான் இருந்தது.

அந்த மணல் நகரம் பிரபலமடைந்து வந்தது. குழந்தைகளும் பெரியவர்களும் அதைப் பார்த்து இரசித்து மகிழ்ந்தனர். இதில் விந்தை என்னவெனில் எந்த ஒரு அழிவுகர சக்தியும் அந்த மணல் நகரின் அழகைக் கண்டு பின்வாங்கி விடுவதுதான். எனது முரட்டு நண்பர்கள் யாரும் அந்த மாளிகையையோ, விளையாட்டரங்கையோ, தொழிற்சாலையையோ அழிக்க முயன்றதாக எனக்கு நினைவில்லை. நான் பெரியவனானபோது எமது ஆளரவமற்ற கடற்கரையில் அந்த மணல் நகரைக் கட்டிய பெயர் தெரியாத அந்த முதியவரை அடிக்கடி நினைத்துக் கொண்டேன். அவர் யாராக இருக்கும் என்று தெரிந்துகொள்ள முயன்றேன். அந்த பொம்மை நகரைக் கட்டுவதற்கு அவர் ஏன் தமது ஓய்வுநேரத்தைச் செலவிடவேண்டும் ?

அந்த முதியவர் குழந்தைப் பருவத்தில் அதிகத் துன்பத்திற்கு ஆளாகியிருக்கவேண்டும். குழந்தையாக இருந்தபோது தமக்குக் கிடைக்காத இன்பத்திற்கு ஈடுசெய்துகொள்ள இந்த மணல் நகரைக் கட்டியிருக்க வேண்டுமென்று சிந்தித்தேன். ஆனால் குழந்தைகள் இவ்வளவு திட்டமிட்ட முறையில் எதையும் கட்டுவதில்லையே!

உலகைப் பற்றிய அவர்களது கண்ணோட்டமே வித்தியாசமானது. குழந்தைகள் விளையாடும்போது சோப்புப்பெட்டி ஒரு படகாகவோ, குழந்தைகளின் தள்ளு வண்டியாகவோ அல்லது டேங்காகவோ பயன்படும். அதற்கு சக்கரங்களும் தேவையில்லை. குழந்தையின் கற்பனைக்கு விளக்கங்கள் அவசியமில்லை. ஆனால் ஒரு முதியவரின் கற்பனை அர்த்தமுள்ளதாக இருக்கும் அல்லவா! அந்த முதியவர் உருவாக்கியிருந்த ஒவ்வொரு அமைப்பையும் பார்ப்பவர்கள் இன்னின்னது என்று புரிந்துகொள்ளுமளவிற்குத் தெளிவாக உருவாக்கப்பட்டிருந்தது. அவர் என்ன, அங்கீகாரம் மறுக்கப்பட்ட மனைச் சிற்பக்கலை வல்லுனரா ?

அவருடைய வாழ்க்கைக் கதையை நான் உடனடியாகப் புனையத் தொடங்கிவிட்டேன்...

மிகுதி அடுத்த இதழில்...

**அனதொலி மர்குஷா (ரஸ்யா)**
**ஆங்கில வழி தமிழில்**
**சா - தேவதாஸ்**




வீடுகள், நிலம் மற்றும் Appartements வாங்க
மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி
பெற்றுத்தரப்படும்.

**சம்யுக்தா**

*Finance & Investements*
La Chapelle - Tél. Port.: 06 68 24 61 61




Registration
en Cours

Pub-Fr

இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சரவணம் முத்துலிங்கம், செல்வன் றொபேட் ஆரோக்கியசாமி ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவெனக் குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.



# சிறுவர் முற்றம்

## குறுங்கதை

### வெகுமதி



கொதிக்கும் வெயிலையும் -
குடைபிடித்துப்போன மனிதனையும் -
குடையையும், மின் கம்பம் வைத்த கண்
வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தது.

'என்ன உலகம்' என்று தனக்குள்ளேயே
அது சலித்துக்கொண்டது.

பெருமூச்சோடு மின்கம்பம் சொல்லியது:

'நிழல் கொடுக்கும்
குடைக்கு வெயில்'

- காசி ஆனந்தன்.

## அறிந்து கொள்ளுங்கள்

### உலக வரலாற்றில் முக்கிய நாடுகள்


- பண்டைய நாகரிகம் என்று உலக வரலாற்றினை ஆராய்ந்தால் இந்தியா, எகிப்து. சுமேரியா, சீனா, கிரேக்கம். இத்தாலி என்று சிறப்பிடம் பெறுகிறது.
- நவீன உலக வரலாற்றில் இங்கிலாந்து ஓர் முக்கிய இடம் வகிக்கிறது. ஆசியா முழுவதும் கட்டி ஆண்ட சாம்ராஜ்யம் இது. 'சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்' என்று இது சிறப்பிக்கப்படுகிறது. இங்கிலாந்திற்கு இணையான மற்ற நாடு பிரான்ஸ்.
- இங்கிலாந்து பகை உலக வரலாற்றில் பல போர்களை சந்திக்க வைத்தது. கீழ்திசை நாடுகளின் பகை நீடித்தது. பிரஞ்சுப் புரட்சி, நெப்போலியன் வளர்ச்சி உலக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. நெப்போலியனை நெல்சன் (இங்கிலாந்து) வாட்டர் லூவில் தோற்கடித்ததும், நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பும் ஓர் வரலாற்று முக்கியம் வாய்ந்தது.
- அடுத்து ஜெர்மனி, பலமிக்க ஐரோப்பிய நாடு. ஹிட்லர் – இரண்டாம் உலகப் போர் என உலக வரலாற்றில் ஓர் முக்கிய இடம் பெறும் நாடு இது.
- மாஜினி, கரிபால்டியால் ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலி உலக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிற நாடு. முசோலினியை உலக வரலாறு மறக்க இயலாது எனலாம்.
- இரண்டாம் உலகப் போரில் ஜப்பான், அதன் அழிவு, பிறகு 1947 க்குப் பின் அதன் வளர்ச்சி உலக வரலாற்றில் அறியப்படவேண்டிய ஒரு அரிய குறிப்பாகும்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வட அமெரிக்கக் கண்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதயம், அமெரிக்க சுதந்திரப் போர், உலகப் போர்களில் அதன் பங்கு, பிறகு ஐ.நா. சபையில் அதன் பங்கு, நவீன காலத்தில் அதன் அரசியல் தலையீடு, அதன் வெளிநாட்டுக் கொள்கைகள் உலக வரலாற்றில் ஒரு முக்கியமான ஒன்று ஆகும்..
- மகாபீட்டர் காலத்திலும், காதரின் காலத்திலும் வளர்ந்த ருஷ்யா உலக வரலாற்றில் சிறப்பிடம் பெரும் ஒரு நாடு. ஐரோப்பா – ஆசியா ஆகிய இரு கண்டத்திலும் பரவியிருந்த பெரிய நாடு. ஜார் மன்னர்களின் கொடுமைக் காலம். 1917 ருஷ்யப் புரட்சி, நெப்போலியன் ருஷ்யப் படையெடுப்பு, லெனின், ஸ்டாலின்... கம்யூனிச வளர்ச்சி, உலக வல்லரசாய் வளர்ந்த விதம்–சமீபத்தில் ருஷ்யாவில் ஏற்பட்ட அரசியல் மாறுதல் என உலக வரலாற்றில் மிக முக்கியமான இடம் வகிக்கிறது இந்நாடு.
- இந்தியா, பர்மா, சீனா, ஜப்பான், கொரியா–என ஆசிய நாடுகளின் வரலாறும் உலக வரலாற்றோடு பின்னிப் பிணையக் கிடக்கிறது. உலகின் பழம்பெரும் நாகரிக நாடுகளான இந்தியா, சீனா உலகிற்கு அளித்த நன்கொடைகள் அதிகம்.
ஆஸ்திரியா, ஹங்கேரி, போலந்து போன்ற நாடுகளின் வரலாறும் நவீன உலகின் வரலாற்றோடு கலக்கிறது.
- எந்த நிகழ்ச்சியிலும் கலக்காத சுவிட்சர்லாந்து போன்ற நாட்டையும் நாம் உலக வரலாற்றில் காணமுடியும்.தற்கால ஒலிம்பிக் போட்டி முதன் முதலில் 1896ம் ஆண்டு எதென்ஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 13 நாடுகள் கலந்துகொண்டன.

## கதை முற்றம்

### ஓநாய் வாயில்

வேந்தன் தன் கழுதையுடனும் நாயுடனும் பயணம் செய்தான். வழியில் ஓரிடத்தில் அவற்றை நிறுத்தி விட்டுப் படுத்துத் தூங்கினான்.

அங்கே அழகான ஒரு புல்வெளி இருந்தது. அதில் பசும்புல் நிறைய முளைத்திருந்தன. முள்செடி ஒன்றுகூட இல்லை. இதைப் பார்த்ததும் வேந்தனுடைய கழுதைக்கு ரொம்ப குஷி 'ஆகா, இன்னிக்கு நமக்கு நல்ல விருந்துதான்' என்று எண்ணிக் கொண்டு புல்லை மேயத் தொடங்கியது.



ஆனால் கழுதைகூட வந்த நாய்க்கு ரொம்ப பசி எடுத்தது. நாய் புல்லை தின்று கொண்டிருந்த கழுதையைப் பார்த்து, 'அன்பு நண்பனே! எனக்கு ரொம்ப பசிக்கிறது. கொஞ்சம் நீ கீழே படு என்பங்கு ரொட்டி உன் முதுகில் எசமான் வைத்து இருக்கிறார். என் பங்கு ரொட்டியைக் கூடையிலிருந்து நான் எடுத்துக்கொள்ளுகிறேன்' என்று வேண்டியது.

கழுதை, நாய் கேட்டது தன் காதில் விழாததுபோல் பதில் ஏதும் சொல்லாமல் புல்லைத் தின்றுகொண்டிருந்தது. ஒரு கணம் கழிந்தால் ஒரு வாய்ப்புல் தின்னாமல் போய்விடுமே என்று பதில் ஒன்றும் கூறாமல் இருந்தது.

நாய் மீண்டும் கேட்டது, உடனே கழுதை 'நண்பனே! நம் எசமான் தூங்கி எழுந்து வரட்டும், காத்திரு. இதுதான் என் யோசனை. அவர் எழுந்தவுடன் தாமதிக்காமல் உன் உணவைக் கொடுப்பார்' என்றது.

அப்போது பக்கத்துத் தோப்பிலிருந்து ஓநாய் ஒன்று கழுதை இருக்கும் இடத்திற்கு வந்தது. அது மிகவும் பசியாயிருந்தது. இதைப் பார்த்த கழுதை பயந்து நாயை உதவிக்குக் கூப்பிட்டது. உடனே நாய், 'நண்பனே! சீக்கிரம் தப்பி ஓடு. இதுதான் என் யோசனை. நம் எசமான் எழுந்திருக்கட்டும். அவர் தாமதமின்றி உனக்கு உதவவருவார். உனக்குத்தான் புதிய லாடம் அடிக்கப்பட்டுள்ளதே. நீயே ஓநாயை உதைத்து அதன் வாயைக் கிழித்து விடு. என் சொல்லை நம்பினால் நீ அதை அடித்துக்கொல்லலாம்' என்றது.


இதற்குள் ஓநாய் கழுதையின் மீது பாய்ந்து அதனை கடித்துக் கொன்றது.

'நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் கழுதையின் நிலைதான் எல்லோருக்கும்' என்று நினைத்தபடி நாய் தன் எசமானின் காலடியில் போய் படுத்துக்கொண்டது.

- க. சச்சிதானந்தன்

## கவிதை முற்றம்

### தென்னை மரம்



ஓங்கி வளர்ந்த மரம்
ஊருக்கு உதவும் மரம்
தாங்கி நிற்கும் இளநீரை
தாகம் தீர்க்க தந்திடும்

நீண்டு இருக்கும் கீற்று
நித்தம் வீசிடும் காற்று
வேண்டிய மட்டும் தேங்காயை
வளர்த்து நமக்குக் கொடுக்கும்

கீற்றினிலே கூட்டைக் கட்டி
குருவி வாழ்வை நடத்திடும்
அதன் நிழலில் படுத்தால்
ஆழ்ந்து தூக்கம் வந்திடும்!

- பொன். குமார்.

# (ஏ)மாறியது எப்படி? (13-1)

## - தமிழ்க்கவி -

### `அண்ணோய்... அண்ணோய்...` என்று ஒரு குரல் எழும்பிப் பார்த்தால் ஒருவரையும் காணவில்லை...!

உந்தக் கலையாடுறதப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்? அறிவியல் பூர்வமா எனக்குச் சொல்லத் தெரியேல்ல. ஆனா உந்தக் கலையாடிச் சொன்னதெல்லாம் நான் கேட்டதெல்லாம் பலிச்சிருக்கு. என்ர வாழ்க்கையில் இன்னும் விடுபடாம இருக்கிற புதிர்கள்ள இதுவுமொன்று.

நான் சின்னப்பிள்ளையா இருக்கயுக்க, புலோலியிலயிருந்து ஒரு ஆச்சி வாறவ. அவவ ஏதும் கட்டுக்கேக்கத்தான் அழைக்கிறவர்கள். எங்கட வீட்டில என்ன பிரச்சனையோ தெரியாது. ஆத்தை வருந்தமாக் கிடந்த நேரம். அவவ கூட்டி வந்தவை. குட்டையான வெள்ளைக்கிழவி, மேல் சட்டை போடாம மாறாடி போட்டிருந்தா. கொண்டை அன்னு கொண்டை. காதில கடுக்கன் மூக்குக்கு மின்னி எண்டும் போட்டிருக்கும். 'சிவப்பு சங்கிடிச் சேலை. கட்டம் போட்ட மஞ்சள்க்கரை தட்டு விழுத்திக்கட்டி' பார்க்க அம்மன் போலதான். ஒருவரும் கிட்டப் போகவே முடியாது.

அவருக்கு நிலத்தில் சாணி தெளிச்சு விட்டால் அதில் நடுவில் போய் நிற்பார். கையில் வேப்பிலைக் கொத்து மடை கிடை பரவவில்லை. மனிசி மூன்று தரம் ஏவற விட்டது. எல்லாரும் பயபக்தியாப் பார்த்துக்கொண்டு நிற்க, வாய்க்குள் ஏதுவோ முணுமுணுத்தது. பிறகு ஒரு ரெண்டு நிமிடம் கழித்து. ஆவ்... ஆவ் என்று ஏவறை விட்டா. 'அவள் வெளிக்கிட்டுட்டாள், விடு' என்ற வார்த்தையைச் சொன்னார். பிறகு சாணி தெளிச்ச இடத்துக்கு வெளியில் வந்து. என்ன சொன்னது என்று எம்மைக் கேட்டார்.

அவள் வெளிக்கிட்டிட்டாளாம் எண்டுதான் சொன்?னது என்றார் ஆத்தை. கிழவிக்கு கண்ணால ரெண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. `எட அவளவுதான் காலம்` என்றார்.

ரெண்டு மூன்று நாளில் படுக்கையில் கிடந்த ஆத்தை வள்ளிப்பெத்தா செத்துப்போனார்.

பிறகு, இதுகும் ஒரு மறக்க முடியாத சம்பவம் தான். இதை ஏன் இங்கு குறிப்பிட வேண்டி வந்தது என்றால் அண்மையில் (06.04.2003) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் குத்தகைக்கு விட்டிருந்த எங்கள் நிலத்தை செய்கை பண்ணிக்கொண்டு வருபவர், தான் காவல் குடிலில் இரவில் படுக்க முடியவில்லை என்று சொன்னார்.

ஏன்? ஏன்று, கேட்டேன். படுத்து கண்ணயர யாரோ வந்து `அண்ணோய்... அண்ணோய்...` என்று எழுப்பி விடுவதாயும், எழும்பிப் பார்த்தால் ஒருவரையும் காணவில்லை என்றும் சொன்னார். இது தினசரியாக நடக்கிறது என்றும் சிலவேளை பயமாக இருப்பதாகவும் கூறினார்.

இது அப்பு சமளங்குளத்தில் அடாத்தாக வெட்டிய காணி. ஈரற்பெரியகுளம் தண்ணிபோற ஆத்துக்கு மேல்கையில ஒரு ரெண்டேக்கர். அதிலயிருந்து அங்கால ஒரு ரெண்டேருக்கருக்கு கொப்பு நேரி வைத்தார். பழைய காணிக்கு காட்டு வேலி போடப்பட்டிருந்தது. அதற்குத் தெற்குப் பக்கம் காடுவெட்டத் தொடங்கிய மூன்றாம் நாள் ஒரு கூமா மரத்தைத் தறிக்க, அது பழைய காட்டுவேலிக்கு மேலாக் குறுக்க விழுந்து விட்டது. நல்ல பருத்த பாடான மரம் நாங்கள் அதுக்கு மேலால ஏறி நடந்து காட்டு வேலியைக் கடப்போம்.

அந்தக் காடு வெட்டிக் கொளுத்தி, புரட்டாசியில் நெல்லுக் கொத்தியாகி விட்டது. அதற்கு முதல் வெட்டிய காணிக்கு வரம்பு போட்டு வயலாக்கியாச்சு. இது குளப்பங்கில் இல்லை. அடாத்துக் காணி, இந்தக் காணிக்கு ஈரப்பெரியகுளம் தண்ணிபோற வாய்க்காலத் தடுத்துக் குத்துக்கட்டி தண்ணீரைத் தேக்கி நீர்ப்பாசனம் செய்தோம். சட்ட மறுப்புத்தான். அதில் எங்களுக்குள்ளேயே பிரச்சனைகள் இருந்தன.

எங்களுக்குப் பக்க வாட்டா மேற்கால காணி செய்யிற கட்டை வேலுப்பிள்ளைக்கும் தண்ணிபாயும். ஆனா அப்பு விடமாட்டார். எங்கட வயல் பாய்ந்து முடிந்ததும் தண்ணீரை மறுபடி ஆற்றுக்குள் திருப்பி விட்டுவிடுவார். மடை முகத்து வயலால் உள்ளே வரும் நீர், வயல்களை நிரப்பி வடிமடைமூலமாக ஆற்றில் விழுந்துவிடும். காடு வெட்டும்போது ஒரு பெரிய கொட்டுப்பாலை கிடந்த வயல் அது. பாலை வேரெல்லாம் பத்தி கிடங்காகப் போயிற்று. அதை தேக்கினாற்றான் வேலுப்பிள்ளையர் தண்ணி கொண்டு போகலாம். ஆனால் அதைக் தேக்க அப்பு விடமாட்டார்.

ஏனென்றால் உந்தக்குந்து கட்டினால் எல்லாற்ற வயலுக்கும் தண்ணீர்பாயும் என்று, அவர்களையெல்லாம் தனித்தனிய போய் அப்பு கேட்டவர். இப்பிடி ஆற்றை மறிச்சா எல்லாருக்கும் தண்ணி பாயுந்தானே. வாங்கோ குந்து கட்டுவம் என்று.

`ஹ... சிங்களவனுக்குப் போறதண்ணிய மறிச்சுக்கட்டிப்போறியயோ? இக்கணம் அவன் விடுவனோ` அது இதெண்டு ஞாயங் கதைச்சினம். அப்பு வாறது வரட்டு எண்டு கட்டினார்.

இது போதாமல், ரத்தினத்தார், சுந்தரத்தார், தம்பிராயர் எல்லாருமாக ஈரற்பெரியகுளத்துக்கு 'பெட்டிசன்` எழுதிப் போட்டார்கள். `இப்பிடி கந்தப்பன் ஆற்றை மறிக்கிறான்` என்று.

முதல் `ஆராச்சி மாத்தயா` வந்தார். அப்பு, அவருக்கு அரைப்போத்தல் சாராயம் எடுத்து, மரைவத்தல் கறியோடு பச்சையரிசிச்சோறும் கொடுத்துச் சந்தோசமாக அனுப்பினார்.

அவர்காணியைப் பார்த்துவிட்டு `அதிங் பெரச்சனையில்ல` என்று விட்டுப் போட்டார். அது நடந்தபிறகு தண்ணீர் கேட்டு வந்தால் கொடுப்பாரா..?

இது இப்பிடியிருக்க அடுத்த காணி வெட்டி நெல்லுக் கொத்தியாயிற்று. ரெண்டிலைப் பயிராக மான் மேயத்துவங்கும். ஆத்தோடு காட்டெருமைகள் வரும். எனவே காவலுக்கு கொட்டில் போடவேண்டும்.

ஒரு உயரமான புற்று ஒன்றை அப்பு தேர்ந்தெடுந்தார். இது கண்களற்றுக் கிடந்த புற்று. கண் உள்ளபுற்றாயின் அது பாம்பு பூச்சிகள் புழங்கும் புற்றாகும்.

இந்தப் புற்று நல்ல வட்டமான புற்று என்பதோடு, அது அந்தக் கூமா மரத்துக்கு, எது நான் முன்னர் கூறிய வேலிக்கு மேலாக விழுந்திருந்த கூமா. அந்தக் கூமா மரத்துக்குக் கிட்ட இருந்த படர்ந்த புற்று. புற்றுக்கண் இல்லாத புற்றில்தான் குடில்போட வேணும். ஏனென்றால் அது பழைய புற்று. புற்றுக்கண் இருந்தால் அது பிழக்கமுள்ள புற்று. அதாவது பாம்பு, உடும்பு, கறையான், எறுப்பு இவற்றின் வாழிடமாகும். அது எங்களுக்கு இடைஞ்சல்.

சரி, கொட்டில்ல பகல் காவல் நாங்கள். ராக்காவல் அப்பு. எங்களுக்குச் சொல்லிக் கட்டளை, எருமைகள் கூட்டமாக வந்தால் வேலிக்கங்காலயே வரமுதல் கூச்சல்போட்டுக் கலைச்சுப்போட வேணும். ஒற்றையாக வந்தால் அது குழுவன் ஏதும் மரங்களில் ஏறிநிண்டு கொண்டுதான் உரப்பவேணும் என்று.

அப்பு ராக்காவலுக்குப் போய்ப் பரணில படுத்திட்டாராம். கொஞ்ச நேரத்தால ஆரோ வந்து அப்புவைப் பரணிலிருந்து உருட்டித் தள்ளுவது போல இருந்ததாம். அப்பு பரண் விளிம்பை இறுக்கிப்பிடிச்சுக்கொண்டு, உடற்கட்டு மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினாராம். சட்டென்று விலகின மாதிரி இருந்ததாம்.

பிறகு எழும்பி கட்டையளை நெருக்கி அடுப்பை மூட்டி விட்டு, தேத்தண்ணிப் பேணியை அடுப்பில் வைத்தாராம். தேத்தண்ணிபேணி என்பது, கவ்..அன்.. கேற்.. பால்மா வரும் பெரிய பேணி. இது இரண்டரையோ இரண்டுகிலோ கொள்ளளவாக இருக்கும். இதன் மூடியைத் திறந்து வீசிவிட்டு வாய்ப்புறத்தில் இரண்டு பக்கம் ஓட்டை போட்டு கம்பியை வளைத்து வாளிபோல் கொளுவி வைத்திருப்போம். பெரிய கட்டைகள் மூண்டுள்ள கணகணத்த தணலில் அந்தப்பேணியில் தண்ணீர் விட்டு சுடவைப்போம். பிறகு தொலைவில் நின்று தடியால் கொளுவித் தூக்கலாம். அப்பு இந்தவிடயத்தை வலு சுவையாகச் சொல்வார். அதேபோலதான். பேணியை அடுப்பில் வைத்துவிட்டு 'கொதிக்கட்டும் எப்பன் சரிவம்` என்ற பிறகும் பரணில் சரிய ஆரோ மண் அள்ளி எறியினம் கண்ணை முழிச்சா மேலெல்லாம் மண். தேநீர்ப் பேணி சரிந்து நீர் நெருப்பில் சிந்தியது. பிறகு எழுந்து தண்ணீர் குடித்துவிட்டு இருந்த இரையிலேயே கண் அயர ஓராள் வருது. கிட்ட வந்தா ஒரு கிழவி...!

(மிகுதி அடுத்த இதழில்)


---

## தென்றல்
## கண்களால் கைது செய்
## ஆட்டோ கிராப்

iii பக்க தொடர்ச்சி...


பெண்ணுடன்தான் நாம் நிரந்தரமாகவும், வாழ்வு முழுக்கவும் பிணைக்கப்பட்டுவிடவேண்டியிருக்கிறது.

ஆனால் அந்தப் பெண்களுக்கு நாம் கைமாறாக என்னதான் செய்திருக்கிறோம்? இந்த நிரந்தரத் துயரையும் ஏக்கத்தையும் குற்றவுணர்வையும் நமக்குள் மறுபடி மீளப் பார்த்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகத்தான் சேரனது ஆட்டோகிராப் படம் அமைந்திருக்கிறது. ஆட்டோகிராப் திரைப் படத்தின் கதைக்களம் பிரபஞ்சத் தன்மையைக் கொண்ட ஒரு களமாகும். சேரனின் வாழ்ந்துபட்ட அனுபவங்கள் வெளிப்பட்டிருக்கிற,



நுட்பமான வெளிப்பாட்டு வகைப்படமாக ஆட்டோகிராப் அமைந்திருக்கிறது. தெளிவான திரைக் கதையமைப்பு, ஆவலை எழுப்பும் சொல்முறை, கச்சிதமான நடிக நடிகையர் தேர்வு, கதைக்கு ஒப்ப நெஞ்சை நெக்குருகச் செய்கிற பின்னணி இசை, கதைக் களத்தை விவரிக்கும் பாடல்கள், நீரோட்டமான இயக்கம் என நல்ல சினிமாவுக்கான பண்புகள் அத்தனையும் கொண்டதாக ஆட்டோகிராப் படம் அமைந்திருக்கிறது. தமிழக மனிதனின் வாழ்வில் பிற எந்த தென்னிந்திய இனத்தைச் சேர்ந்தவர்களை விடவும், தமிழர்களை அதிகமும் பாதித்தவர்கள் மலையாளிகள்தான். குறிப்பாக மலையாளிப் பெண்கள் தமிழ் இளைஞர்களை அதிகமும் பாதித்தவர்கள். மகாகவி பாரதியிலிருந்து இன்று எழுத வந்திருக்கும் புதிய இளைஞர்கள் வரை, 'மலையாள இலக்கியமும் பெண்களும்' தமிழர்களைப் பாதித்திருக்கிறர்கள். கோபிகாவின் பாத்திரம் அவ்வகையில்தான் பிரதான பாத்திரமாகத் தமிழ் பார்வையாளர்களால் கொண்டாடப்படுகிறது. ஆனால் படத்தில் மிக யதார்த்தத்துடனும், அற்புதமாகவும், மண்ணின் வாசனையுடனும் உருவாகியிருக்கிற சாகாவரம் பெற்ற கதாபாத்திரம் பள்ளிச் சிநேகிதின் கதாபாத்திரம்தான்.

படத்தின் ஆரம்ப அத்தியாயமும், இறுதி அத்தியாயமுமான கல்யாண அத்தியாயமும், தடபுடலான இசை இரைச்சலற்று



கல்யாண வீடு சித்தரிக்கப்பட்ட முறையும், நிச்சயமாக நம்மைக் கடந்த காலத்தின் உன்னதமான தருணங்களுக்குக் கொண்டுபோய்விடுகிறது. ஆரம்ப, இறுதி அத்தியாயங்களில் வரும் பெண்கள், காட்சிகளைக் குறிப்பிடுகையில், மலையாளிப்பெண் மற்றும் சிநேகா சார்ந்த அத்தியாயங்கள் நாடகபாணி நடிப்பும் பாத்திர அமைப்பும் கொண்டவைகள் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆரம்ப, இறுதி அத்தியாயங்களின் நம்பகத் தன்மைக்காக இதனை நம் மறந்துவிடவும் முடியும்.

ஆட்டோகிராப் படத்தில் கவனம் கொள்ளத்தக்க மிக முக்கியமான பண்பு, தமிழ் சினிமா முதல் முதலாக ஆணை மிக நொய்மையான மனிதப் பிறவிகளில் ஒருவனாக இப்படத்தில் காண்பித்திருப்பதுதான். அவன் நையப் புடைக்கப்பட்டு ஊர்விட்டு வந்துவிடுகிறான். தன்னால் ஏதும் செய்ய இயலா கையறுநிலை வருகிறபோது, விசும்பி விசும்பி அழவும் செய்கிறான். கதாநாயகன் சாதாரண மனிதனாகி நம்மையும் அவனில் ஒரு பகுதியாக்கி கொள்கிறான் இன்னும் ஒரே ஒரு உறுத்தல், தொந்தரவு செய்கிறது: கடைசியில் கல்யாண வீட்டுக் கதிரையில் அமர்ந்தபடி சேரன் நம்மைத் திரும்பிப் பார்த்து இது சினிமாதான் என நிரூபிக்கும் வகையில் நமக்கு ஆலோசனை சொல்வது தேவைதானா என்று தோன்றுகிறது..

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

**இறைச்சிச் சாப்பாடு**

- பிரியாணிச் சோறு
- ஆட்டிறைச்சிக் கறி
- கோழிக்கறி
- கத்தரிக்காய்க் கறி
- பருப்பு
- வெங்காயச் சம்பல்
- கோழிப் பொரியல்
- நண்டு வறை
- Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00 € 50 |
| Rol | 00 € 60 |
| Samusa | 00 € 60 |
| Samusa மரக்கறி | 00 € 60 |
| கடலைவடை | 00 € 50 |
| பகோடா | 4 € 70 |
| மிஸ்சர் | 5 € 20 |
| கேசரி | 00 € 50 |



**அன்பளிப்பு**

* 200 சாப்பாடுக்கு
20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு
30 சாப்பாடு இலவசம்

**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி
பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள்
நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம்
மூலம் ஒளிபரப்பப்படும்.



- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

## ஹரிகரன்

**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**

# சிறீலங்கா என்ற பரிசை யார் வெல்வது ? அமெரிக்காவா - இந்தியாவா ?

## ஆராரோ! றோ றோவோ!

(பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர்)

இந்தியாவுக்கு ஒரு தனி விசேசம். அந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் நாட்டின் தலைவிதியை தாமே நிர்ணயிப்பதாக நினைத்துச் செயற்படுவர். உண்மை அதுவல்ல இந்தியாவின் உண்மையான ஆட்சியாளர்கள் 'றோ' என்ற சுருக்கப் பெயரால் அறியப்படும் உளவுத்துறை அமைப்பாகும். இந்தியா அயல்நாடுகளுடனும் தூர நாடுகளுடனும் எடுக்கும் வெளியுறவுக் கொள்கைகளை இந்த 'றோ' எனப்படும் அமைப்பு உருவாக்கி வழங்குகின்றது. RAW என்ற ஆங்கிலச் சொற்கள் Research and Analysis Wing என்ற நான்கு ஆங்கிலச் சொற்களின் முதலெழுத்துக் கூட்டாகும்.

கௌடில்யரின் அர்த்தசாஸ்திரக் கோட்பாடுகளின் செயல் வடிவமாக றோ இடம்பெறுகின்றது. அடுத்துக் கெடுத்தல், அயல் நாடுகளில் கலகம் விளைவித்தல், அமைதியைச் சீர்குலைத்தல், இந்தியாவுக்குச் சார்பான தலைவர்களையும் கட்சிகளையும் வளர்த்தெடுத்தல் போன்ற செயற்பாடுகளில் றோ தனது திறமையை வெளிப்படுத்துகின்றது. றோவின் குறிக்கோள் இந்தியாவின் சகல துறை தேசிய நலனை முன்னெடுத்தல் என சுருங்கக் கூறலாம். றோ குறிவைத்த அயல் நாடுகளின் நிகழ்வுகள் கவலை தரும் விதமாக அமையும். தொட்டிலையும் ஆட்டிக் கொண்டு பிள்ளையைக் கிள்ளித் தூங்கவிடாது தடுப்பது றோவின்பாணி.

> **சிறீலங்காவில் இப்படையணி வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பணியினராகவும், கொழும்புவில் இராணுவ ஆலோசகர்களாகவும் யாழ் தீபகற்பத்தின் பலாலியில் ஓடுபாதை திருத்துனர்களாகவும் உலாவுகின்றனர்.**

1962இல் நடைபெற்ற இந்திய - சீன எல்லைப் போரில் இந்தியா படுதோல்வி அடைந்தது. இதற்கு சீனாவின் இராணுவத் தயார்நிலை, ஆயுத தளபாடத் தொழில்நுட்பம் சம்மந்தமான தரவுகளைத் திரட்டிப் பகுப்பாய்வு செய்வதற்கு இந்தியா தவறியமை முக்கிய தோல்விக் காரணமாகக் கூறப்படுகின்றது. அப்போது வெளிநாட்டுப் புலனாய்வுத் தகவலமைப்பு இந்தியாவிடம் இருக்கவில்லை. தகவல்கள் இல்லாமல் இந்தியா போருக்குச் சென்றது இமாலயத் தவறாகச் சுட்டிக்காட்டலாம்

இத்தவறை நிவர்த்தி செய்வதற்காக 1968இல் றோ அமைப்பு உருவாக்கப்பட்டது. வெளிப்படையாகப் பஞ்சசீலக் கொள்கைகளையும் மறைமுகமாக ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும் சற்றேனும் தயக்கமின்றி முன்னெடுத்த இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு, சீனாவிடம் பெற்ற அடியின் வலியைத் தாங்க இயலாமல் 1964இல் சாவடைந்தார். பிரதமர் பதவியில் அடுத்ததாக அமர்ந்த லால்பகதூர் சாஸ்திரி 1966இல் இறக்க ஜவகர்லால் நேருவின் மகள் இந்திராகாந்தி இந்தியப் பிரதமரானார். இவருடைய காலத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் பல முக்கிய மாற்றங்கள் நடைபெற்றன. தனது முதலாவது பதவிக்காலத்தில் (1966-1977) இந்திராகாந்தி றோ அமைப்பின் உருவாக்கத்திற்கு உத்தரவிட்டார். கே.என்.ராவ் (K.N.Rao) என்ற புலனாய்வு அதிகாரி றோவின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார்.

எல்லா விதத்திலும் அமெரிக்காவின் 'சி.ஐ.ஏ' எனப்படும் மத்திய புலனாய்வுக் கழகத்தின் மறுபதிப்பாகவே 'றோ' அமைக்கப்பட்டது. நிர்வாகக் கட்டமைப்பு, முகவர்களை வெளிநாடுகளில் இருத்துவது, வெளியாரைப் பயன்படுத்துவது, நிழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற பல தரப்பட்ட விடயங்களில் இரு அமைப்புக்களுக்கும் இடையில் ஒற்றுமை இருப்பது கண்கூடு. சி.ஐ.ஏயின் நிழற்படமாக றோ இருப்பதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்ற போதிலும் றோ முகவர்கள் தரிக்கும் சமயா சமய தார்மீக வேடங்கள் மாறுபடுகின்றன.

உலகின் 50 வரையான தலைநகரங்களில் 1500 வரையிலான றோ உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர். இந்தியப் பாராளுமன்றத்தின் நிதிக்கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்குக் கட்டுப்படாத பெருந்தொகை நிதி றோவின் செலவுக்காக வருடா வருடம் ஒதுக்கப்படுகின்றது. இப்பணத்தை தகவல் வழங்கும் வெளிநாட்டு முகவர்களுக்கு றோ அமைப்பினர் தாராளமாக வழங்குகின்றனர். பிறநாடுகளில் பிரசா உரிமை பெற்ற முன்னாள் இந்தியப் பிரசைகளும் அவர்களின் பிற் சந்ததியினரும் இந்தியா மீதுள்ள பாசப்பற்றினால் றோ உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழகுகின்றனர். தாம் வாழும் நாட்டிற்கு இரண்டகம் செய்கின்றோம் என்பதை இந்நபர்கள் உணர்வதில்லை.

இந்திரா காந்தி காலத்தில் றோ அசுர வளர்ச்சி கண்டதோடு, எல்லை நாடுகளுக்குள் ஊடுருவி அந்த நாடுகளின் இறைமையைச் சீரழிப்பதில் முனைப்பாக ஈடுபட்டது. சிக்கிம், பூட்டான் ஆகிய நாடுகளின் சுதந்திரம் இந்திராவின் காலத்தில் பறிபோயின. சிக்கிம் இந்தியாவின் 22ம் மாநிலமாக மாற்றப்பட்டது. பூட்டான் தனித்தியங்க பெயரளவில் அனுமதிக்கப்பட்டாலும் அதுவும் சிக்கிம் நிலைக்கு இறங்கும் நிலை தோன்றியது. பலமான நாடுகளுக்கு அருகாமையிலுள்ள வலுவற்ற நாடுகள் படிப்படியாகத் தமது இறைமையை இழக்கின்றன. இது தவிர்க்க முடியாத பொது நிகழ்ச்சி. அயல் நாடுகளைச் சிக்கிமாக்குதல் (Sikkimisation of Neighbouring Countries) இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். இக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் கருவியாக றோ செயற்படுகின்றது.

சந்திரகுப்த மௌரியன் தலைமையில் உருவாகிய மௌரிய சாம்ராச்சியத்தின் பின்னணியில் கௌடில்யர் என்ற பட்டப்பெயர் பெற்ற விஸ்ணுகுப்தா என்ற பிராமணர் செயற்பட்டார். இவர் எழுதிய அர்த்தசாஸ்திரநூல் அயல் நாடுகள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அயல்நாடுகளில் அமைதியின்மையைத் தோற்றுவிப்பதற்கு செய்ய வேண்டிய இரகசிய உபாயங்களையும் இந்நூல் பட்டியலிடுகின்றது. இனந்தெரியாத தாவர, விலங்கின, மனித நோய்களைப் பரப்புவது பற்றியும் இந்த நூல் விவரிக்கின்றது. சாம்ராச்சியக் கனவுகளின் பிடியில் செயற்படும் நவீன இந்தியாவின் பாடநூலாக அர்த்த சாஸ்திரம் விளங்குகின்றது.

போர் நடவடிக்கையில் துவக்கு (ஆயுதம்) எவ்வளவு முக்கியமோ அதேயளவு அல்லது அதிலும் கூடியளவு முக்கியத்துவம் புலனாய்வுத் தகவலுக்கு உண்டு. தகவலின் அடிப்படையில் போரை முன்னெடுக்க முடியும். தவறான தகவல் போரின் முடிவை மாற்றிவிடும். இதை சி.ஐ.ஏ அமைப்பு நன்குணர்ந்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் சி.ஐ.ஏ.யின் முன்னோடி அமைப்பான கேந்திர சேவைகளுக்கான அலுவலகம் (Office of Strategic Services) ஜெனரல் வில்லியம் டொனோவன் தலைமையில் செயற்பட்டது. புலனாய்வுத் தகவல் திரட்டுவதற்கும் படுகொலை போன்ற திரைமறைவு நடவடிக்கைகளுக்கும் இந்த அலுவலகம் பொறுப்பாக இருந்தது. எதிரியின் முன்னணி நிலைகளை ஊடுருவிச் சென்று எதிரியின் நிலைகளைத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்துவ்து இந்த அலுவலக உறுப்பினர்களின் முக்கிய செயற்பாடாகும்.

தகவலைச் சேகரித்து பெறுமதி ஆய்வு செய்யும் நோக்கில் ஜூலை 27, 1947 தொடக்கம் சி.ஐ.ஏ இயங்கத் தொடங்கியது. இதற்கான அனுமதியை அதற்கு முதல் நாள் தனது கைப்பட அதிபர் ரூமன் வழங்கினார். சரியாக ஐந்து மாதங்களுக்குப்பின் மறைவு நடவடிக்கைகளுக்கான அனுமதியை ரூமன் வழங்கினார். மறைவு நடவடிக்கை என்ற சொற்றொடரில் பதவி கவிழ்ப்பு, படுகொலை, ஆட்சி மாற்றம் செய்தல், குழப்பம் விளைவித்தல் போன்ற அசாதாரண நிகழ்ச்சிகள் உள்ளடங்குகின்றன. முன்கூட்டியே அமெரிக்கர்கள் செய்து வந்த நடவடிக்கைகளுக்குக் கிடைத்த அரசியல் அங்கீகரமாக ரூமனின் அனுமதி கருதப்படுகின்றது. சி.ஐ.ஏயின் விம்பமாக இடம்பெறும் றோவும் இவற்றைப் பின்பற்றுகின்றது.

எப்போதும் அமெரிக்கா போர் நடவடிக்கையைத் தொடங்கு முன் சி.ஐ.ஏ களத்தில் இறங்கி விடும். சி.ஐ.ஏயிடம் தற்போது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட விசேட படையினர் சேவையில் உள்ளனர். இவர்கள் முப்படைகளிலுமிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். அத்துடன் இளைப்பாறிய அனுபவசாலிகளும் சி.ஐ.ஏயின் விசேட அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். றோ அமைப்பிலும் விசேட படையணி அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஜம்மு - காஸ்மீர் மாநிலம், வட கிழக்கு மாநிலங்கள், நேபாளம் போன்ற கொதிநிலையிலுள்ள பகுதிகளில் பணியாற்றுகின்றனர்.

சிறீலங்காவில் இப்படையணி வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பணியினராகவும், கொழும்புவில் இராணுவ ஆலோசகர்களாகவும், யாழ் தீபகற்பத்தின் பலாலியில் ஓடு பாதை திருத்துனர்களாகவும் உலாவுகின்றனர்.

சி.ஐ.ஏ அமைப்பின் உருவாக்கத்திற்கு பிரிட்டிஷ் அரசின் உளவுச் சேவைகள் முன்னுதாரணமாக அமைந்ததைப்போல், றோ அமைப்பிற்கு சி.ஐ.ஏ முன்னுதாரணமாக அமைந்தாலும் தேசிய நலன் என்ற அதிமுக்கிய விடயம் மூன்று அமைப்புக்களுக்கும் இடையில் தொடர்ச்சியான நல்லுறவு நிலவுவதற்குத் தடையாக இருக்கின்றது. பிரித்தானியாவும், அமெரிக்காவும் சகோதரர்கள் போன்று இயங்குகின்றன. சி.ஐ.ஏயும் றோவும் தகவல் பரிமாற்றம் செய்தாலும் அமெரிக்காவும் இந்தியாவும் இந்துமாகடல் மீதான ஆதிக்கம் சம்பந்தமாக மிகவும் ஆழமான கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ளன.

இதற்கு உதாரணமாக கலைக்கப்பட்ட ரணில் அரசை வலுப்படுத்தும் நோக்கில் சி.ஐ.ஏ அதிகாரி கிறிஸ்ரினா றொக்கா பலாலி விமான தளத்தில் சி.ஐ.ஏ உளவுத்துறை விமானத்தில் வந்து இறங்கிய போது றோ அமைப்பு கடுஞ்சினம் கொண்டது. இதற்குப் பதிலடியாக இளைப்பாறிய இந்திய இராணுவ அதிகாரியை அதியுயர் பாதுகாப்பு வலய ஆலோசகராக யாழ்ப்பாணம் அனுப்பியது. சதீஸ் நம்பியாரை ரணில் அழைத்தார் என்று யாரும் நம்ப வேண்டாம். சதீஸ் நம்பியாரை அழைக்கும்படி ரணில் நிர்ப்பந்திக்கப்பட்டார். நம்பியாரின் வருகையை தனது மிகவும் நேர்த்தியாகப் பின்னப்பட்ட பாதுகாப்பு வலைப் பின்னலின் அங்கமாகக் காட்டுவதற்கு ரணில் எடுத்த முயற்சி பயனற்றது. விடயம் தெரிந்தோர் உண்மையை நன்கு விளங்கிக் கொள்வர்.

அன்றொரு நாள் இந்திரா காந்தி காலத்தில் சிக்கிம் மாநிலத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக றோவும் சி.ஐ.ஏயும் கடும் போட்டியில் ஈடுபட்டன. இதில் றோ அமைப்பு வெற்றி பெற்றது. இப்போது இரு அமைப்புக்களுக்கும் இடையிலான போட்டி இந்தியாவின் வடதிசையிலிருந்து தென் திசைக்கு மாறியுள்ளது. சுருங்கக் கூறுவதாயின் சிறீலங்கா என்ற பரிசை யார் வெல்வது, அமெரிக்காவா இந்தியாவா என்ற அடிப்படையில் இரு உளவுப் படைகளும் களத்தில் இறங்கியுள்ளன. சிறீலங்காவின் இறைமை பற்றி யார் யாரோ வாய்க்கு வந்தபடி பேசுகின்றனர்.

சிறீலங்காவின் இறைமை பறிபோய் பல தசாப்தங்களாகின்றன, இதுதான் உண்மை.

(தொடரும்)

# கருணா விவகாரம்:

# எந்த இராணுவ - அரசியல் பிரச்சினைகளையும் புலிகளுக்குள் ஏற்படுத்தப் போவதில்லை

## - கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

கிழக்கில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் தமிழ் கார்டியன் என்ற ஆங்கிர வார இதழுக்கு செவ்வியொன்றினை வழங்கியுள்ளார். கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் முதற்தடவையாக, ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கியுள்ள செவ்வியை இங்கே தருகின்றோம்.

**கேள்வி:-** *தமிழ் மக்களின் போராட்டத்தைக் கருணாவின் கிளர்ச்சி, மோசமாகப் பாதிக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? சமாதான முன்னெடுப்புக்களை இது எவ்வளவு தூரம் பாதிக்கும்?*

**அன்ரன் பாலசிங்கம்:-** எமது விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சிப் போக்கையும், வரலாற்றினையும் நன்கு புரிந்து கொண்டவன் என்ற வகையில், கருணாவின் விலகல் கொழும்பில் உள்ள ஊடகங்கள் கூறுவதுபோல் பெரிதாக எந்த அரசியல் - இராணுவ பிரச்சினைகளையும் புலிகளுக்குள் ஏற்படுத்தப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்வேன். குழப்பங்கள் மிகுந்த எமது சுதந்திரத்திற்கான விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுமாதிரியான நம்பிக்கைத் துரோகம், காட்டிக் கொடுப்புகள், விசுவாசமின்மை, குழிபறித்தல் போன்றவற்றை எமது அமைப்பு சந்தித்தே வந்திருக்கிறது.

இது மாதிரியான பிரச்சினைகள் எப்போதெல்லாம் எழுந்தனவோ அப்போதெல்லாம் எமது தலைமைத்துவம் அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக முறியடித்து வந்துள்ளது. அதனால், கருணாவின் பிரிவு ஒரு புதிய விடயமே அல்ல. உண்மையில் இது ஒரு சவால் தான். விரைவில் நாம் தீர்வு காண்போம் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். எமது தலைமைத்துவம் இது விடயத்தில் குழம்பவுமில்லை, பதற்றப்படவுமில்லை. பிரபாகரன் அமைதியான, ஆறுதலான, நிம்மதியான போக்கையே பேணுகின்றார். அவர் மோதல் போக்கில் இதனை அணுகுவதில்லை என்று தீர்மானித்துள்ளார். ஆயுத வன்முறை இல்லாமலும், இரத்தம் சிந்தாமலும் இந்த நிலைமையை வெற்றிகொள்வதற்கு எமக்கேயுரிய யுக்தி உண்டு. கருணாவின் கிளர்ச்சி ஒரு தற்காலிகமான கோளாறு. அது காலம் போகச் சரிவந்துவிடும்.

> *'தயவு செய்து பிரேமதாசவிடம் கூறுங்கள், நான் வடக்கை வேண்டுமானால் கூட விட்டுவிடத் தயார். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் கிழக்கு மாகாணத்தையும், அந்த மக்களையும் கைவிடத் தயாரில்லை'*

சமாதான முன்னெடுப்புக்களையோ, தமிழ்த் தேசியத்தின் போராட்டத்தையோ கருணாவின் பிரிவு மோசமாகப் பாதிக்கும்என நான் நம்பவில்லை. சமாதானத்திற்கும், பேச்சு மூலமான அரசியல் தீர்விற்கும், சிங்கள மக்களின் ஆணையைப் பெற்று புதிதாகத் தெரிவாகும் அரசிற்கும் புலிகளுக்குமிடையில் பொதுத் தேர்தலை அடுத்து சமாதான முன்னெடுப்புக்கள் மீளவும் ஆரம்பமாகும். எமது அமைப்பின் அரசியல் இலக்குகளை அங்கீகரித்து தங்களின் ஏகப் பிரதிநிதிகளாகப் புலிகளை மீள உறுதி செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழீழ மக்கள் வாக்குகளை அள்ளிக் குவிப்பார்கள் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது எமது மக்களின் ஒன்றுபட்ட அரசியல் சித்தாந்த இலட்சியத்தைக் குறித்து நிற்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவையும், அபிலாசைகளையும் பிரதிபலித்து நிற்கிறது. எமது மக்களுக்கே உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மென்முறையாலும், வன்முறையாலும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த போராட்ட வரலாற்றின் பரிணாம வளர்ச்சியால் அது உருவகம் பெற்றது. ஒரு தனிமனிதனால் அதுவும், ஒரு தேசிய இயக்கத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு, கொண்ட இலட்சியத்தைக் கைவிட்டு நிற்கும் ஒரு தனிமனித கிளர்ச்சி வாதியால், ஒரு வெகுஜனப் போராட்டத்தின் தடுக்க முடியாது, வரலாற்று ஓட்டத்துக்கு முட்டுக்கட்டை போட முடியாது.

**கேள்வி:-** *கருணா பிரதேசவாத உணர்வைக் கிளப்பியதோடு, தனது ஆள்களும் கிழக்கு மாகாண மக்களும், புலிகளின் தலைமைத்துவத்தினால் பிரதேச வேறுபாட்டின் அடிப்படையில் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டனர் எனவும் கூறுகின்றார். இந்த விமர்சனத்துக்கு உங்கள் பதில் என்ன?*

**அன்ரன் பாலசிங்கம்:-** தமிழ் மக்கள் தனித்து ஒன்றிணைந்தவர்கள் என்ற அவர்களின் தேசியத்தின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உளப்பூர்வமாக வெளிப்படுத்தி நிற்கும்படி கோரப்பட்டிருக்கும் இந்த இக்கட்டான தருணத்தில் பிரதேச பகைமை தொடர்பான உணர்வைக் கிளப்ப கருணா தேர்ந்தெடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

உளுத்துப்போன பிரதேச பாகுபாட்டுப்போக்குக்கு பிரபாகரன் அப்பாற்பட்டவர் என்பது கருணாவின் அடி மனத்துக்குக் கூட நன்கு தெரியும். மரபு ரீதியாக தமிழ்ச் சமுதாயத்தில் நூற்றாண்டுகளாக ஊறிப்போயிருந்த சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை விஞ்சி, ஐக்கியப்பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கட்டியெழுப்பியதற்காகத் தமது மக்களால் பெரிதும் விரும்பி ஏற்றப்படுபவர் பிரபாகரன்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பகாலம் தொட்டே தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற கோட்பாட்டையே மூலாதாரக் கொள்கையாக வகுத்துக்கொண்டது. ஒருமைப்பட்ட, ஐக்கியப்பட்ட தமிழர் தாயகம் என்பதற்காகவே பதினெட்டாயிரம் போராளிகளும், எண்பதாயிரம் தமிழ்ப் பொது மக்களும் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.

பிரபாகரனுடன் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்தவன், இணைந்து தொழிற்பட்டவன் என்ற வகையில் அவரின் எண்ணத்திலோ, செயலிலோ பிரதேச வாதத்திற்கான சாயலைக்கூட நான் கண்டதில்லை. புலிகளின் தலைமைத்துவத்தின் மீது கருணா சுமத்தும் பிரதேசவாதக் குற்றச்சாட்டு இல்லாததொன்று, அபாண்டமானது. அவரின் ஆள்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கமுடையது.

பிரிக்கப்பட முடியாத ஐக்கிய தமிழர் தாயகக் கோட்பாட்டின் மீது பிரபாகரன் எவ்வளவு ஆழமான பற்றுறுதி கொண்டவர் என்பதை நிரூபிக்க நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட முடியும்.


முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் பேச்சு நடந்த காலம் அது. ஒரு கட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாச, தாம் வடக்குக்கு தனிநாடு போன்ற அரசியல் விடுதலையைத் தருகிறார் எனவும் ஆனால், கிழக்கைத் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியாக எப்போதுமே அனுமதிக்கமாட்டார் எனவும், பிரபாகரனுக்கு ஒரு தகவலைத் தெரிவிக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். நான் இந்தத் தகவலை பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தியபோது, 'தயவு செய்து பிரேமதாசவிடம் கூறுங்கள், நான் வடக்கை வேண்டுமானால் கூட விட்டுவிடத் தயார். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் கிழக்கு மாகாணத்தையும், அந்த மக்களையும் கைவிடத் தயாரில்லை' என்று கூறினார் பிரபாகரன்.

கிழக்கு மக்களைப் பொருளாதார அபிவிருத்தியில் கணக்கெடுக்காது பார பட்சம் காட்டுவதாகக் கூறப்படும் விமர்சனம் பற்றிக் கூறுவதாயின், வடக்கு - கிழக்கு இரண்டுமே போரினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்றுதான் சொல்வேன்.

வடக்கு அடிக்கடி மோசமான போர்களையும், உள்கட்டமைப்பு அழிவுகளையும் எதிர்கொண்டதோடு பெருந்தொகையான இடம்பெயர்ந்த மக்களையும் கொண்ட பிரதேசமாகும். வடக்கு - கிழக்கு இரண்டுமே பொருளாதார ரீதியில் பின்னடைவு கண்ட பகுதிகள்தான். அவற்றுக்குப் பாரிய புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகள் அவசரமாகச் செய்யப்பட வேண்டியிருக்கின்றன.

வன்னியில் வரிவிதிப்பு மூலம் பெறப்படும் நிதியைக் கொண்டும் அத்தகைய பாரிய புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளைச் செய்துவிடமுடியாது. எங்களுக்குப் பெருமளவிலான சர்வதேச உதவி தேவைப்படுகின்றது.

சர்வதேச உதவும் சமூகம் வழங்குவதாக உறுதியளித்த பெருந்தொகையான நிதி, கடந்த பலமாதங்களாகத் தெற்கில் நிலவும் அரசியல் இழுபறி காரணமாக வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை இன்னும் சென்றடையவில்லை. இப்படியான நிலைமை இருக்கையில், கிழக்கை பொருளாதார ரீதியாக ஒதுக்கியதாகப் புலிகளின் தலைமையைக் கருணா குற்றம் சுமத்துவது நீதியற்றது.



அவசரப் பொருளாதார, மனித நேயத்தேவைகளைக் கருத்திற் கொண்டு தான் எமது தலைமைத்துவம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஸ்தாபிக்குமாறு முன்மொழிந்தது. அதன் மூலம்தான் சர்வதேச உதவியோடு சிங்களவர்கள், முஸ்லிம்கள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களுக்குமான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாரணம் தொடர்பான பரிய திட்டங்களை மேற்கொள்ளமுடியும்.

கருணா கூறுவது போல் புலிகளின் கட்டமைப்பில் பிரதானமாக முப்பத்தியைந்து பிரிவுகள் இல்லை. இராணுவ மற்றும் அரசியல் பிரிவுகள் என்பனவே முதன்மையான கட்டமைப்புகளாகும். இராணுவக் கட்டமைப்பு, மாவட்ட அடிப்படையில் மாவட்டங்களுக்கான இராணுவத் தளபதிகள் அதி உயர் தளபதியான பிரபாகரனுக்குக் கீழ் செயலாற்றக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் பிரிவும் மாவட்டத் தலைவர்களைக் கொண்டுள்ளது. ஏனைய முக்கிய பிரிவுகளாக நிதி, சட்டமும் ஒழுங்கும், உளவுத்துறை, கல்வி ஆகியன உள்ளன. இவற்றுக்கான பொறுப்பாளர்கள் சிரேஷ்டத்துவம் அடிப்படையில் தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிரேஷ்டத்துவம், ஆற்றல், திறமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு தான் தலைவர்களுக்குப் பிரபாகரன் பதவி உயர்வுகளை வழங்குகிறார். இந்த விடயத்திட்டத்தில் பிரதேச வாதத்துக்கு இடமேயில்லை.

**கேள்வி:-** *கருணா தான் 5000 வீரர்களைக் கொண்ட இராணுவக் கட்டடமைப்பையும், கிழக்கு மக்களின் பின் பலத்தையும் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும், சிங்களவர்களும் பூர்வீகமாக வசிப்பதால் அது தமிழர்தாயகத்தின் தொடர்ச்சியான பகுதி அல்ல என்றும் கூறுகின்றார். இது குறித்து உங்கள் கருத்து?*

**அன்ரன் பாலசிங்கம்:-** கருணாவிடம் எத்தனை வீரர்கள் இருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியாது. எமக்குத் தெரிந்ததெல்லாம் அவர் வசம் உள்ளவர்கள் அண்மையில் உள்வாங்கப்பட்டவர்கள், போராட்ட அனுபவம் அற்றவர்கள் என்பதுதான். அவர்கள் மோதல் தவிர்ப்பு காலத்தில் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். வடக்கு - கிழக்கை உள்ளடக்கிய தமிழ்த் தாயகத்தை மீட்பதற்காகவே அவர்கள் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். தமிழ்த் தேசியத் தலைவருக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்த வீரர்கள்தான் அவரிடம் இருக்கிறார்கள். உண்மையில் சொல்வதானால், அவர்கள் விடுதலைப் புலிகளுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணிக்க உறுதியுரை எடுத்த பிரபாகரனின் விடுதலைப் போராளிகள், தேசியத்திற்கும், தேசியத் தலைவருக்குக் கட்டுப்பட்டும் நடப்பதாகச் சத்தியப் பிரமாணம் செய்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# கருணா விவகாரம்:

(21ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் மீது தனது தலைமைத்துவத்தைத் திணிப்பது கருணா இழைக்கும் படுமோசமான நம்பிக்கைத் துரோகமும் வஞ்சகமும் ஆகும்.

அவரது சிரேஷ்ட தளபதிகள், அரசியல் துறைப்பொறுப்பாளர்கள், பெருந்தொகையான போராளிகள் கருணாவைத் துறந்து பிரபாகரனின் தலைமையில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். பெரும்பாலானவர்கள் தன்னை விட்டு ஓடிவிடுவார்கள் என்ற பயத்தினால் முகாமுக்குள் பலத்த பாதுகாப்பின் கீழ் ஏனைய வீரர்களை அவர் தடுத்து வைத்திருக்கின்றார் என்பது எமக்குத் தெரியும். தன்னுடைய ஆள்களைத் தன்னுடைய கட்டளையின் கீழ் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட படை போன்று, ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு எவ்வளவு காலத்திற்குப் பேணுகின்றார் என்பதில்தான் அவரது எதிர்காலம் தங்கியுள்ளது.

பிரச்சினையின் ஆரம்பம் பற்றிச் சரியாகத் தெரியாத மட்டக்களப்பு, அம்பாறை தமிழ் மக்களுக்கு, கருணாவின் அதிருப்தியும், அதனைத் தொடர்ந்து அவரை வெளியேற்றியதும் அதிர்ச்சி தரும் சங்கதியாகவே இருந்தது. இந்த வெளியேற்றம் நியாயமற்றது, உரிய காரணமற்றது என்றும் சிலர் கருதி இருக்கவும் கூடும்.

கருணா இழைத்தவை குறித்து தமிழ் பத்திரிகைகள் விமர்சித்து செய்தி வெளியிட்டன, அறிக்கைகளும் வெளியாகின. கருணாவின் கையாள்கள் செய்தி பரவக்கூடாது என்பதற்காக அவற்றை வழிமறித்து எரித்தனர்.

கருணாவுடன் சேர்ந்து தொழிற்பட்ட இராணுவத் தளபதிகளும், அரசியல் பொறுப்பாளர்களும் அவர் இயக்கத்திற்கும், தமிழரின் போராட்டத்திற்கும் எதிராக இழைத்த நம்பிக்கை துரோகத்தை வெளிப்படுத்தியதை அடுத்து, தமிழ் பொதுமக்கள் கருணாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னணியில் மறைந்துள்ள நியாயத்தைத் தற்போது உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

**கேள்வி:-** *பிரபாகரன் போர் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிக்கிறார் என்றும், அதற்காகத் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆயிரம் வீரர்களைக் கொண்ட படையணியை அனுப்புமாறு அவர் கேட்டுக்கொண்டதற்குத் தான் செவிசாய்க்கவில்லை என்றும் கருணா தெரிவிக்கிறாரே, இது உண்மையா?*

*தமது கிழக்குப் படையணிகளைப் பலிகொடுத்து புலிகளின் தலைமைத்துவத்தையும் வன்னிப் பிரதேசத்தையும் தாம் காப்பாற்றினார் என்று கருணா கூறுவது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*

**அன்ரன் பாலசிங்கம்:-** மேலதிகப் படை அணி எதனையும் புலிகளின் தலைவர் கோரவில்லை. இதை நான் அவரிடமிருந்தே தெரிந்து கொண்டேன். புலிகள் தலைமைத்துவம் போருக்கான எந்தத் தயாரிப்பிலும் ஈடுபடவில்லை என்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிப்பேன். நாங்கள் சமாதானத்திலும், இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறையில் தீர்வு காண்பதிலும் உண்மையாகவும் பற்றுறுதியோடும் எம்மை ஈடுபடுத்தியுள்ளோம்.

வன்னி நிலப்பரப்பில் 'ஓயாத அலைகள்' 1 முதல் 4 வரை பெயரிடப்பட்ட எமது பிரதான யுத்தங்கள் அனைத்திலும் வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் இருந்தும் விடுதலைப் போராளிகள் பங்கேற்றனர். தமிழரின் தாயகத்தின் இதயமான வன்னியில் இருந்து செயற்படும் மத்திய கட்டளையகத்தை விடுவிக்கும் ஒரு விடுதலைப் போர் அது. வன்னியில் உள்ள புலிகளின் இராணுவக் கட்டளைக் கட்டமைப்பை அழித்துச் சிதைக்கும் நோக்கில் நாற்பதாயிரம் துருப்புகளோடு பெரும் படையெடுப்பாக 'ஜயசிக்குறு' (வெற்றி நிச்சயம்) இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபோது எல்லா மாவட்டங்களிலும் உள்ள படையணியை அங்கு நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் நமது தலைமைக்கு ஏற்பட்டது.

எதிரியை அடித்து விரட்டி அவமானப்படுத்தும் பின்னடைவுகளை ஏற்படுதியதில் ஏனைய பிரிவினருடன் சேர்ந்து ஜெயந்தன் படையணியின் துணிகரமான பங்களிப்பினை நாம் மறுப்பதற்கில்லை. எதிர்த்துப் பதிலடி கொடுப்பதில் (ஓயாத அலைகள் மூன்று) எல்லாப் படையணிகளையும் இணைத்து வழி நடத்தும் தளபதி என்ற அந்தஸ்தை கருணாவிற்கு வழங்கியதற்காக அவர் பிரபாகரனை மெச்சவேண்டும். எமது மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் விடுதலைக்கான யுத்தம் எனும் பொது அம்சத்தில் தமிழர் தாயகத்தின் எல்லாப் பகுதியைச் சேர்ந்தவர்களுமே மாவீரராகியுள்ளனர். ஒரு பகுதியினர் மற்றைய பகுதியினருக்காகப் பலியாகினர் என்று வாதிடுவது பிரதேசவாதத்தை மீள உயிர்ப்பிப்பதாகும். தமிழ்த் தேசப்பற்றுள்ள சகலரும் அதனைக் கண்டிக்கவும் வேண்டும்.

போரின் விளைவையும் போக்கையும் தீர்மானிப்பது அதில் பங்கேற்கும் போராளிகளின் எண்ணிக்கை அல்ல. உத்தி, உபாயம், திட்டமிடல், புலனாய்வு, உள் ஏற்பாடு வசதிகள், வழங்கல், தொழில்நுட்பம், ஆயுதங்கள், முறைமைகள் என்பனவற்றோடு வேறு பல விடயங்களும் நவீன போரியலில் முக்கிய பங்கு வகுப்பன என்பதை யுத்தகடினம் கொண்ட இராணுவ மனிதரான கருணா அவசியம் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட யுத்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருந்த அத்தகைய இராணுவ மேதாவி வேறு யாருமல்லர், அது பிரபாகரன்தான்.

**கேள்வி:-** *தமிழ்த் தேசியத்துக்கும் தமிழர் தாயகத்துக்கும் ஆதரவாகப் பிரசாரம் செய்யவேண்டாம் என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களைக் கருணா மிரட்டியுள்ளார் என்றும், அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவை ஏற்படுத்தியுள்ள அவர், புதிய அரசில் தம்முடைய வேட்பாளர்கள் சிலருக்கு அமைச்சரவைப் பதவி தருவதாகவும் உறுதிமொழி அளித்துள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளனவே, இவை பற்றி உங்கள் கருத்து?*

**அன்ரன் பாலசிங்கம்:-** எங்களுக்கு இந்தப் பிரச்சினை தெரியும். தமிழர்களின் போராட்டத்திற்கு எதிராகக் கருணா இப்போது செயற்படுவதால் இது எங்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. அங்கீகாரத்தையும் சலுகைகளையும் பெறுவதற்காக சிங்கள இராணுவத் தலைமையோடும், பேரினவாத அரசியல் சக்திகளோடும் ஒளிவுமறைவான தொடர்புகளை அவர் இப்போது ஏற்படுத்தியுள்ளார். கருணாவின் முரண்பாட்டை எவரேனும் வஞ்சகமாகப் பயன்படுத்துவதற்கு முயன்றால் அது சமாதான நடவடிக்கைகளுக்கு ஈடுசெய்ய முடியாத் பேரிழப்பை ஏற்படுத்திவிடும் என்பதை அவரது தொடர்பாளர்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இந்தப் பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட அடிப்படைகளையும், கொள்கைகளையும் ஆதரிக்கும் படியும் அதற்காகச் செயற்படும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படியும் மட்டக்களப்பு, அம்பாறை மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

**கேள்வி:-** *தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தமிழர் தாயகத்தின், அரசியல் விடுதலை போராட்டத்தைப் பிரபாகரன் கைவிட்டுவிட்டார் என்று கருணா கூறுகின்றார். தமது வாதத்தை நியாயப்படுத்துவதற்குப் பிரபாகரனின் கடந்த வருட மாவீரர்தின உரையை அவர் சுட்டிக்காட்டுகிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியர் என்ற முறையில் இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?*

**அன்ரன் பாலசிங்கம்:-** பிரபாகரனுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் உள்நோக்கோடு கருணா குழப்பமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். பிரபாகரன் தன்னுடைய அடிப்படையான கொள்கைகளையும், திட்டங்களையும் கைவிட்டுவிடவில்லை என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த முடியும். கடந்த வருடம் மாவீரர்தின உரையில் குறிப்பிடத்தக்க தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய இடைக்கால நிர்வாகசபை தொடர்பான புலிகளின் யோசனையை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசை பிரபாகரன் கோரி இருந்தார். இந்த யோசனை ஓர் இடைக்கால ஏற்பாடேயன்றி, நிலையான இறுதியான தீர்வே தீர்வல்ல.

என்றாலும், சிங்களப்பேரினவாத ஆட்சியாளர் வர்க்கம் எங்கள் மக்களின் உரிமைகளைத் தொடர்ந்து மறுத்து, இணக்கம் ஏற்படுவதைத் தடுத்து அடக்கு முறை சூழ்நிலையைத் தொடர்ந்தால் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்திப் பிரிந்து சென்று, சுதந்திர தனி நாடு ஒன்றை உருவாக்குவதைத் தவிர வேறுவழியில்லை என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

பிரிந்து சென்று சுதந்திர தனிநாடு ஒன்றை உருவாக்கும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை கொண்ட தமது அரசியல் இலக்குக் கட்டமைப்பைப் பிரபாகரன் கைவிட்டார் எனத் தெரிவிக்கும் எந்தக்குறிப்பும் அதில் இடம்பெறவில்லை. கருணா அந்த முழுப்பேச்சின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் குழம்பியுள்ளார்.

# சிறீலங்காவின் மனித உரிமை நிலைகளை ஐ.நா. கூட்டத்தொடர் கவனத்தில் கொள்ளவேண்டும்

*சுவிற்சர்லாந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையில், ஆரம்பமாகியுள்ள 60வது மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டிற்கு, தமிழர் மனித உரிமை மையம் அனுப்பிவைத்துள்ள கடிதம்.*

*கனம் தலைவர், அங்கத்தவர், பிரதிநிதிகள்,*

*வழமைபோல் இவ்வாண்டும் எமது அமைப்பு இக்கூட்டத்தொடருக்குச் சிறீலங்காவின் தற்போதைய மனித உரிமை நிலை பற்றி மனுச்செய்கிறது. கடந்த கூட்டத்தொடருக்குப் பின்னர், பலவிதப்பட்ட மாற்றங்கள் இலங்கைத்தீவில் ஏற்பட்டபொழுதும், விசேடமாக எடுத்துக்கூறும் அளவுக்கு அங்கு மனித உரிமைநிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.*

*எமது அமைப்பு கடந்த ஆண்டு இரு தடவைகள் வடபகுதிக்குச் சென்று அவ்விடத்து நிலைமைகளை நேரில் பார்த்து இரு அறிக்கைகள் வெளியிட்டிருந்தோம்.*

*தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேசங்களில் நீதி, நிர்வாகம் மக்களின் ஆதரவுடன் திறம்பட நடைபெறுவதை நேரில் கண்டோம். நீதித்துறை, காவல்துறையினரின் பயிற்சிகள், கல்வி போன்றவற்றிற்கு ஐ.நாவின் பயிற்சித் தொகுப்புக்களைப் பயன்படுத்தும் அதேவேளை தமிழீழ நீதி, நிர்வாகம் சர்வதேச விதிகளை திருப்திப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.*

*உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இவர்களை மீளக் குடியமர்த்துவதில் அரசு பெரிதும் அக்கறை காட்டவில்லை. மனிதாபிமான அமைப்புக்கள் ஒருபுறம் நிலக்கண்ணிவெடிகளை அகற்ற மறுபுறம் சிறீலங்கா இராணுவம் நிலக்கண்ணிவெடிகளை விதைத்து வருகின்றனர். இதனால் மக்களின் நடமாட்டம் மிகவும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.*

*இராணுவத்தால் புதிதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 'யுத்த சூனியப் பிரதேசங்களை' காரணம் காட்டி, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டதற்கு ஏற்ப மக்களை, இரு வருடங்களுக்குப் பின்பும் மீள் குடியமர்த்தல் நடைபெறவில்லை. இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சாரம் 2ஐ மீறுவதாக உள்ளது. இதுவரையில் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும்.*

*கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் 2076 சைவக்கோயில்களும், யாழ் குடாநாட்டில் மட்டும் 299 கிறிஸ்தவ தேவாலயங்களும் இராணுவ செல், குண்டுவீச்சுக்களினால் அழித்து நாசமாக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக பௌத்த பிக்குகளின் தலைமையிலான கலகக்காரர்களினால் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ தேவாலயங்கள் உடைத்து, எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. எமது அமைப்பு எண்பத்தொன்பது நாசமாக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களின் பெயர்ப்பட்டியலை சேகரித்துள்ளது.*

*கடைசியாகக் கிடைத்த தகவல்களின் படி சில தனியார் வானொலி நிலையங்கள், ஊடகங்களின் அனுமதிப்பத்திரங்களை சிறீலங்கா அரசு ரத்துச் செய்துள்ளது.*

*கடந்த 25 வருடங்களாக அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளில் பெரும்பான்மையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இருபாலாரும் அடங்கிய 78 தமிழர்கள் இன்னும் தடுப்புக்காவலில் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் அப்பாவிகளே. இவர்களை அரசு தடுத்து வைத்திருப்பது சட்டத்திற்கு முரணானது. யாழ் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமல்போய் செம்மணி புதைகுழிகளில் புதைக்கப்பட்டோர் என நம்பப்படுவோர் பற்றிய விசாரணைகள் யாவும் ஸ்தம்பித்துள்ளன.*

*மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலை பற்றிய விசாரணைகளில் இதுவரை எதுவித முன்னேற்றமும் இல்லை. திரு. குமார் பொன்னம்பலத்தின் படுகொலை பற்றி பல தடவைகள் ஐ.நாவின் மனித உரிமை பிரிவுகளான படுகொலைகள், சுதந்திரமான சட்டத்தரணிகளும் நீதிவான்கள் போன்றவற்றுக்குப் பொறுப்பான விசேட திறமைவாதிகள், சிறீலங்கா அரசிடம் பலதடவைகள் வினாவியிருந்தும் எந்தவித பதிலையும் இதுவரை சிறீலங்கா அரசு கொடுக்கவில்லை. எதிர்வரும் சித்திரை மாதம் சிறீலங்காவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக பதவியிலிருந்த அரசாங்கம், தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த மிகமிக தாமதித்தது.*

*சிறீலங்காவின் புரட்சிவாதிகளாக தம்மைக் காண்பித்து, சிறீலங்கா அரசைக் கவிழ்க்க பலதடவைகள் முயற்சிசெய்த ஜனதா விமுக்தி பெரமுனையினர், பெரும் மனித உரிமை மீறல்களுக்கு காரணமாக உள்ளனர். இவ் ஜனதா விமுக்தி பெரமுனையினர் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் கட்சியுடன் அணிசேர்ந்து தேர்தலில் போட்டியிடுவது, தற்போதைய போர்நிறுத்தத்திற்கும், இனப்பிரச்சினைக்கும் பெரும் பங்கம் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.*

*இக்கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் வேளையிலேயே சிறீலங்காவின் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகிவிடும். தற்செயலாக ஜனாதிபதியின் அணியைச்சேர்ந்த கட்சிகள் அரசாங்கத்தை அமைக்கும் நிலை உருவாகினால் நிட்சயம் யுத்தநிறுத்தமும் இனப்பிரச்சினையும் பெரும் கேள்விக்குறியாகிவிடும்.*

*கடந்த பொதுத் தேர்தலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்ட மக்களின் வாக்களிக்கும் உரிமையை சிறீலங்கா இராணுவத்தினால் மறுக்கப்பட்டது. இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறல். இதே நிலை எதிர்வரும் தேர்தலில் ஏற்படாது பார்ப்பது சர்வதேச சமுதாயத்தின் ஓர் கடமையாகும்.*

*ஆகையால் சிறீலங்காவின் மனித உரிமை நிலைகளை நிச்சயம் இந்த கூட்டத்தொடர் கவனத்தில் கொள்ளவேண்டுமென நாம் வேண்டுகிறோம்.*

*நன்றி.*

*ச.வி. கிருபாகரன்*
*பொதுச்செயலாளர்*
*தமிழர் மனித உரிமைகள் மையம்*

# பிரிந்து நின்றால் 1,2,3,4 இணைந்து நின்றால் 1234

உடன்பிறப்புகளே!

முல்லாவின் கதை ஒன்று...

முல்லாவிற்கு திருமணம் நடைபெற்று தேனிலவுக்கு மனைவியுடன் செல்கின்றார். படகு ஒன்றில் இருவரும் கொஞ்சிக் குலாவியபடி மகிழ்ச்சியாகச் செல்கின்றனர். திடீரென்று கடும் காற்றும் புயலும் மழையும் வருகின்றது. படகு ஆடுகின்றது. புயலின் அறிகுறி தெரிகின்றது. புதுப்பெண் பயந்துவிட்டார். உடனே கணவனைக் கட்டிக்கொண்டால். அவளின் உடல் நடுங்குவதை கணவனால் உணரமுடிந்தது.

ஆனால் கணவனோ சிரிக்கின்றான். வாய்விட்டுச் சிரிக்கின்றான். மனைவி அவனை உற்றுப்பார்க்கிறாள். அவளுக்குச் சந்தேகம் பிடித்துக்கொண்டது. எதற்கும் துணிந்து கேட்டுவிட்டாள். `ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?' படகு கவிழப்போகின்றதே என்ற பயமில்லையா? புயல் வரும்போல் தெரிகிறதே? உங்களுக்கு உயிர் மேல் ஆசையில்லையா?' என்று நடுங்கியபடியே கேட்டாள்.

உடனே அந்தக் கணவன் - தன்னிடமிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து அவளின் முகத்துக்கு நேரே சுடுவதைப் போல்க் காட்டினான். அதனை மனைவியின் நெற்றிப் பொட்டில் வைத்தான். இப்போது அவள் சிரித்தாள். ஆனால் அவன் அவளைப் புரிந்துகொண்டாலும் கேட்கிறான். `ஏன் உனக்கு துப்பாக்கியைக் கண்டால் பயமில்லையா? உனக்கு உயிரின் மீது ஆசையில்லையா?' அவன் கேட்கிறான்.

`அதெப்படி நான் பயப்படமுடியும்?`

`ஏன்?`

`என்னை அன்பு செய்பவரிடத்திலல்லவா இந்தத் துப்பாக்கி இருக்கின்றது. என்னை அதிகம் நேசிப்பவரின் கையிலல்லவா இந்தத் துப்பாக்கி இருக்கின்றது, நான் கடவுள் போல் நேசிக்கும் உங்கள் கையிலல்லவா இந்தத் துப்பாக்கி இருக்கின்றது, நான் ஏன் பயப்படப் போகிறேன்.?` என்றாள் மனைவி.

உடனே முல்லா 'அதேபோல்தான் இந்தப் புயலும், காற்றும், மழையும் என்னை அன்பு செய்பவரின் கையில்தான் இருக்கின்றது. எனவே நான் ஏன் பயப்படவேண்டும்' என்று கேட்டார்.

ஒரு கணவனின் மீது மனைவி வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், கடவுள் மீது ஒருவர் எத்துணை நம்பிக்கை வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவும் இந்தக் கதை சொல்லப்படுவதுண்டு. இது 'நான் கடவுள் போல் மதிக்கும்' ஒருவர் மீது எத்துணை நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்பதற்கும் பொருந்தும்.

கப்பல் ஒன்று கடல் வழியே போய்க்கொண்டிருக்கின்றது. அதிலே பயணம் செய்கின்றவர்கள் அனைவரும் கப்பல் தலைவனின் மீது நம்பிக்கை வைத்து செல்கின்றனர். வழியில் புயல் அடிக்கின்றது. தலைவனின் மீது பயணிகள் சந்தேகம் கொள்கின்றனர். தலைவனின் கட்டளையை பயணிகள் ஏற்க மறுக்கின்றனர். தலைவன் எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப் பார்க்கிறான். பயணிகள் கப்பற் தலைவனை தூக்கி எறிகின்றனர். கடைசியில் அவர்கள் தாம் செய்வதறியாது தவிக்கின்றனர். இறுதியில் கப்பலுடன் அவர்களும் சேர்ந்து மூழ்கிப் போகின்றனர்.

வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று நம்பிக்கை. கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், அரசியல்வாதிகள் - மக்கள், தலைவர்கள் - தொண்டர்கள் என்று ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைக்கவேண்டிய இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மீது நம்பிக்கை வைக்கவேண்டிய வரலாற்று கட்டாயத்தில் சகல தமிழ் மக்களும் உள்ளனர். அதனை மக்கள் ஏற்றுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. தாம் நம்பிக்கைக்கு உரியவர் என்பதை அவர் பல தடவைகளில் எடுத்துக்காட்டியிருக்கின்றார். அமெரிக்காவாக இருந்தாலும், இந்தியாவாக இருந்தாலும், சிறீலங்கா அரசாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவர்களிடம் உதவிகளை பெற்றாலும் - அவர்களின் சொல்லுக்கு கட்டுப்படாத நிலையில் இலட்சியம் ஒன்றையே குறிக்கோளாக, மக்களின் விடுதலைக்கான பயணத்தை விட்டுக்கொடுக்காது தனக்கு உதவியவர்களை உதறித்தள்ளவும் - ஏன் அவர்களை எதிர்க்கவும், துணிந்து பல தடவைகளில் தாம் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு உரியவர் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

புலிகளுடன் முரண்பட்டு நின்ற பல தமிழ் இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் கூட அதனை இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசினால் போதுமானது. எங்களுடன் பேசத் தேவையில்லை என்று சகல தமிழ் கட்சிகளும் அரசிடமும், இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடும் வெளிநாட்டு மத்தியஸ்தர்களிடமும் தெரிவித்துள்ளனர். ஏன் மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் -அமைச்சர் அஸ்ரப் அவர்கள் கூட `விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு வந்தால் நான் என்னுடைய முஸ்லிம்களுக்கான தனி அலகு கோரிக்கையை கைவிடத்தயார்' என்று எரிக் சோல்கைம்மிடம் தெரிவித்திருந்தார். இது விடுதலைப் புலிகளின் மீது அனைவரும் கொண்டுள்ள நம்பிக்கையையே காட்டுகின்றது.

இன்று புலிகளுக்குள் ஒரு பிரச்சினை வராதா என்று எதிர்பார்த்திருந்த உள்ளூர் எதிரிகள் கூட ஏங்கிப் போய் நின்கிறார்கள். இது முதலுக்கே மோசம் என்பதுபோல்.

வரலாறு சில விடயங்களை எங்களுக்குக் கற்றுக்கொடுக்கும். சீனப் புரட்சியில் சீனப் போராளிகள் மாவோ சேதுங் மீது சந்தேகப்பட்டிருந்தால், ரஷ்யப் புரட்சியின் போது லெனினின் மீது ரஷ்யப் போராளிகள் சந்தேகப்பட்டிருந்தால், கியூபா புரட்சியின்போது பிடல் காஸ்ரோயை போராளிகள் சந்தேகித்திருந்தால், வியட்நாம் யுத்தத்தில் கோசிம்மை போராளிகள் சந்தேகித்திருந்தால்... இன்றைக்கு அந்த நாடுகளுக்கு சரித்திரமே இல்லாமல் இருந்திருக்கும்.

`நீ எல்லாரையும் சந்தேகப்படு. அப்போதுதான் நீ உண்மையான போராளியாக இருக்கலாம்' என்று தலைவர் சொல்லிக்கொடுத்ததை தவறாக புரிந்துகொண்டீர்களோ?

`சாதி ஒழிப்பு, சமபந்தி' என்ற சொல்லே பயன்படுத்தக் கூடாது. அப்படி அந்தச் சொல்லைச் சொல்லும்போது சாதி என்பது இருக்கிறது என்பது ஞாபகப்படுத்தப்படுகின்றது - என்று சொன்ன தலைவருக்கு இப்படியொரு சோதனை.

எப்படி இந்தப் பிரச்சினை உருவானது, எப்படி முன்னர் ஆதிகால சமுதாயம் பிராந்தியங்களாகப் பிரிவுபட்டிருந்தது என்று தமது அரிப்பைத் தீர்த்துக்கொள்ள - குட்டையைக் குழப்ப பல எழுத்தாள எருமைகள் புறப்படப் போகின்றனர் என்பதை நினைக்கவே பயமாக இருக்கின்றது.

எவருக்கு எங்கள் பிரச்சினை அவரின் பிரச்சினைக்குத் தீர்வாகின்றதோ, - அவர் எங்கள் பிரச்சினையின் தீர்வு குறித்து எழுதப்போகின்றார் என்று நினைக்கவே நடுங்கிறது. மட்டக்களப்பு ஆயர் சொன்னதுபோல், இப்படியொன்று நடந்ததே மறக்கப்பட வேண்டும்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு 'அறப்படிச்ச மூஞ்சூறு கழுநீர் பானைக்குள் விழுந்தது' என்பது அது. உண்மையில் அதல்ல அந்தப் பழமொழி. 'அறவடிச்ச முன்சோறு கழுநீர் பானைக்குள் விழுந்தது' என்பதே சரி. அதாவது ஊரில் சோற்றுப் பானையில் கஞ்சி வடிக்கையில் சில பருக்கைககள் கஞ்சிக்குள் விழவே செய்யும். ஒரு பானை சோற்றுக்காக ஒரு சில சோறு கஞ்சிக்குள் கல்லறை காணும். அது தவிர்க்க முடியாது.. விடுதலைப் போராட்டப் பாதையும் அப்படித்தான். அதற்காக தவறுகளை எல்லாம் நியாயப்படுத்தவேண்டும் என்பதோ அல்லது கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற வேண்டும் என்பதோ எனது வாதமல்ல.

ஆனால் நாம் இன்று ஒரு வரலாற்றுக் கடமையின் முன் நிற்கிறோம். நாம் விரும்பியோ விரும்பாமலோ இலங்கைத் தமிழர்கள் புலிகளின் தலைமையை அதன் தலைவரை ஏற்கவும் நம்பவும் வேண்டியது வரலாற்றுக் கடமை. இது தவிர்க்கப்பட்டால் தமிழன் என்றொரு இனம் இலங்கையில் இருந்தது என்பதை வருங்காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சியில்தான் கண்டுபிடிக்கமுடியும்.

விடுதலை அமைப்புக்கள் ஆயிரம் தமிழீழத்தில் உருவானபோதும், அவை யாவும் அவற்றின் தலைமைகள் யாழ்ப்பாணத்தில் உருவானபோதும் - தமிழீழத்தின் தலைநகர் திருமலைதான் என்று எந்தவொரு அமைப்பும் சொல்லாமல் இருந்ததில்லை. தமக்கிடையில் என்ன வேறுபாடுகள் கொண்டிருந்தாலும் அனைத்து தமிழ் அமைப்புக்களும் கட்சிகளும் தமிழீழத்தின் தலைநகர் திருமலையென்றே கூறினர். அனைத்து அமைப்புகளும் தமிழர்களுக்குத் தீர்வு புலிகளால் தான் முடியும் என்பதை இப்போது ஒப்புக்கொண்டுள்ளன. அது காலத்தின் கட்டாயம். அதனால்தான் மெல்ல ஒரு தீர்வு வந்தது. அட அதையும் மெல்ல வருகின்றனரே..! ஆடுகள் அடிபட்டால் ஒழுகும் இரத்தத்தைக் குடிக்க ஓநாய்கள் காத்திருக்கின்றனவே?

எவருக்கு எங்கள் பிரச்சினை அவரின் பிரச்சினைக்குத் தீர்வாகின்றதோ, அவர் எங்களுக்குள் பிரச்சினையைத் தூண்டிக்கொண்டே இருப்பார் - அவரின் பிரச்சினை தீரும்வரை.

'தலைக்கு மட்டும் தயைணையா? வாய்க்கு மட்டும் உணவா? வேலைசெய்வது கைகால்கள், தலைக்கு மட்டும் கிரீடமா?' என்று உடம்பின் ஒவ்வொரு உறுப்பும் கேள்விகேட்கத் துவங்கினால் என்ன நடக்கும். வேலைசெய்ய வேண்டிய உறுப்புகள் வேலைநிறுத்தம் செய்தால் என்ன நடக்கும்? வீரத்தைக் காட்டவேண்டியவை விறைத்துப் போய்விடும். உடம்பு உடலமாகிவிடும். சாதனை படைக்கவேண்டியது சடலமாகிவிடும். தமிழர்களும் அப்பத்தான். தமிழர் சரித்திரம் படைக்கமுடியாது. தரித்திரம்தான் படைக்கலாம் என்றாகிவிடும்.

இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது - மட்டக்களப்பு கவிஞன் வாமதேவனை.

அவனின் கவிதைகளை யாழ்ப்பாணத்தில் தொகுத்து வெளியிட்டது டொமினிக் ஜீவாவின் மல்லிகை(ப்பந்தல்) வெளியீடு. அதில் ஒரு கவிதை..

அந்த மட்டக்களப்புக் கவிஞனின் கவிதை..

தனித்து நின்றால் 1,2,3,4,
இணைந்து நின்றால் 1234
புரிந்து கொண்டால், அதுபோதும் எமக்கு !

**நன்றி - வாசகன்**

# கருணா உருமாறியது எப்போது..?

- யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

எமது மக்களது விடுதலைப் போராட்ட வரலாறானது பல தடைகளையும் இன்னல்களையும் தாண்டியே வந்துள்ளது. எனவே, பிரதேச வேறுபாடு இன்றி நாம் ஒன்றுபடவேண்டும். நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கும் போது எமது விடுதலையை வென்றெடுக்க முடியும் என மட்டு. – அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். கடந்த 15ம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமகால அரசியல் நிலைமை பற்றி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண மூத்த உறுப்பினர் கரிகாலன் மற்றும் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய கௌசல்யன், மட்டு – அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த போராளிகள் தமிழீழம் முழுவதிலுமே போராடி வீரச்சாவடைந்துள்ளனர். இத் தியாக வரலாறென்பது என்றும் மறைக்கமுடியாத, மறக்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. அண்மைக்கால கருணாவின் முடிவு என்பது, எம்மை அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த மனவேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது. நாம் எதிர்பார்த்தவை வேறு, எமது தூரநோக்குகள்வேறு, தலைவருக்கூடாகத் தான் தமிழருக்கு என்று ஒரு நாடு கிடைக்கமுடியும். தமிழீழத்திலேதான் தமிழர்களுக்கு என்று ஒருநாடு அமையமுடியும் என்ற இந்த வரலாற்றை நாங்கள் வென்றெடுக்க முடியும். இதற்காக, தமிழர்கள் அனைவரும் ஒன்று திரளவேண்டும். இந்த ஒற்றுமையைத்தான் நாங்கள் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம். சிங்களப் பேரினவாத அரசு நன்கு திட்டமிட்டு 1983ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் மீதான உளவியல் யுத்தத்தை மேற்கொண்டு வருகிறது. அது இரண்டு வகையாக மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் ஒன்று பிரதேசவாதம் என்பதை ஊட்டிப் பிரிவினைகளை மேற்கொள்வதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டது. இந்த வலையிலே வீழ்ந்துவிடாமல் இருக்க நாம் முயற்சி செய்துவந்தோம். அடுத்து கிழக்கில் உள்ள பிள்ளைகளை வடக்கிற்கு அனுப்பிக் கொல்கின்றார்கள் என்கின்ற உளவியல் யுத்தத்தை திட்டமிட்டு மேற்கொண்டு வந்தது. தற்பொழுது, இந்த இரண்டையுமே கருணா செயற்படுத்திவருகின்றார்.

இவை நீண்டகாலமாக இடம்பெற்ற பிரச்சினை அல்ல. மக்கள் மத்தியில் பல கேள்விகள் இருக்கின்றன. எமது புலனாய்வுப்பிரிவு இதைக் கண்டுகொள்ளவில்லையா? போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. அவ்வாறான சந்தேகங்கள் எழாத வகையிற்தான் இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இன்று அந்நிய சக்திகளின் திட்டமிட்ட சதிக்கு அவர் துணைபோயுள்ளார் என்பது அவரது தன்னிச்சையான முடிவேயாகும். ஏனெனில் கடந்த 29ம் திகதி தான் எமக்கு உறுதியாக, ஆணித்தரமாகச் சொல்லப்பட்டது. நீங்கள் முதுகெலும்புள்ளவர்களாக இருந்தால் என்னுடன் சேர்ந்து போரிடுங்கள். இவ்விடத்தில் குப்பி கடித்து சாகவும் நான் தயார். விரும்பினால் அனைவரும் என்னுடன் சேர்ந்திருங்கள் அல்லது வீட்டுக்குப் போங்கள். விரும்பினால் வன்னிக்கும் போகலாம். நாங்களே உங்களை அழைத்துச்சென்று விடுகின்றோம் என்று அன்று தான் கருணா கூறினார். அன்றுதான் தமிழீழத்தின் 30 பொறுப்பாளர்கள் பற்றிய பிரச்சினையைத் தெரிவித்தார். இதற்கு முன்னர் அதுபற்றி அவர் எம்மிடம் பேசியதே இல்லை. நாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஏனெனில் அவர் நமக்கு கூறும் விடயம் நாம் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டத்திற்காக ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும். எனக்குப் பொறுப்புகள், ஆசைகள் எதுவும் தேவையில்லை தலைவர் என்னை இயக்கத்தை விட்டுப்போ என்று சொன்னால் நான் போய் விடுவேன் என்றே சொல்வார். எனவே இப்படியான ஒருபிரச்சினை ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அன்றைய ஒன்றரை மணித்தியாலக் கூட்டத்தின்போது அவரால் எடுக்கப்பட்ட முடிவுகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல, அந்தக் கூட்டத்தின் இறுதியில் அவர் கூறியவிடயம் யாரும் என்னோடு பேசக்கூடாது என்பதே. நீங்கள் உங்கள் கடமைகளைப் போய்க் கவனியுங்கள் என ஆணித்தரமாகக் கூறினார்.

**எமது விடுதலைப் போராட்டத்திற்காக உழைக்கும் போராளிகளும் இந்தப் போராட்டத்தின் பின்புலத்திலிருந்து கண்ணீர் சிந்தி உழைத்த மக்களும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் தலைவர் உறுதியாக இருக்கின்றார்.**

மட்டக்களப்பில் நீண்டகாலமாக, அதாவது 1993ம் ஆண்டில் இருந்து 2000ம் ஆண்டு அரசியல்துறைக்கு வரும்வரை நான்தான் நிதிப்பொறுப்பாளராக இருந்தேன். ஆனால், தற்போது அவரே நிதி நடவடிக்கைகளை

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# தமிழின விரோதிகளின் நோக்கத்தை நிறைவு செய்ய முயலும் கருணா!

**— ஜெயராஜ் —**

> கருணாவிற்கு ஒன்றைக் கூறிக்கொள்ள வேண்டியதாயுள்ளது. அதாவது, இடி அமீன் போன்ற தற்பெருமை பேசுகின்றவர்களும், தமது தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும் நீண்டகாலத்திற்கு ஆட்சியதிகாரத்திலோ, பொறுப்புக்களிலோ நிலைத்து நின்றதில்லை. தமது இறுதிக் காலங்களைத் தமது மண்ணில் கழித்ததுமில்லை.

கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்தை விட்டு வெளியேற முயற்சித்தது ஏன்? கருணா தற்பொழுது கூறுவதுதான் என்ன? கடந்த இருவாரங்களாக கருணா மக்களுக்கு வெளிப்படுத்துபவை என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு இன்று பதில் தேடக் கூடியதான தகவல்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. கடந்த இரு வாரங்களில் கருணா வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களில் இருந்து இதற்கான பதிலைக் கண்டுகொள்ள முடியும்.

கடந்த மூன்றாம் திகதி 'அசோசியேட்டஸ் பிரஸ்' ஊடாக தனது பிரிவினையை அறிவிப்புச்செய்த கருணா, அதற்கான காரணமாக மட்டு-அம்பாற்ற மாவட்டங்கள் புலிகளின் தலைமையால் புறந்தள்ளப்படுவதாகவும், விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்புக்களில் வடபகுதியினரே முழுமையாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். இதன் காரணமாகத்தான் தனித்தியங்கப்போவதாகவும் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் வெளியிட்டதாக வெளியாகிய பகிரங்கக் கடிதம் ஒன்றில், தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தான் தனித்துச்செயற்பட அனுமதி அளிக்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார். இதனைத் தொடர்ந்து சில நாட்களின் பின் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டு அம்மான், காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன், நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் பொறுப்புக்களில் இருந்து நீக்கப்படுவார்களேயானால், தான் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கருணாவின் இவ்வாரம்ப அறிவிப்புக்கள், ஒருபுறத்தில் தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிப்பவையாகவும், மறுபுறத்தில் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தனக்குத் தானே முடிசூடிக்கொள்ளும் நடவடிக்கைக்கென மேற்கொள்ளப்பட்ட முன்னோடி நடவடிக்கைகளாகவும் இருந்தன. இதற்கு அப்பால், இவ் அறிவிப்புக்களில் தர்க்கமோ, அர்த்தப்பாடோ அன்றி நடைமுறைச் சாத்தியப்பாடானவையாகவே இருக்கவில்லை.

ஏனெனில் விடுதலைப் புலிகள் தலைமை இந்த வகையிலான குழப்பம், மற்றும் பிளவு நடவடிக்கைகளுக்கு எப்பொழுதுமே இடமளித்தது கிடையாது. எந்த நெருக்கடிகளையும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் சவாலாக எடுத்துக் கொண்டுள்ளாரே ஒழிய - மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றிற்கு பணிந்துபோனதில்லை. மறுபுறமாக நியாயம், உண்மைத்தன்மை என்பனவற்றின் அடிப்படையிலேயே தலைவர் பிரபாகரன் அவர்களை அணுகுதல் முடியும்.

அடுத்ததாக விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனைகள், மிரட்டல்கள் என்பதற்கு எவ்வேளையிலும் பணிந்துபோனது கிடையாது. இதனை வரலாறே கூறும். உலக வல்லரசாகட்டும், பிராந்திய வல்லரசாகட்டும், சிறீலங்கா அரசாகட்டும் சரி, நிபந்தனை என்ற பெயரில் விடுதலைப் புலிகளைப் பணிய வைக்க முடியாது. குறிப்பாகச் சொல்வதானால் நிபந்தனை என்பது வெளிப்படுத்தப்பட்டாலே அது தொடர்பான விடயங்கள் விடுதலைப் புலிகளால் ஆராயப்படமாட்டாது என்பதே கடந்தகால அனுபவமாகும்.

இது கருணாவிற்குத் தெரியாத விடயமுமல்ல. ஆனால் கருணா இத்தகைய குற்றச்சாட்டுக்களையும், நிபந்தனைகளையும் முன்வைத்தமையானது, விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து இயங்குவதற்கான அணுகுமுறைக்கானதல்ல. தனது பிரிவினைக்கு நியாயம் கற்பிப்பதற்கானதே ஆகும். அதாவது மட்டு-அம்பாறை மாவட்டங்களுக்கு தனக்குத்தானே முடிசூடிக் கொள்வதற்கான செயற்பாடே ஆகும்.

ஆனால் கருணா விடுதலைப் புலிகள் மீதும் தமிழீழத் தேசியத் தலைமை மீதும் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் என்பவை அர்த்தமற்றவை என்பதும் - கருணாவின் நோக்கம் எத்தகையது - அதாவது கருணா பிரிந்து செல்வதற்கான நோக்கம் என்ன என்பது மிக விரைவிலேயே வெளிவந்துவிட்டது. அதாவது கருணா தனது முடிவை அறிவித்து இரண்டு வார காலத்திற்குள் வெளிவந்துவிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் பிராந்திய ரீதியிலான பாரபட்சம் காட்டப்படுவதில்லை என்பதற்குத் தமிழீழத் தேசியத் தலைவரினால் வழங்கப்பட்ட பொறுப்புக்களில் அதாவது தமிழீழ பிரதேச நிர்வாகத்தில் தமிழீழப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதியினரும் உள்ளனர். இதற்கும் அப்பால் மட்டு - அம்பாறை மாவட்டத்தின் கீழ் தளபதிகளாக பொறுப்பாளர்களாக இருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள், தளபதிகள் கருணாவின் நடவடிக்கையை அடுத்து வன்னிக்குத் திரும்பியுள்ளமையே கருணாவின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்பதையும், தமிழீழத் தேசியத் தலைவர் மீது மட்டு - அம்பாறை போராளிகள், மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

ஆனால், இவற்றிற்கும் அப்பால் ஏன் மேலாக என்று கூறுமளவிற்கு கருணா முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கும், விடுத்த கோரிக்கைக்கும் மாறானதாகவும், அவரது கடந்த 20 வருடகால நடவடிக்கைக்கு மாறாகவும் அவர் தற்பொழுது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளே உள்ளன.

தமிழீழத் தேசியத் தலைமைக்கு எதிரான பிரதேசவாதத்தை கிளப்பிய கருணா இறுதியாக 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தனது நோக்கங்கள், குறிக்கோள்கள், ஆற்றல் என சில முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். இவை கருணா எந்த நோக்கத்திற்காக, யாருடைய ஏவலராகச் செயற்பட்டுள்ளார் என்பதை வெளிப்படுத்த போதுமானதாகும்.

'இந்து' பத்திரிகைக்கு கருணா அளித்த பேட்டியில் சில ஆச்சரியமான தகவல்களும் இருக்கத்தான் செய்தன.

*(01) தான் (கருணா) இல்லாது விட்டால் விடுதலைப் புலிகளால் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட முடிந்தாலும் அவர்களால் மரபு ரீதியிலான சண்டைகளை மேற்கொள்ள முடியாது. ஒரு கெரில்லா இயக்கமாகவே செயற்பட முடியும்.*

*(02) விடுதலைப் புலிகளுக்கு 75 சதவீத பலத்தையும், படையணியையும் நாமே கொடுத்துள்ளோம். இராணுவ தொழில்நுட்பத்தையும் வழங்கினோம்.*

*(03) தமிழர் தாயகம் என்ற கோட்பாடு பாதிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வன்னித் தலைவர்கள் தாங்கள் படித்தவர்கள் என்ற கர்வத்தில் உள்ளார்கள்.*

*(04) போருக்கு முன்னர் இங்கே தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் இடையே நல்லுறவு இருந்தது. திட்டமிட்ட குடியேற்றம் ஒரு பிரச்சினையைத் தவிர கிழக்கில் பெரிதாகப் பிரச்சினை எதுவும் இல்லை.*

*(05) தனிநாடு என்பது சாத்தியமில்லை.*

இத்தகைய கருணாவின் கூற்றுக்கள், கருணா எதன் அடிப்படையில் செயற்படுகின்றார் என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தப் போதுமானவையாகும்.

அதாவது கருணா 'இந்து'விற்கு வழங்கிய பேட்டியின்போது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களின் கூற்றுக்களையும், அவர்களின் நோக்கங்களையும் தெளிவாகவே பிரதிபலிப்பவராகிவிட்டார். விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான சக்திகளின் அடிப்படைக் குறிக்கோள்கள் இரண்டு.

*(01) தமிழர் தாயகத்தை சிதைத்தல்.*


*(02) விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துதல்.*

தமது இக்குறிக்கோளை எட்டுவதற்கான பாதையில் கருணாவை அணுகிய போது - அன்றித் தூண்டியபோது, அவர்கள் கருணாவின் மனதில் ஊட்டக் கூடியதாக இருந்தது பிரதேசவாதமே. ஏற்கனவே தமிழ் மக்களின் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் குறைப்பதற்காக கையாளப்பட்ட வழிமுறைதான் இது.

குறிப்பாக, கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டில் கூர்மை பெற்றிருந்த சாதியத்தை கையிலெடுக்க முற்பட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது போல், மட்டு-அம்பாறைப் பகுதியில் பிரதேசவாதத்தை கையில் எடுத்துக்கொண்டார்கள். கடந்த காலத்திலும் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தற்பொழுது பலமான சக்திகள் இவ்விடயத்தில் அக்கறை காட்டின.

இதேவேளை கருணா வடக்கில் போரிட்டதன் மூலம் தனது ஆற்றல் பற்றியதும், இராணுவ திறன் பற்றியும் அதீத மதிப்பீட்டிற்கும், தற்பெருமைக்கும் உட்பட்டிருந்த அதே வேளை, தமிழீழத் தேசியத் தலைமையினால் வழங்கப்பெற்றிருந்த அதிகாரங்கள், ஆயுத தளபாடங்கள் என்பனவும் கருணா தன்னை ஒரு 'பெருந்தலைவன்' என்ற அளவிற்கு இறுமாப்புக் கொள்ள வைத்திருந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்த முற்பட்டிருந்த சக்திகள் கருணாவின் தற்பெருமை மேலும் வளரத் தூபமிட்டன. மட்டு - அம்பாறைப் பிரதேசத்தின் முடிசூடா மன்னராகலாம் என அவருக்கு

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



கருணா

மண் வாசனை நிறைந்த சுவைமிகு இறைச்சி வகைகட்கு யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

அனுபவம் ஆதரவு வரவேற்பு
எங்கே அது இங்கே
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tel: 0619337648 0664899398


யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE

நாவிற்கு இதமான சுவை
கைக்கடக்கமான விலை
எந்த நாளும் நீங்கள்
தேட வேண்டிய நிறுவனம்
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

Pub-Fr

# சாதனையாளர் முரளிதரன்

உலகின் முன்னணி சுழல்பந்து வீச்சாளர்களில் ஒருவரும், சிறீலங்கா அணியின் பந்துவீச்சு நம்பிக்கை நட்சத்திரமுமான முத்தையா முரளிதரன் 500 விக்கெற்றுக்களை வீழ்த்தியவர் வரிசையில் மூன்றாவதாக இணைந்துள்ளார். கடந்தவாரம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ரெஸ்ற் தொடர் கண்டியில் நடைபெற்றது. முதல் இனிங்சில் அவுஸ்திரேலியாவின் கஸ்பரோவிக்சின் விக்கெற்றை வீழ்த்தியதின் மூலம் 500 வது ரெஸ்ற் விக்கெற் எனும் பெரும் இலக்கினை அடைந்தார். 1992ம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ரெஸ்ற் தொடரில் முதல் முறையாக விளையாடிய முரளிதரன் மூன்று விக்கெற்றுக்களை வீழ்த்தி தனது எதிர்கால உயர்விற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார். பெரும் வர்த்தகரின் மைந்தனான அவர் கண்டி மண்ணின் மைந்தன்தான். இன்று அதே மண்ணில் வீழ்த்திய விக்கெற்றுக்கள் மூலம் சாதனையாளர் வரிசையில் இடம்பிடித்துள்ளார். இவரது இச்சாதனையை அடுத்து வாழ்த்துத் தெரிவித்த சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா? பலமுறை எமது நாட்டின் தேசியக் கொடி வெற்றிப் பிரமிதத்துடன் பறப்பதற்கு நீங்கள்தான் காரணகர்த்தா என்பதை நான் அறிவேன். மேலும் நீங்கள் பெருமையடைய வாழ்த்துகின்றேன்.? என்று கூறியுள்ளார்.



மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் குர்னி வால்ஸ் நூற்றுமுப்பத்திரண்டு ரெஸ்ற் போட்டிகளில் 519விக்கெற்றுக்களை வீழ்த்தி முதலாவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் சேன்வார்ன் 109 ரெஸ்ற் போட்டிகளில் 511 விக்கெற்றுக்களையும், முரளிதரன் 87 ரெஸ்ற் போட்டிகளில் 500 விக்கெற்றுகளையும் வீழ்த்தியுள்ளனர். கடந்த வாரத்திற்கு முந்தைய வாரம் காலியில் நடைபெற்ற முதலாவது ரெஸ்ற் தொடரில் 500 விக்கெற் எல்லையை சேர்ன் வார்ன் தாண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. சுழற்பந்து வீச்சாளர் வரிசையில் 500 விக்கெற்றுக்களை வீழ்த்தியவர்களில் முரளிதரன் இரண்டாம் இடத்தை பெறும் அதேவேளை குறைந்த ரெஸ்ற் தொடரில் (87) இவ்வெல்லையை அடைந்த முதல்வீரர் என்ற பெருமையையும் பெறுகின்றார்.

?உலகின் மிகப் பலம் பொருந்திய அணிக்கு எதிராக எனது மண்ணில் கிறிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த நான் இன்று அதே மண்ணில் அதே அணியுடனான ஆட்டத்தில் இன்று 500 விக்கெற் என்ற எல்லையை அடைந்த இரட்டிப்பு மகிழ்வைத் தருகின்றது. 2007ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண சுற்றுவரை விளையாடத் தீர்மானித்துள்ளேன். அவ்வாறு விளையாடும் பட்சத்தில் இருபதிற்கும் மேற்பட்ட ரெஸ்ர் தொடர்களில் பங்குகொள்ள முடியும் அதனூடாக 600 தொடக்கம் 650 விகெற்றுக்களை வீழ்த்தும் சந்தர்ப்பம் கிட்டும்? என்று முரளிதரன் கூறியுள்ளார். இச்சுற்றுப்பயணத்தில் முதல் ரெஸ்ரில் சேன்வான் சாதனை படைத்தார். 511 விக்கெற்றுக்களுடன் இருக்கும் சேர்வான் அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறும் மூன்றாவது ரெஸ்ரில் முதற் சாதனையாளர் ஆவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

# அனைத்துப் பிராந்திய சம்மேளனக் கிண்ணம் 2005

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்படும் 2005ம் ஆண்டிற்கான அனைத்துப் பிராந்திய சம்மேளனக் கிண்ணச் சுற்றுப்போட்டி யூன் மாதம் 15ம் திகதி தொடக்கம் 29ம் திகதிவரை ஜேர்மனியில் நடைபெற உள்ளது. இதற்கான அனுமதி கடந்த 18.03.2004 அன்று சூரிச் நகரில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன உயர்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது, 1992ம் ஆண்டு ஆர்ஜென்ரீனா, அமெரிக்கா, சவூதி அரேபியா, ஐவரிகோஸ் எனும் நான்கு நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றுப் போட்டி 1995ம் ஆண்டு அதன் எண்ணிக்கை ஆறாக உயர்த்தியிருந்தது. 1992ம் 1995ம் ஆண்டுச் சுற்றுக்கள் சவூதி மன்னரின் பெயரில் நடாத்தப்பட்டது. 1997ம் ஆண்டுதான் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இச்சுற்றினை தனது ஆழுமைக்கு உட்படுத்தியிருந்தது. இதன்படி 1997ம் ஆண்டு சுற்றினை பிறேசில் வெற்றிகொண்டது 1999இல் மெக்சிக்கோவும் 2001, 2003இல் தொடராகப் பிரான்சும் வெற்றிபெற்றன. 1997ம் ஆண்டுமுதல் இரண்டு ஆண்டுகளிற்கு ஒருமுறை நடைபெறும் இச்சுற்றானது ‘சிறு உலகக்கிண்ணம்’ என்றும் அழைக்கப்படுகின்றது. அனைத்துப் பிராந்திய வெற்றி அணிகளும் இடம்பெறுவது இதன் சிறப்பம்சம் ஆகும். 2001ம் ஆண்டு இச் சுற்றுப்போட்டி பிரான்சில் நடைபெற்றபோது அரையிறுதி ஆட்டத்தில் கமறூன், கொலம்பியா அணிகள் மோதிக்கொண்டன. இவ்வாட்டத்தின் போதே கமறூனின் இடைநிலை வீரர் மார்க் விவியன் போஏ மைதானத்தில் மயங்கிவிழுந்து மரணத்தை தழுவியது இன்னும் உதைபந்தாட்டப் பிரியர்களின் நெஞ்சங்களைக் கனக்க வைத்தவண்ணம்தான உள்ளது.

ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய வட-மத்திய அமெரிக்க, தென் அமெரிக்க பிராந்திய வெற்றி அணிகளுடன் உலக்கிண்ண வெற்றி அணி மற்றும் சுற்றினை நடாத்தும் நாடு என எட்டு நாடுகள் பங்குபற்றும். இவை நான்கு நாடுகளைக் கொண்ட இரண்டு குழுக்களாக வகுக்கப்பட்டு சுற்றுப்போட்டி நடாத்தப்படும். ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இருந்து துனிசியாவும், வட-மத்திய அமெரிக்கப் பிராந்தியத்தில் இருந்து மெக்சிக்கோவும், உலகச் சம்பியன் பிரேசிலும், சுற்றினை நடாத்தும் நாடு ஜேர்மனியும் தெரிவாகிவிட்டது. அவுஸ்திரேலிய, ஆசிய, ஐரோப்பிய தென் அமெரிக்க பிராந்திய சம்பியன் அணிகள் இவ்வாண்டு நடுப்பகுதியில் தெரிந்துவிடும்.

யூன்-யூலையில் நடைபெறும் ஐரோப்பிய பிராந்திய சுற்றில் ஜேர்மனி வெற்றி பெற்றால் இரண்டாவது அணி இச்சுற்றிற்கு தகுதிபெறும். அதேபோலவே தென் அமெரிக்கப் பிராந்தியத்தில் பிரேசில் வெற்றிபெற்றால் இரண்டாவது அணி அத்தகுதியைப் பெறும். யூன் 15 தொடக்கம் 29 வரை நடைபெறவுள்ள இச் சுற்றுப்போட்டி கனோவர், லெய்ப்சிக், கொலோன், நூறென்வேக், பிராங்போர்ட், கெய்சர்சுலோற்றன் ஆகிய ஆறு நகரங்களில் ஐந்து நகரங்களில் நடைபெறும்.

இச் சுற்றுப் போட்டியானது பிராந்தியங்களிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கு உதவுகின்றது. உலகக்கிண்ண சுற்றிற்கு அடுத்ததாக அனைத்துப் பிராந்தியங்களை இணைத்த சுற்றாக அமைவதும் சிறப்பம்சமாகும்’ என்று சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் ஜோசெப் செப் விலெற்றர் கூறியுள்ளார்.

- ஜே.ஜே.

# மரண அறிவித்தல்



**திருமதி அன்னம்மா செல்லையா**
(மண்டைதீவு)

**தோற்றம் - 20.05.1916 மறைவு - 15.03.2004**

மண்டைதீவை பிறப்பிடமாகவும் காலம் சென்ற சிற்றம்பலம் ராசம்மாவின் அன்பு மகளும் காலம் சென்ற செல்லையாவின் அன்பு மனைவியுமாகிய அன்னம்மா 15.03.2004 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற நாகநாதர் ராசம்மாவின் மருமகளும் காலம் சென்ற அன்னலட்சுமி, தங்கம்மா (இலண்டன்), காலம் சென்ற திலகவதி, காலம் சென்ற பாலராஜா, கந்தமூர்த்தி (இலண்டன்), காலம் சென்ற விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணநாயகம் (நீர்கொழும்பு), காலம் சென்ற தருமநாயகம், வடிவாம்பிகை (அவுஸ்திரேலியா), இன்பநாயகம் (கனடா - முன்னாள் அம்பிகா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வெலிகம), தங்கவேலாயுதம் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (தமிழீழம்), நடேசபிள்ளை (இலண்டன் - முன்னாள் வாசுகி ஸ்ரேடஸ் உரிமையாளர் நீர்கொழும்பு), கமலாம்பிகை (கனடா), ஜோகாம்பிகை (Base Hospital நீர்கொழும்பு), பாலமோகன் (கனடா), பிறேமகாந்தன் (பிரான்ஸ்), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

இராசாத்தியம்மா(கனடா), பஞ்சரத்தினம் (பிரான்ஸ்), மனோகரன் (சவுதியரேபியா - முன்னாள் விமானப்படை அதிகாரி கட்டுநாயக்கா), நாகரத்தினம் (கனடா), கோமளம்(சுவிஸ்), இராஜலக்ஷ்மி (தமிழீழம்), பத்மினி (நீர்கொழும்பு), அரசரத்தினம் (கனடா முன்னாள் கடற்படை அதிகாரி திருகோணமலை), தங்கவடிவேல் (Pharmasist - நீர்கொழும்பு), ஜெயலக்ஷ்மி (கனடா), சிவாஜினி (பிரான்ஸ்), குகதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சுமதி, செல்வகுமார், யமுனாராணி, சாந்தகுமார், இந்திரா, சந்திரா, செல்வி, ரவிந்திரன், புவனேந்திரன், இராஜேந்திரன், விஜேந்திரன், சுபாஜினி, சுவேந்திரன், அபிமன்யு, முகுந்தன், இளஞ்செழியன், இளந்திரயன், காலம்சென்ற ராஜன், ரதன், மகிந்தன், சசிகலா, முகுந்தன், வதனா, கமலவாசுகி, சத்தியா, கார்த்திகா, மீனா, கேசவன், சஜிவன், காயத்திரி, ஜனனி, மகிந்தன், பிரியதர்சினி, லாவண்யா, கிசோத், ஜான்சி, கீத்தா, மைதிலி, கனரூபன், அபிராமி, நிசாந், அபிலாஷன், சோமியா, கௌசியா, சஞ்யே, மதுரா, இந்துஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,

கிஷாந்தி, அபிலாஷ், சுஜித், அஜித், அனித்தா, மகிஷான். அகிஷான், உஷான், ராஜினி, வசந், ரஜித், ஹரிஸ், அரன், சரன், பிரவீன், விதுஷன், சாருஜன், றனுஜன், சிந்துஜா, குளோறியா, கஜானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 18.03.2004 வியாழக்கிழமை நீர்கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நீர்கொழும்பு பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் - பிறேமகாந்தன் (அப்பு) (மகன்) 01 64 88 52 71 (பிரான்ஸ்)**
**திரு.திருமதி - குகதாஸ் வாசுகி 01 47 40 13 83 (பிரான்ஸ்)**

(23ம் பக்கத் தொடர்ச்சி)

## கருணா உருமாறியது...

நேரடியாக மேற்கொண்டு வந்தார். ஆயினும் சில நிதி நடவடிக்கைகள் நான் வன்னித் தலைமையகத்துடன் மேற்கொண்டேன். நாம் வன்னிக்குச்சென்று தலைவரைச் சந்தித்த பின்னரே, பல நிதிசார் நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது எமக்குத் தெரியவந்தது. நாம் தலைவரில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோமோ, அந்தளவு கருணாவிலும் வைத்திருந்தோம். இன்று இந்த விடயத்தில் முடிவெடுக்க ஏன் தலைவர் காலம் தாழ்த்தினார் என்கின்ற கேள்விகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக தலைவர் எம்மிடம் கதைக்கும் போது, எனக்குப் பல துரோகங்களும், துரோக வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன. இந்தக் கருணாவிற்கு விசர் பிடித்துவிட்டது. இந்த விசர்த்தனத்திற்கு என்ன முடிவு எடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. இதுபற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன். உடனடியாக அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாதநிலையில் நான் இருக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

எமது விடுதலைப் போராட்டத்திற்காக உழைக்கும் போராளிகளும் இந்தப் போராட்டத்தின் பின்புலத்திலிருந்து கண்ணீர் சிந்தி உழைத்த மக்களும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் தலைவர் உறுதியாக இருக்கின்றார். தன்னுடன் எவரும்வந்து கதைக்கவில்லையென்கின்ற கருணாவின் குற்றச்சாட்டுப் பொய்யானது. ஏனெனில் தமிழ்ச்செல்வன் அண்ணை பலமுறை பல முயற்சிகளை மேற்கொண்டார். கடந்த மாதம் என்னூடாக நேரடியாக ஒரு கடிதம் அவருக்கு (கருணாவிற்கு) கொடுக்கப்பட்டது.

அக்கடிதத்தை எனக்கும் வாசிக்கத் தந்தார். அதில் உங்கள் மீதோ உங்கள் போராளிகள் மீதோ எமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. நீங்கள் வந்து உங்கள் பிரச்சினையைத் தலைவருடன் கதையுங்கள். உங்களைச் சந்திக்க தலைவர் ஆவலாக உள்ளார் என எழுதியிருந்தது. எனக்கு சொன்னார் 'அவங்கள் எழுதுவாங்கள் எனக்கு என்ர வேலை இருக்கு நீ விரும்பினால் போ' என்றார். அன்று நானும் கூறினேன். 'அம்மான் நீங்கள் போங்கள் போய்ச் சந்தித்தால் தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்' என்று. அதற்கு 'என்னை, இயக்கத்தை விட்டுக் கலைக்காததே குற்றம்' எனக் கருணா கூறினார். இன்று நாம் கவலைப்படும் விடயம் அவர் உண்மையான விடுதலைப் போராளியாக இருந்தால், உண்மையான விடுதலைக்காக உழைத்தவராக இருந்தால் போராட்டத்தை விடுத்து தன் வழியே போய் இருக்கலாம். இன்று எமது மாவீரர்களுக்கு எதிராக, சிங்களப் பேரினவாதிகளுக்கு துணைபோகின்ற செயற்பாட்டையும், எமது விடுதலைப் போராட்டத்தை, திட்டமிட்டு பாழடிப்பதற்காகவுமே· இவர் இந்தச் செயலில் இறங்கியுள்ளார். இதுவே எமக்கு வேதனையையும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு களங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அவர் இன்று என்ன உணர்வை, பற்றை ஊட்டி வளர்த்தாரோ அதற்கு எதிராக செயற்படுகின்றார். ஆனால் தலைவர் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கின்றோம். தமிழீழ விடுதலை வரலாறு என்பது தலைவராலே மட்டும் வென்றெடுக்கப்படக்கூடிய ஒன்று. தலைவர் இல்லையென்றால் விடுதலை இல்லை என்று கருணாவே கூறியுள்ளார். நாங்கள் தலைவருடைய காலத்தில் விடுதலை பெற்றெடுக்க வேண்டும். நிச்சயமாக எங்களால் வென்றெடுக்கமுடியும். அதுவும் எமது போராட்ட வரலாற்றிலே தமிழர்களுக்கான விடுதலை தென்படுகின்ற காலப் பகுதியில் இப்படியான குழப்பங்கள் இடம்பெற்றே வந்துள்ளன. இவ்வளவு நாளும் சிங்களப் பேரினவாத அரசும், வெளிநாட்டு சக்திகளுமே இதை மேற்கொண்டன. ஆனால் இன்று எங்களுக்குள் ஒருவரே இதைச் செய்துள்ளார். கருணா மக்கள் மத்தியில் கூறிய கருத்துக்கள் பலம் இழந்துவருகின்றன, காட்டிக்கொடுப்பது என்பது சில தமிழர்களுக்கு கலையாகவே இருக்கின்றது. ஆனால் இது நிரந்தரமானதோ, நிலைத்திருக்கக் கூடியதோ அல்ல. ஒருவரிடம் பொருளாதார வசதியும், அறிவுக் குறைவும் வருகின்றபோதே தாழ்வுச் சிக்கலால் பிரதேசவாதம் தோற்றம் பெறுகின்றது. இவ்வாறு கௌசல்யன் அவர்கள் தனது ரையில் தெரிவித்தார்.

## தமிழின விரோதிகளின்....

(24ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசையூட்டின. இதற்கு தமது ஒத்துழைப்பும் வழங்கலாம் என நம்பிக்கையூட்டின.

இந்நிலையில்தான் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனித்துச் செயற்பட முடிவும் செய்தார். ஆனால் கருணாவின் இம்முடிவிற்குத் தூபமிட்ட இச்சக்திகளின் நோக்கமானது கருணாவின் வெளியேற்றமானது தமிழர் தேசியத்தைச் சிதைப்பதாகவும், விடுதலைப் புலிகளின் பலத்தைச் சிதறடிப்பதாகவும் இருக்கும் என எண்ணினர்.

இவர்கள் ஊட்டிய நம்பிக்கையும் கருணாவின் தன்னைப் பற்றிய தான அதீத மதிப்பீடும் சேர்ந்தே கருணா 'இந்து'வுக்குத் தெரிவித்த கருத்துக்களாகின. அதாவது தமிழர் தாயகம் சிதைக்கப்படுவது பற்றிக் கவலையில்லை. தமிழீழ தனியரசு என்பது சாத்தியமில்லை என்பது போன்ற அறிவிப்புக்களாகும்.

இதேவேளை கருணாவிற்கு பிரதேசவாதத்தை ஊட்டியவர்கள் அன்றி அவரிடம் அடிப்படையாகவே இருந்த பிரதேசவாத உணர்வை வளர்த்தெடுத்தவர்கள், தற்போதைய பிரச்சினைகள் யாவற்றிற்கும் வடக்கே காரணம் என்ற தோற்றப்பாட்டை உருவாக்க முற்பட்டுள்ளனர். ஆனால், இனப்பிரச்சினையின் தோற்றுவாயானது மொழிப் பிரச்சினையாக உருப்பெற்றது எனினும் இன்று இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டமுடியாத பெரும் பிரச்சினையாக இருப்பது குடியேற்றங்கள் என்ற ரீதியில் சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையேயாகும். இனப்பிரச்சினையைப் பொறுத்து அனைத்துப் பிரச்சினைகளையும் விட கூர்ப்புப் பெற்ற பிரச்சினையாகவே அது உள்ளது.

ஆனால், இதனைக் கருணா ஒரு பிரச்சினை மட்டுமே எனக் கூறி அதனை ஒரு சிறு பிரச்சினையாக்கிவிட்டுள்ளார். ஆனால், கருணா ஒன்றை நினைவிற்கொள்ளவில்லை. அவருக்குப் பிரதேசவாதத்தை ஊட்டியவர்கள் திட்டமிட்டு ஞாபகப் படுத்தாமல் போன விடயமும் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றிற்கு இடையூறாக உள்ளதே குடியேற்றம்தான் என்பதையே. அதிலும் குறிப்பாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள குடியேற்றம் தொடர்பான பிரச்சினையுமேயாகும். அவ்வாறு இல்லாது கருணா தமிழ்த் தேசியத்தை சிதைக்க முற்பட்டது போன்று அம்பாறையும் பேரினவாத சக்திகளிடம் தாரைவார்க்க முன்வந்து விட்டாரோ எனச் சந்தேகம் கொள்ள வைக்கிறது. தமிழ்த்தேசியவாதம் குறித்து கவலை கொள்ளாத கருணா அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் குறித்து கவலை கொள்வார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

மாறாக கவலை கொள்பவராக இருப்பின் கருணா சிங்களக் குடியேற்றப் பிரச்சினை இவ்வளவு சாதரண பிரச்சினை ஒன்றின் மட்டத்திற்குக் கீழ் இறங்கியிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக, கல்லோயா திட்டமே முதல் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டமாக உருவாக்கப்பட்டதும், அதுவே பின்னர் அம்பாறை மாவட்டம் உருவாவதற்குக் காரணம் என்பதையும் தனது சுயநலத்திற்காக கருணா மறந்து போனமை மோசடித்தனமானதாகும்.

இவை ஒருபுறமிருக்க 'இந்து' பேட்டியில் தற்பெருமை பேசுவதில் கருணா முன்னாள் உகண்டா சனாதிபதி இடியமீன் போன்று பேசியுள்ளமை ஒருவகையில் வேடிக்கையாகவும், ஒருபுறத்தில் வருத்தம் தருவதாகவும் உள்ளது. ஏனெனில், அவரது பேட்டியில் ஒருபுறத்தில் தற்பெருமையும், மறுபுறத்தில் முரண்பாடும் காணப்படுகிறது.

உகண்டாவின் சனாதிபதியாகவும் சர்வாதிகாரியாகவும் இருந்த இடியமீன் இராணுவத்தில் சிறிய பதவி வகித்த தன்னை உயர்பதவிக்குக் கொண்டுவந்த சனாதிபதியையே சதிப்புரட்சி மூலம் கவிழ்த்து ஆட்சிக்கு வந்தவர். பதவிக்கு வந்த பின்னர் தனக்குத் தானே இராணுவ உயர்பதவிகளையும், பதக்கங்களையும் சூட்டிக்கொண்டார். தன்னை ஒரு பீல்ட் மார்ஷலாகவும் பிரகடனப்படுத்திக்கொண்டார். தனது பத்து வயது மகனுக்கும் இராணுவ பதக்கங்களையும், பட்டங்களைச் சூட்டினார். பதவிகளையும் வழங்கினார்.

இதை ஒத்தாகவே உள்ளது விடுதலைப் புலிகளுக்கு தாமே இராணுவ யுத்திகளைக் கூறியதாகவும் இராணுவ தொழில்நுட்பத்தைப் போதித்ததாகவும், புலிகளின் இராணுவ வெற்றிகள் யாவும்தானே ஈட்டியதாகவும் கருணா கூறிக்கொள்வதும். தானே புலிகளின் பலம் எனவும், தான் இல்லாது போனால், விடுதலைப் புலிகளால் மரபுவழிச் சமர்களில் ஈடுபட முடியாது என்ற கூற்றுக்களுமாகும்.

ஆனால் கருணாவின் கூற்றுக்களில் உள்ள முரண்பாடு என்னவெனில், தமக்கே எல்லாம் தெரியும் என்ற கர்வம் பிடித்ததாக அவர் கூறும் யாழ்ப்பாணக்காரருக்குத் தானே எல்லாம் சொல்லிக்கொடுத்தது என்பதுதான். அதாவது எல்லாம் தெரியும் என்பவர்கள் கருணா கூறியதை ஏற்றார்கள் என்பதுதான்.

சுருக்கமாகக் கூறுவதானால் கடந்த இருவார காலத்திற்குள்ளேயே கருணா ஏன் செய்தார்? எதற்காக செய்தார் என்பவை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டவை ஆகியுள்ளன. கருணாவின் தற்பெருமையும், தவறான மதிப்பீடுகளும் தமிழ்த் தேசியத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான சக்திகளின் நீண்டதும், தொடர்ச்சியானதுமான செயற்பாடுகளும் கருணாவின் தற்போதைய நடவடிக்கைகளுக்குக் காரணமாகும்.

ஆனால், கருணாவிற்கு ஒன்றைக் கூறிக்கொள்ள வேண்டியதாயுள்ளது. அதாவது, இடியமீன் போன்ற தற்பெருமை பேசுகின்றவர்களும், தமது தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும் நீண்டகாலத்திற்கு ஆட்சியதிகாரத்திலோ, பொறுப்புக்களிலோ நிலைத்து நின்றதில்லை தமது இறுதிக் காலங்களைத் தமது மண்ணில் கழித்ததுமில்லை.

நன்றி – ஈழநாதம்

## தமிழீழம் எங்கள் உயிர்மூச்சு



தமிழீழ மக்கள் 17,700ற்கு மேற்பட்ட மாவீரர்களைக் கொடுத்து, இவர்கள் மட்டக்களப்பிற்கான போரையோ அன்றி யாழ்ப்பாணத்திற்கான போரையோ நடத்தவில்லை. அவர்கள் தமிழீழத்திற்கான போரையே நடத்தினார்கள்.

தமிழீழத்தை, மட்டக்களப்பு என்றோ, யாழ்ப்பாணம் என்றோ கூறு போடுவதையும், தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதையும் நான் எக் காலத்திலும் ஒப்புக் கொள்ளமாட்டேன். தமிழீழ மக்கள் தங்கள் கடைசி மூச்சிருக்கும்வரை, தமிழீழக் கொள்கைக்காகவே வாழ்வார்கள்.

அன்று வி.நல்லையா என்னும் பாராளுமன்ற உறுப்பினர், முதன் முதலாக மட்டக்களப்பு என்னும் பிரதேச வாதத்தை முன் வைத்தார். அதனால் அவருக்கு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

அதன் பின்னர் A.w.தேவநாயகம் என்னும் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு என்னும் பிரதேச வாதத்தைத் தொடர்ந்தார். அதனால் அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

பின்னர் இராசன். செல்வநாயகம் என்னும் அரசியல் அதிகாரி, தனது உயர் பதவிக்காகப் பிரதேச வாதத்தைத் தொடர்ந்தார்.

அதைத் தொடர்ந்து செ.இராசதுரை வடக்கே காங்கேசன் துறை தொடக்கம் தெற்கே திருக்கோவில் வரை நமது தாயகம் என்று தொடக்க காலத்தில் முழங்கியவர், கடைசியில் மட்டக்களப்பு என்னும் பிரதேச வாதத்தை முன் வைத்தார். அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து மந்திரிப் பதவி கிடைத்தது.

மட்டக்களப்பு பிரதேசவாதம் அத்துடன் நின்று போகவில்லை. அதற்கு முண்டு கொடுத்துத் தோளில் தூக்கத் தமிழ்த் துரோகிகள் வந்துகொண்டே இருக்கிறார்கள்.

ஆனால் தமிழீழப் பெருநெருப்பில் பிரதேசவாதம் எரிந்து சாம்பலாகி நெடுங்காலம் ஆகிவிட்டது.

இனிச் சாம்பலுக்கு உயிர் கொடுக்க முடியாது.

- தமிழீழமே தமிழர் தாகம் -

உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன்


# நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,
V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு வாக்காளர்களுக்கு முகமாலை இராணுவ சோதனை நிலையத்தில் 61 வாக்களிப்பு நிலையங்கள்

(21.03.04)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள முகமாலை இராணுவச் சோதனை நிலையங்களில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு, கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சில முடிவுகளை அறிவித்துள்ளார். இதற்கமைய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்களிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் உள்ளடக்கப்படும் நிலையில் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுகளிலுள்ள 63000 வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணச் செயலகத்தில் உயர்மட்டச் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா, யாழ். மாவட்ட பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பந்துல, யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு, மேற்கொள்ளப்படட தீர்மானங்கள் வருமாறு, முகமாலை இராணுவச் சோதனை நிலையத்தில் 30 வாக்களிப்பு நிலையங்களும், அதற்கு வடக்கே சுமார் 50 மீற்றர் தூரத்திலுள்ள மற்றைய சோதனை நிலையத்தில் 31 வாக்களிப்பு நிலையங்களுமென 61 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

அன்றைய தினம் ஏ-9 வீதியூடாக வழமையான போக்குவரத்துகள் நடைபெறமாட்டாது. கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த வாக்காளர்கள் காலை 7 மணிமுதல் வாக்களிப்பு நிலையங்களுக்கு விசேட போக்குவரத்து மூலம் வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வரும் வாக்காளர்கள் அடையாள அட்டையைத் தவிர வேறு எந்தவொரு பொருளையும் எடுத்து வரக்கூடாது. சோதனை நிலையங்களில் இவர்கள் சோதனையிடப்படமாட்டார்கள். இராணுவத்தினரும் அப்பகுதியில் நிறுத்தப்படமாட்டார்கள்.

வாக்காளர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சிற்றுண்டி மற்றும் தேநீர் இலவசமாக வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சியிலிருந்து வாக்காளர்களை ஏற்றி வருவதற்காக விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான முழுப்பொறுப்பையும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். இதற்காக 5 மில்லியன் ரூபா தேவையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் தேர்தல் தினத்திற்கு முதல்நாளே குடாநாட்டில் வந்து தங்கிநின்று வாக்களிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. காலை 7 மணிமுதல் இவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்.தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளே தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவோர் அடையாள அட்டையைத் தவிர வேறு எந்தப் பொருட்களையும் எடுத்து வரக்கூடாதெனவும், அவ்வாறு கொண்டு வரும் பொருட்கள் உள்ளே கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, பளைப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் நாகர் கோயில் வீதியூடாக மேற்படி வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவதற்கு அனுமதிக்க வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை இராணுவத்தினர் நிராகரித்து விட்டனர்.

# வவுனியாவில் தஞ்சமடைந்த பெண்கள் புனர்வாழ்வுக் கழகத்தால் உறவினரிடம் ஒப்படைப்பு

(21.03.04)

தமிழகத்தில் அகதி முகாமில் தங்கியிருந்தபோது, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றப்பட்டு அழைத்துவரப்பட்ட போது தப்பிச்சென்று வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் தஞ்சம் புகுந்த இருபது பெண்களில் இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பினரால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். மிகுதி 18 பேரும் அவர்களின் உறவினர்களிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு, ஜெகன் மாலா (27), கிறிஸ்டோபர் ஜென்சிராணி (22), சிவலிங்கம் பாக்கியம் (27), வேலுசாமி லதா (20), அருளானந்தம் லலிதா (22). மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டோர், இராமஜெயம் தயாணி (22), சூரியராசா புஸ்பராணி (42), இராமச்சந்திரன் சுகந்தி (18), ஜோசெப் நந்தினி (22), ஜீவரத்தினம் சுசி (25), கருப்பையா அமராவதி (22). அகதிகளுக்கான ஐ.நா.பிரதிநிதி ஜெலெநா வரென்காவிடம் ஒப்படைக்கப்பட்டோர், தங்கவேல் தேவி (35), நடராஜ் வாணி (20), நடராஜ் மலர் (39), முருகையன் நாகேஸ்வரி (20), சண்முகநாதன் கலைச்செல்வி (25), தேவராஜ் சிந்தாமணி (33), மாரிமுத்து சரஸ்வதி (47).


**Luxmy Photo & Transport**

புகைப்படத் தேவைகளுக்கும் சுற்றுலாப் பயணங்களுக்கும்

தொடர்புகளுக்கு:




Pub-06

**Ashha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:

Photo Bala

87 Rue de Clignancourt, 75018 Paris

Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**பிரான்சில் விசா இல்லையா?**

**கவலை வேண்டாம்!**

ஓ.ஃ.ப்ரா, கொமிசன், நீஅப்பீல் இலவசம்*

உங்கள் கேசுக்குரிய அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கான தொடர்புகள் இல்லையா? அதையும் செய்து தரலாம்!

தமிழில் எழுதித் தரப்படும் கேஸ், 48 மணிநேரத்தில் பிரெஞ்சில் மொழிபெயர்ப்புச் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: தியாகராஜா மாஸ்ரர் 06 09 36 71 89

* மொழிபெயர்ப்பைத் தவிர

Pub. Fr.05



ஈழமுரசு POOBALAM WEEKLY

"POOBALAM" JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு

ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707,
3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**

இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant **Tharsana's**

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

Restaurant **Prassah** Gastronomiques Indiennes



**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**



இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

**தர்ஷனாஸ் உணவகம்**
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

**பிரஷா உணவகம்**
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126 Pub

# தேசத்தின் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கு தேர்தல் களமொன்றில் தமிழர் இணைந்துள்ளார்கள்

## - யாழ் மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர்




(21.03.04)

எமது தமிழ் தேசத்தின் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கு தேர்தல் களமொன்றில் தமிழ் இணைந்துள்ளார்கள். இதில் பெண்களின் பங்கு முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது என விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார். நேற்று பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் பெண்கள் எழுச்சிச் சங்கம நிகழ்வும் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அங்கு கலந்து கொண்டு உரைநிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கு ஒரு விடுதலை அமைப்பிற்கு குறிப்பிட்ட நிலம் வேண்டும். அந்த நிலத்தில் நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எந்தச் சக்தியையும் எதிர் கொள்ளக் கூடிய பலம் ஒன்று அந்த விடுதலை அமைப்புக்கு வேண்டும். எமது ஒற்றுமையை சர்வதேசத்திற்கு இந்தத் தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும். தீச்சுவாலைச் சண்டையில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காரணத்தால் தான் இன்று அமைதிச் சூழல் ஒன்று நிலவி தமிழ் மக்களின் வரலாற்றில் பெரும் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் வெற்றியை தீர்மானிக்கும் களமாக இந்தத் தேர்தல் அமையவுள்ளது. சர்வதேசத்தின் முன் தமிழ் மக்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் பலம் என்பது இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்களே அரசியல் வெற்றியைத் தீர்மானிக்கவேண்டும் எனவும் இளம்பரிதி தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் போட்டியிலிருந்து விலகினார் ஐ.தே.மு. வேட்பாளர் !

(21.03.04)

திருமலை மாவட்டத்தில், ஐக்கிய தேசிய முன்னணியினால் நிறுத்தப்பட்ட ஏழு வேட்பாளர்களில், ஒரேயொரு தமிழ் வேட்பாளரான திரு.நாகராஜா சாம்பசிவமூர்த்தி, தனது வேட்புமனுவை விலக்கிக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், தனது உடல் சுகவீனம் காரணமாகவே தனது வேட்புமனுவை விலக்கிக்கொண்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

திருமலையில் போட்டியிடும் ஏனைய ஆறு ஐ.தே.மு. வேட்பாளர்களும் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.மு.யுடன் இணைந்து போட்டியிடுவதால், தனியாக முஸ்லிம்கள் எவரையும் ஐ.தே.மு. இங்கே நிறுத்தவில்லை. தற்போதைய நிலவரப்படி, பெரும்பான்மைக் கட்சிகளின் சார்பில் இன்னும் ஒரேயொரு தமிழரே திருமலையில் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். சந்திரிகாவின் ஐ.தே.ம.முன்னணியின் சார்பில், திரு.கந்தையா கிருபைராஜா என்பவர் மட்டுமே திருமலையில் தமிழினத்தை எதிர்த்துப் போட்டியிடும் ஒரேயொரு வேட்பாளர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# அன்னை பூபதியின் நினைவுநாள் ஆரம்பம் ஜெயந்தன் படையணியின் நிகழ்வில் போராளிகள் பொதுமக்கள் பங்கேற்பு

(21.03.04)

தியாகி அன்னைபூபதியின் 16ம் ஆண்டு நினைவு நாளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் இன்று தாயகம் தழுவிய ரீதியில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. தியாகி அன்னை பூபதி 1988ம் ஆண்டு இதேநாள் இந்திய வல்லாதிக்கத்திடம் இரண்டம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு அமிர்தகழி சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்நிலையில் அன்னையின் கோரிக்கைகள் இந்திய வல்லாதிக்கத்தால் அலட்சியப்படுத்தப்பட்ட நிலையில் 19.04.1988 அன்று அன்னை பூபதி தியாகச் சாவடைந்தார்.

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவு நாளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் கடந்த 19ம் திகதி தமிழீழத் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தாயகமெங்கும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னையின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளதுடன் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு தாயகம் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. இதேவேளை புலம்பெயர்ந்த நாடுகளிலும் இந்த நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவு நாளின் ஆரம்பநாள் நிகழ்வுகள் உடையார்கட்டு மூங்கிலாற்றில் அமைந்துள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் ஜங்கரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், பொது ஈகைச்சுடரினை ஜெயந்தன் படையணி அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஜீ... குமார் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை ஜெயந்தன் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் எழுநிலவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகைச் சுடரினை மாவீரரின் தாயார் சரஸ்வதி ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தார். நினைவுரையினை ஜெயந்தன் படையணிப் போராளிகளான இராசு, வர்மன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் பொதுமக்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

### நெதர்லாந்து இராஜதந்திரிகள் - தமிழ்ச்செல்வன் பேச்சு

(22.03.04)

நெதர்லாந்தின் இராஜதந்திரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில், நெதர்லாந்து தூதுவராலயத்தின் முதன்மைச் செயலாளர் ஜான் கியூஸ்க்கன் முரண்பாட்டு ஆய்வுகளுக்கான பேராசிரியர் ஜோர் எப். ப்ரேக்ஸ் மற்றும் இனமுரண்பாட்டு கற்கை நெறிக்கான பேராசிரியர் கலாநிதி கிறீஸ் வான் தர் போர்க் ஆகியோர் கலந்துகொண்டனர். ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இச்சந்திப்பில் இன்றைய அரசியல் சூழ்நிலை, தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

PHONE 2000




2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle

85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers

19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

PHONE 2000
4, Rue de Cail, 75010 Paris.
☎: 01 40 05 93 28
Fax: 01 40 05 97 03
M°: La Chapelle *ou* Gare du Nord

PHONE 2000 Informatique
87, Rue des Pyrénées,
75020 Paris.
M°: Maraîchers
Tél: 06 20 21 11 11

SFR

PHONE 2000
5, Bld. davout,
75020 Paris.
☎: 01 43 71 40 30
Fax: 01 40 09 01 31
Mobile: 06 17 17 28 17
M°: Porte de Vincennes

Téléphone Direct சிவா ☎: 06 20 21 11 11